இலங்கையின்

அதிகாரப் பகிர்வு யோசனைகள்

கருத்துரைகளும், கண்ணோட்டங்களும்



தொகுப்பாசிரியர்

ரா. நித்தியானந்தன்.

இலங்கையின்

அதிகாரப் பகிர்வு யோசனைகள்

கருத்துரைகளும், கண்ணோட்டங்களும்

தொகுப்பு
ரா. நித்தியானந்தன்

வெளியீடு
H. I. E.
(உயர்கல்வி நிறுவனம்)
239, திருகோணமலை வீதி,
கண்டி.

Name of the Book : Proposals for Devolution of Power in Sri Lanka
Ideas and Views

Edited by : R. Nithiyanandan

Published by : Higher Education Centre
239, Trincomalee Street
Kandy

Published : P. Sivasubramaniam

First Published : December, 1997

Size of the book : 22 x 14 cm.

Pages : 120

Design & Print : *Latha Impress,*
302, D. S. Senanayake Veediya
Kandy.
Tel: 08 - 224361 Fax:. 074 - 470803

கட்டுரை ஆசிரியர்கள்

1. திரு. எம். ஓ. ஏ. டி. சொய்ஸா

   B.A (Hons) இலங்கை; M.A. தஸ்மேனியர் பல்கலைக்கழகம் அரசறிவியல் துறை தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகம்

2. பேராசிரியர் வை. ஆர். அமரசிங்ஹ

   B.A. (Hons) Ccy.; B.Phil (York); Ph.D (Lon)

   அரசறிவியல் பகுதிநேர பேராசிரியர், ஹெர்பர்ட் வில்லியம் ஸ்மித் கல்லூரி, நியூயோர்க் ஐக்கிய அமெரிக்கா

3. பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா

   B.A. (Hons) இலங்கை, M.A நியு புரூன்ஸ்விக் Ph.D. இலங்கைக் புல் ப்ரைட் (Full Bright) சிரேஷ்ட ஆய்வக உறுப்பினர் 1992/93

4. பேராசிரியர். ஏ. ஜே. வில்சன்

   பேராசிரியர் நியூ புரூன்ஸ்விக் பல்கலைக்கழகம் பிரடர்க்ஷன், கனடா

5. கலாநிதி. நவரட்ண பண்டார

   B.A (Hons), M.A இலங்கை, D.phill யோர்க்

6. திரு சுமனசிரி லியனகே

   சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை. பேராதனைப் பல்கலைக்கழகம்.

7. திரு ஆனந்த வெலிஹேன

   B.A. (Hons) இலங்கை; M.A. (I.R)

   விரிவுரையாளர், அரசறிவியற் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

8. திரு. ரா. நித்தியானந்தன்

   B.A. (Hons) இலங்கை, துணை விரிவுரையாளர், அரசறிவியற் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

9. கலாநிதி. எஸ். எச். ஹஸ்புல்லா

   B.A. (Hons) இலங்கை- M.A(பேராதனை) Ph. D. பிரிட்டிஷ் கொலம்பியா- சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

மொழிபெயர்ப்பாளர்கள் :-

1. பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா
2. திரு. சைபுதீன்

   விரிவுரையாளர், அரசறிவியற்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

3. திரு. ரா. நித்தியானந்தன்
4. திரு. எஸ். ரவிச்சந்திரகுமார்

   அதிபர், போப்பிடிய தமிழ் வித்தியாலயம், ரங்கல.

Authors of the Articles

1. Nation, Nationality and the problem of Nation building in Sri Lanka

   M. O. A. De. Zoysa - B. A. (Hons). Sri Lanka M. A. (University of Tasmania) Head/Dept. of Political Science University of Peradeniya.

2. The History of the Devolution of Power and it's issues

   Y. R. Amarasinghe - B. A. (Cey)., B. Phill (York), Ph. D. (Lond) Associate Professor, Visiting Professor in Politics at Hobart and William Smith Colleges, Newyork U. S. A.

3. Merits and De Merits of Devolution Proposals of the P. A. Government

   Ambalavanar Sivarajah - B. A. (Hon) Cey, M. A. (New Brunswick) Ph. D. (Cey). Associate Professor in Political Science, Fulbright Senior Recearch Fellow 92/93.

4. Resolution of the Ethnic Conflict through and Assymmettrical Federalism within a United Sri Lanka

   A. J. Wilson - Professor - New Bruns wick University Frederiction, Canada.

5. Why Devolution is important in Sri Lanka

   A. M. Nawaratna Bandara - B. A., M. A. (Peradeniya) D. Phill. (York) Management of Ethnic Secessionist conflict. The big neighbour syndrome - (Author of the Book). Senior Lecturer Dept. of Political Science. University of Peradeniya.

6. Towards the compromise solution

   Sumanasiri Liyanage - Senior Lecturer Dept. of Economic University of Peradeniya.

7. Strategies for Ethnic Conflict Resolution 1991 August - 1995 August.

   Ananda Welihena - B. A. (Hons), M. A. (I. R.), Lecturer - Dept. of Political Science - University of Peradeniya.

8. Devolution and it's reality of different stand points.

   R. Nithyanandan - B. A. (Hons). Asst. Lecturer - Dept. of Political Science University of Peradeniya.

9. Devolution Power and aspiration of Muslims in Sri Lanka.

   S. H. Hasbullah - B. A. (Hons) Cey., M. A. Peradeniya, Ph. D. British Colombia. Senior Lecturer Dept. of Geography. University of Peradeniya.

பொருளடக்கம்

பதிப்பாசிரியர் உரை :-

நான் நினைக்கின்றேன் அதிகாரப்பரவலாக்கம் பற்றி, தமிழ்மொழியில் வெளிவருகின்ற முதல்நூல் இந்த "இலங்கையின் அதிகாரப் பரவலாக்கங்களும் கண்ணோட்டங்களும் கருத்துரைகளும்" என்ற கட்டுரைத் தொகுப்பாகும். இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் ஆர்வம் கொண்டுள்ள அனைவருக்கும் இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். இத் தொகுப்பின் அனைத்து கட்டுரைகளும் பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட மற்றும் விரிவுரையாளர்களால் ஆக்கப்பட்டுள்ளன. இதில் இன்னுமொரு சிறப்பம்சம் இதன் கட்டுரையாளர்களில் திரு. சுமணசிரி லியனகேயைத் தவிர்ந்த ஏனைய அனைத்து கட்டுரையாளர்களும் அரசியல் விஞ்ஞான துறையைச் சார்ந்தவர்கள். எனவே இது நல்ல அரசியல் சிந்தனைகளின் தொகுப்பாக காணப்படுகின்றது.

எனது நண்பனும் பேராதனைப் பல்கலைக்கழக துணை விரிவுரையாளருமான திரு. இரா. நித்தியானந்தன், இலங்கை இனப்பிரச்சினை தீர வேண்டும் என்பதில் ஆழமான பற்று கொண்டவர். எனவே அவர் பெருமுயற்சிகொண்டு இந்நூலை தொகுத்து வழங்கியுள்ளார். அத்துடன் அவர் கட்டுரையாளராகவும் தொகுப்பாசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் இந்நூலுக்காற்றிய பணி மிகவும் சிரமமானது. எனவே இலங்கை பாடைப்பாளர்கள் மத்தியில் அவருக்கென்று தனியானதோர் இடமுண்டு. அவருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்துடன் இந்நூலுக்கான கட்டுரையாசிரியர்கள் மொழிபெயர்ப்பாளர்கள் அனைவர்க்கும் எனது நன்றியை நினைவு கூர்கிறேன்.

இந்நூற்தொகுப்பின் வெற்றி வாசகர்களாகிய உங்கள் கரங்களில் உள்ளது. இந்நூலை வாசிப்பதுடன் இந்நூல் தொடர்பான கருத்துக்களையும் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

நன்றி,

பி. சிவசுப்ரமணியம்
பதிப்பாசிரியர்

* அணிந்துரை

ஜனாப். எம். எல். ஏ. காதர்

எம். ஏ. அவுஸ்திரேலியா தேசிய பல்கலைக்கழகம் தஸ்மேனியா

துணைவேந்தர்

தென்கிழக்கு பல்கலைக்கழகம் – அட்டாளைச்சேனை

அதிகார பரவலாக்கல் யோசனைகள் – கருத்துக்களும் கண்ணோட்டங்களும் என்ற இந்நூல் காலத்தின் தேவையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது, என்பதை இக்கட்டுரைகளை வாசிக்கும் எவரும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இந்நூலில் வெளிவந்துள்ள கட்டுரைகளை எழுத வந்தவர்கள் தத்தம் துறைகளில் அறிவும் ஆற்றலும் அனுபவமும் கொண்டவர்கள். இவர்கள் தன்னிச்சையாகவோ அல்லது மேலோட்டமாகவோ கருத்துக்களை கூறாமல் முறையாகவும் ஆய்வு ரீதியாகவும் தாம் கொண்ட கருத்துக்களை மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் தொகுத்துத் தந்துள்ளார்களென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நூல் இன்றைய தேசிய ரீதியான இனப்பிரச்சினையினை மையமாகக் கொண்டு அதற்குத் தீர்வினை வழங்கத்தக்க பல்வேறு ஆலோசனைகளை நாட்டின் பல்வேறு மட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்கு தம் கருத்துக்களை எடுத்துக் கூறுவதன் மூலம் பாரித்ததொரு சேவையினை ஆற்ற வந்துள்ளார்கள் என்பது எனது கணிப்பாகும். இங்கு கட்டுரை எழுதிய ஆசிரியர்களோடு நீண்டகால நெருங்கிய தொடர்பு எனக்குண்டு. அவர்கள் இலங்கையின் தேசிய பிரச்சினைகளோடு நெருங்கிய தொடர்பும் மானசீகமான உணர்வும் கொண்டவர்கள் என்பதை நான் நன்கறிவேன். இவர்கள் பல்வேறு கோணங்களில் நின்று இப்பிரச்சினைகளை நுணிகி ஆராய்ந்து சிறப்புப் பெற்றவர்கள். இதுவும் இக்கட்டுரை இங்கு சிறப்புற அமைவதற்கு முக்கியமான காரணமென நான் எண்ணுகிறேன்.

இக்கட்டுரை தொகுப்பினை இங்கு வெளியிடுவதற்கு அடிப்படையான பல காரணங்களை எடுத்துக் கூறலாம். முக்கியமாக தொடர்ச்சியாக தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் அனுபவித்து வரும் இன்னல்களையும் அவர்கள் வாழ்வில் குறுக்கிட்டு நிற்கும் அதற்கான அடிப்படை காரணங்களையும் அவற்றிற்கு தீர்வாக வழங்கக்கூடிய யோசனைகளையும் ஒளிவு மறைவின்றி நேர்மையோடு ஓர்

---

* Forward by Mr. M. C. A. Cadar (Vice Chancellor)
South East University, Attalaichenai.

ஒழுங்குக்குட்படுத்தி அதை மக்களுக்கு தெரிவிக்க வேண்டுமென்பதே இந்நூல் எழுதப்பட்டதன் மிக முக்கியமான நோக்கமென குறிப்பிடலாம்.

மறுபுறம் சமுதாய அபிப்பிராயத்தை வெளிக்கிளறி அவற்றுக்குத் தேவையான சமூக சிந்தனைகளையும் அவற்றை நெறிப்படுத்தத்தக்க தகவல்களையும் புள்ளி விபரங்களையும் ஒரு குறித்த ஒழுங்கில் மக்களின் பார்வையில் விசாலப்படுத்தி பிரச்சினைகளையும் அனுக வேண்டுமென்பது இதன் அடுத்த முக்கிய நோக்கமாகும்.

விஷேடமாக இதுகால வரையும் எடுத்து வரப்பட்ட பல்வேறு அரசியல் தீர்வு நடவடிக்கைகள் தடைபடுவதற்கு என்னென்ன காரணிகள் காணப்பட்டனவோ அவற்றை எடுத்துக்கூறி தடைப்படுத்துவதற்கான காரணிகளை இனங்கண்டு அவற்றினை மக்கள் சிந்தனைக்கு முன்வைப்பது இன்னுமொரு காரணியாக விளங்கியிருக்கிறது.

உண்மையிலேயே இன்று பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்றதொரு பரிகாரமாக அமைந்துள்ளது. இத்தீர்வு யோசனைகளை நடுநிலையோடு அறிவியல் ரீதியாக சிந்திக்கும் எவரும் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை இக்கட்டுரை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் வலியுறுத்தி நிற்கின்றனர்.

இன்று, இலங்கையின் முன்னேற்றத்துக்கும் விருத்திக்கும் பெரும் சாபக்கேடாக இருப்பது இலங்கையின் இனப்பிரச்சினையே. எனவே இப்பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் இந்நாட்டின் சுபீட்சத்துக்கும் எழுச்சிக்கும் நாம் எல்லோரும் துணை நிற்கலாம் என்பதை இலங்கை மக்களனைவரும் தம் நினைவில் கொள்ளவேண்டும். எனவே, சிறுபான்மையினரின் பிரச்சினைகளின் தீர்வுக்குத் தடையாக இருப்பவர்கள் இந்நாட்டின் வளர்ச்சிக்கும் சபீட்சத்துக்கும் தடையாக இருக்கின்றனரென்பதை நான் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

உண்மையாக இலங்கை இன்று அதியுயர்ந்த பொருளாதார வளர்ச்சியினைக் கண்டு ஏனைய மூன்றாம் உலக நாடுகள் பெருமை கொள்ளுமளவுக்கு முன்னேற்றகரமாக இருந்திருக்க வேண்டும். 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த போது எமது நாடானது இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, ஏனைய தென்கிழக்காசிய நாடுகளை விட பன்மடங்கு

சமூக வளங்களையும், பல்வேறு திறமைகளையும், தொழில் நுட்பங்களையும் கொண்டிருந்தது. ஆனால் இலங்கை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த பல தவறான அரச கொள்கைகள், தலைமைத்துவ சிந்தனைப் போக்குகள் இந்நாட்டை இன்று மேற்குறித்த நாடுகளை விட பின்னடையச் செய்துவிட்டன. இவற்றில் மிக முக்கியமான ஒன்று இந்நாட்டில் மிக எளிதாக தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த இன முரண்பாட்டை உடன் முடிவுக்குக் கொண்டு வர முடியாமற் போனமையாகும். இப்பிரச்சினை காலத்தால் தீர்த்து வைக்கப்படாததால் இந்நாடு பின் வாங்கியது, வன்முறை தலைதூக்கியது. பொருளாதார தேசிய, விதேசிய முயற்சியாளர்கள் இந்நாட்டில் முதலிடுவதற்கு தயக்கம் காட்டினர். அரசியற் குழப்பமும் குளறுபடியும் ஏற்பட்டது. இனப்பிரச்சினை அரசின் பிரச்சினையாகியது.

எனவே இனிமேலாவது இந்நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் இலங்கையின் இனப்பிரச்சினை முற்றாக இலங்கையிலிருந்து களையப்படவேண்டும். எமது நாட்டின் தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலேயர் மற்றும் எல்லா சிறுபான்மை இனத்தவர்களும் இந்நாட்டில் சுதந்திரமான பிரசைகளாக வாழ்வதற்கான அரச ஒழுங்குகள் நிர்வாக அமைப்புகள் காணப்படவேண்டும். இதனை ஆக்கி தருவதையே இன்று பொ. ஐ. மு. அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு பொதி நோக்கமாக கொண்டுள்ளது என்றால் மிகையாகாது. இத்தீர்வு பொதி தரும் இந்த அரிய சந்தர்ப்பத்தை இலங்கையிலுள்ள அரசியலாளர்கள், புத்தி ஜீவிகள் இதனை சக்தி படுத்த தவறுவார்களேயானால் அவர்கள் இந்நாட்டின் விமோசனத்திற்கு தடையாக இருந்தவர்கள் என்ற பலியை சுமக்க வேண்டியவர்களாகிவிடுவர். இலங்கையே உலகில் அரச சேம நலத் திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்திய நாடு என்று பெயர் பெற்றுள்ளது. அதே போன்று இத்தீர்வுத் திட்டம் உயர்ந்த ஓர் ஒழுங்கின் கீழ்க் கொண்டுவரப்பட்டு பல்லின சமூகங்கள் சமமாக வாழ்வதற்கு முன்மாதிரியான அமைப்பொன்றினை உருவாக்கிய நாடு என்ற பெருமையை இலங்கை பெறவேண்டும். இதற்கு இத்தீர்வு பொதி வழிகாட்டும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

இக்கட்டுரையை எழுதிய சகல ஆசிரியர்களுமே ஒன்றுபட்டு நின்று இக்கருத்தையே வலியுறுத்துகிறார்களென்பதை நான் காண்கின்றேன். திரு. M. O. A. de சொய்ஸா அவர்கள், தேசத்தைக் கட்டியெழுப்புவதில் இலங்கை என்னவிதமான பிரச்சினையை எதிர்நோக்கியதென்பதை மிகத்

தெளிவாகவும் ஆழமாகவும் ஆய்வுபடுத்தியுள்ளார். இக்கட்டுரையை வாசிப்பவர்களுக்கு இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான சிறந்தவொரு பின்னணியினை இக்கட்டுரை வழங்குகிறது. "இலங்கை அதிகார பரவலாக்களுக்கான வரலாறும் அது எதிர்நோக்கிய பிரச்சினையும்" என்ற கட்டுரையை எழுதிய பேராசிரியர் Y. R. அமரசிங்ஹ அவர்கள் எவ்வாறு இலங்கையின் இனப்பிரச்சினை 26க்குப் பின் படிப்படியாக வளர்ச்சி பெற்றதென்றும் அவற்றுக்கான தீர்வுகளின் தடைகளையும் அனுபவங்களையும் மிக சிறப்பான முறையில் சுட்டிக்காட்டி தமது கட்டுரையை நிறைவு செய்கிறார். பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா அவர்கள் இத்தீர்வு பொதியிலிருக்கின்ற குறைநிறைகளை சீரிய முறையில் ஆய்வுபடுத்தியிருக்கிறார். பேராசிரியர் A. J. வில்சன் அவர்கள் ஒரு சமஷ்டி முறையின் மூலமாகவே இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமென வலியுறுத்துகிறார். "ஏன் இலங்கைக்கு அதிகார பரவலாக்கல் அவசியம்?" என்ற கட்டுரை மூலமாக கலாநிதி A. M. நவரட்ண பண்டார இலங்கை தமிழரது கோரிக்கைகளை வரலாற்று பூர்வமாக எடுத்துக் கூறி சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமேற்பட்ட் முரண்பாட்டை விளக்கி தீர்வுப் பொதிக்கான அவசியத்தை கூறுகிறார். பொருளியல் சிரேஷ்ட விரிவுரையாளராகிய திரு. சுமனசிரி லியனகே அவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இன்று நடைமுறை ரீதியான முரண்பாடுகளை மிக ஆழமாக ஆய்வு செய்திருக்கிறார். விரிவுரையாளர் திரு. ஆனந்த வெலிஹேன என்பவர் முரண்பாட்டுத் தீர்வு உபாயங்களென்ற கட்டுரையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு பல அறிக்கைகளை ஆழமாக ஆய்வுபடுத்தி தமது விமர்சனங்களையும் முன்வைக்கிறார். புவியியற்துறை விரிவுரையாளராகிய கலாநிதி S. H. அஸ்புல்லா அவர்கள் இலங்கையின் அதிகார பரவலாக்களில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் பற்றி விரிவான முறையில் தேசிய ரீதியாக ஆய்வுபடுத்தியிருக்கிறார். துணை விரிவுரையாளரர்கிய திரு. R. நித்தியானந்தன் அவர்கள் அதிகார பரவலாக்கள் யோசனைகள் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் சமூகம் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான மாக்சிய கருத்துக்கள் இவ் யோசனைக்கு எவ்வாறு முன்மாதிரியாக அமையும் என்பதை தெளிவுப்படுத்தியிருக்கிறார்.

இக்கட்டுரைகள் எல்லாமே, எல்லோரும் ஏற்றுக்கொண்ட விவகாரத்தை நடுநிலையோடு அறிவியல் ரீதியாக ஆராய்கின்றன. இவற்றின் மூலம் பெறப்படும் கருத்துக்கள் தெளிவானதொரு சிந்தனையினை மக்கள் மத்தியில் எழுப்பி இத்தீர்வுத் திட்டம் வெற்றி பெறுவதற்கு ஏதோ ஒரு

வகையில் வழிகாட்டுமென நான் நம்புகிறேன். இந்நோக்கத்தினை இந்நூல் அடைந்து கொள்ளுமானால் இவ் ஆசிரியர்களனைவரும் நிச்சயம் திருப்தி கண்டவர்களாவர்.

நான் அறிந்த வரையில் தமிழ் மொழியில் அதிகார பரவல் தொடர்பாக அதிலும் உயர்ந்த கல்வி நிறுவனத்தைச் சார்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் கட்டுரைகளடங்கிய ஒரு தொகுப்பு நூல் வெளிவருவது இதுவே முதற்தடவை. இவ்வாறான நூலை தொகுத்து வழங்குவது மிகவும் கடினமான பணி என்பதையும் நானறிவேன். ஆனால் இந்நாட்டின் சுபீட்சத்துக்கும் முன்னேற்றத்திற்கும் நாம் எல்லோரும் எம்மால் இயன்ற பங்களிப்பினை வழங்கி இத்தீர்வு திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு ஒத்துழைப்பை வழங்குவோமாயின் இச்சந்தர்ப்பத்தில் நாமே வரலாற்றில் பொறிக்கப்பட்ட மனிதர்களாவோம்.

முன்னுரையும் அறிமுகமும்

சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தினை இதுவரை இருந்த அரசுகள் திருப்தி செய்ய முற்பட்டமையாலேயே, இலங்கை இனப்பிரச்சினை இந்தளவுக்கு உக்கிரமடைந்துள்ளதென ஒரு சாரார் குறை கூறி வருகின்றனர். மறுபுறம் தமிழ் இனவாதிகளின் நடத்தையே இந் நாட்டின் பிரிவினைக்கு இட்டுச் சென்றுவிட்டதென மற்றொரு சாரார் குறை கூறுகின்றனர். இவ்விருகூற்றுக்கள் எவ்வாறாயிருந்த போதிலும் இவற்றுக்கிடையிலே சமரச தீர்வொன்றினை நாடி, இலங்கை செல்லும் இத்தருணத்தில் அதிகார பரவல் தொடர்பாக பரவலாக பேசப்படுகின்றது. இது காலந்தாழ்ந்ததொரு விடயமாக இருந்த பொழுதிலும் இச்சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் இலங்கை நீண்டதொரு துயரத்துக்குள் வாழ்ந்து வருமென்பது மிகவும் யதார்த்தமானது. ஒரு புறம் இலங்கை, நாட்டை மீட்டெடுப்பதென்ற பேரில் இராணுவமயமாக்கலுக்குட்பட்டு இருக்கின்றது. இது எதிர்காலத்தில், பங்காளதேஷ், பாகிஸ்தான், இந்தோனேஷியா, கம்பூச்சியா போன்று இராணுவ ஆட்சிமுறைக்கு இலங்கையையும் கொண்டுசென்று விட்டு விடாதென்பது என்ன நிச்சயம்?

மறுபுறம் இதுவரை இல்லாத வகையில் ஜனநாயக உரிமைகளை பயன்படுத்திக் கொண்டு சரமாரியாக (சிங்கள கமிஷன் மூலமாக) இனவாதம் பரவலாகப் பேசப்படுகின்றது. வட பகுதி மக்கள் மாத்திரமல்லாமல் தென்பகுதி சிறுபான்மையின மக்களும் கூட பயம் கலந்த சந்தேகங்கொண்ட வாழ்க்கையையே வாழவேண்டியுள்ளது.

இன்று இலங்கை நீண்ட கால போரொன்றில் வாழ்கின்றது. இது இனங்களின் துயரமென்றவகையில் காட்சி தருகின்றது. நாளாந்தம் வகைதொகையற்ற வகையில் போராளிகள், அரச படை வீரர்கள் என்றவகையில் மனித வளம் இறந்துபடுவதும் காயப்படுவதும் இடையில் சிக்குண்ட பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் மரணிப்பதும் இன்னுமொரு பகுதியினர் அகதிகளாக வீடுவாசல், சொத்து, சுகம் சொந்தபந்தங்களை விட்டு நாடோடிகளாக திக்கு திசை தெரியாமல் அலைந்து திரிவதும், உலக நாடுகளுக்கு புகலிடம் தேடி ஓடுவதும் இந்த கோரயுத்தத்தின் வடிவங்களாகும். நாட்டின் யுத்த தளபாடங்களுக்கும், படைவீரர்களுக்கென்றும் நாளாந்தம் பல மில்லியன் ரூபாய்கள் இங்கு செலவாகின்றன. இதன் மறுபக்க விளைவாக வாழ்க்கை செலவு அதிகரிப்பு, நுகர்வு பொருட்களின் விலையேற்றமும் பொருட்களின் தட்டுப்பாடுகளும் வேலையற்றோர் பிரச்சினையும் முதலீட்டு பிரச்சினையும் முழு இலங்கையையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. இவற்றில் எல்லாம் அல்லல்படுவதும் இலங்கை மக்கள் தான். அதிலும் வறுமையில் வாழ்கின்ற சாதாரண மக்கள்தான். இக் கோரதுயரை வசதிபடைத்த தென்னிலங்கை உயர்குழாமினர் அரசியல்வாதிகள் வசதி படைத்த செல்வந்தர்கள் பல அரசியல் தலைவர்கள் பார்வையாளர் பகுதியிலிருந்து விமர்சிப்பவர்களாகவும் வெற்றுக் கருத்துக்களை

கூறுகின்றவர்களாகவும், சிலர் இச்சூழலுக்குற்சாகமூட்டுகின்றவர்களாக போரை வரவேற்கின்றவர்களாகக் காணப்படுகின்றனர்..

ஆனால் இந்த துயரமான சூழலிலும் கற்றோர் புத்திஜீவிகள் மனிதாபிமானமிக்கவர்கள் உண்மையான நாட்டுப்பற்றுள்ள பலர் இந்த நெருக்கடியான நிலையில் இருந்து இலங்கையை எவ்வாறு மீட்பது இப்பிரச்சனைக்கு எவ்வாறு விடிவு காண்பது என்று நாளொரு பொழுதும் கவலைப்பட்டு கொண்டுதான் "இருக்கின்றனர். அந்த வகையிலேயே இந்த நூலை உருவாக்கும் பணியினை நான் துவங்கினேன், இதன் விளைவு ஏதுவாக இருந்தபோதும் "அணில் சுமந்த மண் போல". எமது இப்பணி தொடர்கின்றது.....

எனவே முன்னைய அரசகள் வழங்கிய தமிழர்க்கான மொழி உரிமை போலல்லாது அதிகாரப் பரவலாக்கள் என்பது உண்மைதன்மை கொண்டதாக காணப்பட வேண்டும் என்பது உண்மைவிரும்பிகளின் மிகுந்த எதிர்பார்க்கையாகும். எனவே இன்று இலங்கையில் இடம் பெற்று வருகின்ற எரியுரும் இனப்பிரச்சனைக்கு, ஆயத போராட்டங்களுக்கு அப்பால் உண்மையான அதிகாரப் பகிர்வு ஒன்றே தீர்வாக இருக்க முடியும். இவ்விடயத்தில் தனிநாட்டு கோரிக்கையை தவிர வேறு ஒன்றுமில்லை என்றோ அல்லது வர்க்க போராட்டத்தில் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடுமென்று வியாக்கியானம் செய்து கொண்டிருக்கமுடியாது. தனிநாட்டு கோரிக்கை என்பது இலங்கை அரசினதும், தமிழ் மக்களினதும் நீண்டகால எதிர்கணிய நிகழ்வு போக்கில் தங்கியுள்ளது. ஏன் நாம் அதற்கு இடமளிக்கவேண்டும்? வட கிழக்கு மக்கள் உண்மையில் இன்று தனி நாட்டு கோரிக்கையை பற்றி சிந்திக்கவில்லை. தாம் இந்த, இருபக்கம் சார்ந்த ஆயுத கெடுபிடி, சீரழிவு என்பவற்றிலிருந்து விடுதலை பெறவே விரும்புகின்றனர். தனிநாட்டு கோரிக்கைக்கான ஏகோபித்த மனோபாங்கு இன்னும் தமிழ் மக்கள் மனதில் தோற்றம் பெறவில்லை என்றே நான் எண்ணுகிறேன். ஆனால் மறுபுறம் உண்னை தன்மை கொண்ட அதிகாரபகிர்வினை தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதிகாரப் பகிர்வென்பது கற்புலனாகாத குவிந்திருக்கின்ற அதிகாரங்களை பரம்பல் செய்வது என்றோ, அல்லது சட்ட புத்தகங்களிலும் ஆவணங்களிலும் அதிகாரப்பரவலாக்கல் என்பதை எழுதிவைப்பதால் அது முடிந்து விட்டது என்று அர்த்தப்பட்டுவிடாது. மனிதவளங்களையும், பருப்பொருள் வளங்களையும் அது இல்லாத இடங்களை நோக்கி கோரிக்கைகளாக கேட்கப்படும் இடங்களுக்கு அவை நகர்த்தப்பட வேண்டும். இதன் அடிப்படையில் அதிகாரபரவலாக்கல் உண்மை தன்மையுடன் நடைமுறைபடுத்தும் வகையில் இடம் பெற வேண்டும். தமிழருக்கு வழங்கப்பட்ட மொழி உரிமை அந்தஸ்து இதற்கு எடுத்துக்காட்டப்படக்கூடிய உதாரணமாகும். ஏனெனில் தமிழர்க்கு உத்தியோகபூர்வமொழி அந்தஸ்து வழங்கப்பட்டபோதும் நடைமுறையில் அது கண்டுகொள்ளமுடியாத ஒன்றாக உள்ளது. எனவே தமிழரின் மொழி உரிமை அந்தஸ்து கேலிக்குரிய ஒன்றாக அரசியல் திட்டத்தில்

வெற்றுவார்த்தைகளாய் இன்றும் இடம்பெற்றிருப்பதை நாம் காணலாம். இவ்வாறாக தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படுவது தமிழர்களை மேலும் விரக்தி நிலைக்கு தள்ளியுள்ளது. இனப்பிரச்சனை, பொருளியல் சந்தை, ஒன்றின் அடிப்படையில் தோற்றம் பெற்றிருந்தாலும் இங்கு இதன் மீது உளவியல் ரீதியான சட்டகம் ஒன்று வரலாற்று பூர்வமாக கட்டப்பட்டுள்ளது. எனவே அந்த வடிவத்துக்குள்தான் இப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டுமென்றால் தமிழ் மக்களின் மனதை, வென்றெடுக்கத்தக்கவகையில் அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும்.

மறுபுறம் இலங்கையில் இதுவரை இருந்த அரசியமைப்புகள் எல்லாம் தமது சொந்த பிரஜைகளையே அடக்கி ஒடுக்குகின்ற ஒரு சூழ்நிலையினை வரலாறாகக் கொண்டுவிட்டது. எனவே, எமது நாடு அரசியல் ரீதியாக புணரமைக்க வேண்டிய தேவையுள்ளது. இவ்வடிப்படையில் அதிகார பகிர்வு மாத்திரமல்ல அரசியலமைப்புத் திட்டமும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பது ஜனநாயகத்தை விரும்புவோரது எதிர்பபார்க்கையாகும். கலாநிதி சுனில் சிறிவர்தன கூறிய கூற்று இவ்விடத்தில் கவனத்திற் கொள்ளத்தக்கது. "இலங்கையின் அரசியலமைப்பு முற்றாக ஒழுங்கமைக்கப்பட வேண்டும். காலனித்துவ அரச முறையையும் மரபுசார் பௌத்த பாரம்பரிய சிந்தனையையும் கொண்ட அரசியல் முறையினை கைவிட்டு அபிவிருத்தி நோக்கிய சகல இனங்களின் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கக் கூடிய அரசியல் முறை ஏற்படுத்தப்பட வேண்டும்."

எனவே இந்த அதிகாரப் பகிர்வின் மூலம் சிறுபான்மையினர் எதை எதிர்ப்பார்க்கின்றனர் என்றால்,

(1) இலங்கை ஒரு பல்லின நாடு என்ற விடயம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

(2) வளப்பங்கீட்டு அடிப்படையில் அதிகாரப் பகிர்வு நிச்சயப்படுத்தப்பட வேண்டும்.

(3) சிறுபான்னையினரது உரிமைகள் பாதுகாப்பு என்பன சட்டபூர்வமாக உறுதி செய்யப்பட வேண்டும்.

(4) சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் மீது கொண்டிருக்கின்ற சந்தேகங்கள் அரசியல் ரீதியில் எவ்வாறு தீர்க்கப்பட வேண்டும். அது போல பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் மீது கொண்டிருக்கின்ற சந்தேகங்களும் தீர்க்கப்பட வேண்டும்.

அடுத்து இவ்வினப்பிரச்சினை களத்தில் போராடிக் கொண்டிருக்கின்ற போராளிகளுடனான பேச்சுவார்த்தைகள் மூலமாகவே தீர்க்கப்பட வேண்டும். 1995ஆம் ஆண்டு ஜூலையில் தனிநாட்டு கோரிக்கைக்கு மாற்றிடான யோசனையை

இலங்கை அரசு முன்வைக்கும் போது அதனை நாம் பரிசிலிக்க தாயார்யென்று புலிகள் கூறியது பேச்சுவார்த்தைக்கான மிக முக்கியமான சமிக்ஞையாகும்.* ஏன் இதனை நாம் கருத்தில் கொள்ளக்கூடாது?

பேச்சுவார்த்தை, அதிகாரப் பரவலாக்கல் இனங்களுக்கிடையிலான ஐக்கியம் என்ற அடிப்படையிலேயே இந் நூலின் கட்டுரைகள் இங்கு எழுதப்பெற்றுள்ளன. இந்நூலில் மாறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்டிருக்கலாம். எனினும் இங்குள்ள கட்டுரையாளர்கள் அனைவரினதும் பொதுவானதும், உயர்வானதுமான நோக்கம் அமைதியான ஐக்கிய இலங்கையொன்றைக் கண்டு கொள்வதே. எனவே இலங்கை இனப்பிரச்சினை என்பது அதிகாரப் பரவல் மூலம் தீர்க்கப்பட வேண்டுமென்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். இவ்வடிப்படையிலேயே பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர்களான அம்பலவாணர் சிவராசா அவர்கள், பேராசிரியர் வை. ஆர். அமரசிங்ஹ, அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியற்துறை தலைவர். திரு. எம்.ஓ.ஏடி. சொய்ஸா அவர்கள், கலாநிதி நவரட்ண பண்டார அவர்கள், பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சுமணசிரி லியனகே அவர்கள், புவிமியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஹஸ்புல்லா அவர்கள், மற்றும் அரசறிவியற்துறை விரிவுரையாளர் திரு. ஆனந்த வெலிஹேன என் போருடைய கட்டுரையுடன் எனது கட்டுரையொன்றும் இடம்பெற்றிருக்கின்றது. இத்தோடு 1993ஆம் ஆண்டு வீரகேசரியில் பிரசுரமான பேராசிரியர் ஏ. ஜே. வில்சனின் அவர்களின் கட்டுரையும் இந்நூலில் இடம்பெறுவது பொருத்தப்பாடெனக் கருதி உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்நூலுக்கு மிகப் பொருத்தமென்ற காரணத்தினால் 1926ஆம் ஆண்டு எஸ்.டப்ளியு.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் சமஷ்டி தொடர்பான The Mornming Leader என்ற பத்திரிகையில் வெளியான கட்டுரையின் சாரமும் இங்கு இடம்பெற்றுள்ளது.

இந்நூல் தொகுதியின் முதலாவது கட்டுரை ஆகிய இலங்கையின் தேசியம், தேசியத்துவம் தேசத்தை கட்டியெழுப்புவதிலுள்ள பிரச்சினைகள் என்ற கட்டுரை அதிகாரப் பரவல் பொதியை பற்றி பேசுவதில் இருந்து சற்று விலகிப் போவதாக தென்பட்டாலும் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை வரலாற்று பூர்வமாகவும் யதார்த்தபூர்வமாகவும் நன்கு எடுத்து கூறுகின்றது. எனவே அது முதல் கட்டுரையாக இடம் பெற்றுள்ளது.

இந்நூலுக்கான கட்டுரைகளை தந்துதவிய அரசறிவியற் துறைத் தலைவர் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

* India Today July 1995

இந்நூல் உருபெறுவதற்கு எனக்கு ஆலோசனை வழங்கியும் மேற்பார்வை செய்தும் ஊக்குவித்த எனது அன்பிற்கும் மதிப்புக்குமுரிய ஆசிரியர்,

பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா அவர்களுக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலின் பெறுமதியும் அங்கீகாரமும் இங்கு வழங்கப்பட்ட அணிந்துரையையே சாரும். பல வேலைப்பழுக்களுக்கு மத்தியில் பெருமகிழ்ச்சியோடும், வரவேற்புடனும் என்னுடன் இக்கட்டுரைகள் தொடர்பான பலமணி நேரம் உரையாடி பின்னர் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய எனது மதிப்புக்குரிய விரிவுரையாளர் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் ஜனாப் எம். எல். ஏ. காதர் அவர்களுக்கு எனது உளப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூலில் இடம் பெற்றிருக்கின்ற ஆங்கில, சிங்கள மொழி மூலமான கட்டுரைகளை மொழி பெயர்த்துதவிய பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா அவர்களுக்கும் விரிவுரையாளர் திரு N. P. H. சைபுதீன் அவர்களுக்கும் போபிட்டிய தமிழ் வித்தியாலய அதிபர் திரு. S. ரவிச்சந்திரகுமார் என்போருக்கு எனது ஆழமான நன்றிகள்.

இந்நூலுக்கான முழுப்பிரதிகளையும் கணணி பதிவாக்கத்தில் பதிப்பித்துத் தந்த திருமதி L. கௌரி அவர்களுக்கும் இந்நூலினை அச்சிட்டுத் தந்த "லதா இம்பிரஸ்" அச்சகத்தாருக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இந்நூல் உங்கள் கரங்களில் தவழ்வதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கியவரும் இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்ட திரித்துவக் கல்லூரி ஆசிரியரும் உயர்கல்வி நிறுவன இயக்குனருமாகிய திரு. பி. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரா. நித்தியானந்தன்

334/E, பலகொல்ல
கெங்கல்ல

* இலங்கையில், தேசியம், தேசியத்துவமும், தேசத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ள பிரச்சனைகளும்

** திரு. எம். ஓ. ஏ. டி. சொய்சா
(தலைவர் – அரசறிவியற்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)

பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் முகங்கொடுக்கின்ற பிரதானமான பிரச்சனையாக தேசியத்துவத்தினைக் கட்டியெழுப்பல் என்பதனை அடையாளப்படுத்தலாம். இதற்கான காரணம் இவ்வாறான நாடுகளில் வாழ்கின்ற மக்கள் குலம், கோத்திரம், மதம், மொழி மற்றும் பிரதேச ரீதியாக வேறுபட்டுள்ளமையே ஆகும். பல்லின மக்கள் சமூகத்தில் நிலவுகின்ற இவ்வகையான நிலமையினுள் தேசியத்துவத்தினைக் கட்டி எழுப்புதல் என்பதினூடாக கருதப்படுவது, வர்க்க சமநிலையைப் பேணி கட்டி எழுப்புகின்ற ஐக்கியத்தினுள்ளே எல்லா வர்க்க மக்களும் ஒரே இனம், ஒரே நாடு எனும் பொதுத்தன்மையை நோக்கிச் செல்லலாகும். இவ்வாறு செய்கின்ற போது அந்தந்த மக்கள் தொகுதிகளின் பாரம்பரிய உரிமைகளான தனித்துவம், மொழி, மதம், கலாச்சார பண்பாடுகள் போன்றன தாழ்வுருவதாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது. தேசியத்தினை கட்டி எழுப்பல் என்பதினூடாக வேறுபாடுகளுக்குள்ளே ஒரு ஒற்றுமையை கட்டி எழுப்புதலாகும். மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான இலங்கை தற்போதைக்கு தேசியத்துவத்தை கட்டி எழுப்புதல் எனும் விடயத்தில் பெரும் குழப்ப நிலை ஒன்றுக்கு முகங் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதற்கு காரணமாக அமைவது இலங்கையினுள் காணப்படுகின்ற பல்லின மக்கள் தொகுதிகளுக்கிடையில் ஒரு பொதுத் தன்மையினை கட்டி எழுப்பி ஒரு நாடு ஒரு இனம் எனும் தத்துவத்தினூடே முன்னேறுவதற்கு இலங்கையினால் முடியாமல் இருப்பதாகும். இந்த கட்டுரையின் நோக்கமாக அமைவது, தேசியம், தேசிய இனம், தேசியத்துவம் என்பதினூடே கருதப்படுவது என்ன என்பதனை அடையாளம் காட்டி பொதுத் தேசியத்துவத்தினை கட்டி எழுப்ப முடியாமல் இருப்பது ஏன் என்பது சம்பந்தமாக கலந்துரையாடுவது ஆகும்.

நிரந்தர தேச எல்லைக்குட்பட்ட நிலப்பிரதேசத்திற்குள்ளே வாழும் அரசியலினூடாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் மக்கள் அரசியல்

---

* Nation, Nationality and the problem of Nation Building in Sri Lanka

** Mr. M. O. A. De. Zoysa (Head - Department of Political Science University of Peradeniya)

மொழிபெயர்ப்பு: திரு. எஸ். ரவிச்சந்திரகுமார் அதிபர் போயிட்டிய த.வி. ரங்கல

விஞ்ஞானத்தினூடாக இனம் என்று கருதப்படும். இனம் என்பது ஒரு மொழி பேசுகின்ற ஒரு மதத்தை பின்பற்றுகின்ற கலாச்சாரத்தைக் கொண்ட பொதுவான சரித்திரத்தோடு கூடிய ஒரு மக்கள் கூட்டத்தைக் கொண்டதாகும். அல்லது அவ்வாறான குணாம்சங்களைக் கொண்ட ஒன்றிலிருந்து ஒன்று வேறுபாடுகளைக் கொண்ட பல்வேறு மக்கள் கூட்டங்களின் தொகுதியாகும். இதில் முதலாவது ஒரு தனித்துவமான மக்கள் சமூகம் என்றும் இரண்டாவது வகைக்குரியது பல்லின மக்கள் சமூகம் எனவும் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இனங்களுக்கிடையிலான அந்நியோன்ய உறவு ஏற்படுவது இனங்கள் வாழ்கின்ற நிலப்பரப்பில் காணப்படும் அரசோடு ஒன்றிணையும் போதே ஆகும். பிறப்பு தேசியத்துவத்தினை தீர்மானிக்கின்ற பதில் செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணியாகும். இந்த அடிப்படையில் பிறப்புரிமை கிடைத்தல் சம்பந்தமாக அரசினூடாக வெளியிடப்படும் சட்டங்களின் அடிப்படையில் ஒரு அரசினுள் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் எந்த மக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களானாலும் அவர்கள் அனைவரையும் ஒன்றாக நோக்கும் போது இனம் என்று அடையாளம் காட்டப்படும். இனத்தின் தேசிய அந்நியோன்யம் அரசின் பதவி முத்திரையினூடாக நிரூபணமாகும். உதாரணமாக இலங்கையினுள் வாழ்கின்ற மக்கள் இனம் எனக் கருதப்படும் போது அவர்கள் இலங்கையர்கள் என அடையாளம் காட்டப்படும். என்றாலும் இலங்கையில் இனம் கட்டமைக்கப்பட்டுள்ளது சிங்களவர், தமிழர், முஸ்லிம் மற்றும் வேறு மக்கள் தொகுதி என்ற அடிப்படையிலேயே ஆகும். இந்த அடிப்படையில் அரசும் இனமும் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்த முடியாத ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றதாகும். இதிலிருந்து தெரிவது என்னவெனில் ஒரு இனம் நடைமுறையில் இருப்பதற்கு அரசு இன்றியமையாததாகும் என்பதே. என்றாலும் ஒரு மக்கள் தொகுதி ஒன்று இருப்பதற்கு அரசு என்ற ஒன்று அவசியமில்லை. இதற்கு காரணம் மக்கள் தொகுதியின் தொடர்பினை வெளிப்படுத்துவது அரசினூடாக அன்றி மதம், மொழி, சொந்தபந்தம், பண்பாட்டு உரிமைகள் போன்ற கலாசார காரணிகளினூடாகவேயாகும். அரசுக்கும் ஒரு மக்கள் தொகுதிக்கும் இடையில் ஒரு சிறந்த தொடர்பின்மையை எடுத்துக் காட்டுவதற்காக 1945 வரை குடியேற்றவாசிகளாக கருதப்பட்டு வந்த யூத மக்கள் தொகுதியை அடையாளம் காட்டலாம். 1945 இல் இஸ்ரேல் எனும் பெயரில் உருவாக்கப்பட்ட அரசின் கீழே ஒரு தேசிய தனித்துவ தன்மையை உருவாக்கிக் கொண்ட பின்னரே யூதர்கள் ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இலங்கையினுள் வாழ்கின்ற இந்திய பண்பாட்டோடு கூடிய பிரஜா உரிமை அற்ற தமிழ் தோட்டத் தொழிலாளர்களை இதற்கான இன்னுமொரு அடையாளமாகக் காட்டலாம்.

ஒரு இனத்தின் தேசியத்துவத்தினை சட்டபூர்வமாக வெளிக்காட்டுவது பிரஜா உரிமை அடிப்படையிலாகும். பிரஜா உரிமையானது பிறப்பினடிப்படையில் அல்லது விசேடத் தத்துவத்தினடிப்படையில் பதியப்படுவதின் மூலம் கிடைக்கப்பெறும். இவ் எந்த அடிப்படையில் பிரஜா உரிமை கிடைக்கப் பெற்றிருந்தாலும் ஒரு அரசினுள்ளே வாழ்கின்ற பிரஜைகளை ஒன்று சேர்க்கும் போது இனம் என்ற அடிப்படையில் அடையாளம் காட்டப்படுகிறது. நிகழ்காலத்திலே நடைமுறையில் உள்ள தேசிய அரசானது தோற்றம் பெற்றிருப்பது ஒரு நாடு, ஒரு இனம் என்ற இரு காரணிகளை ஒன்று சேர்த்தேயாகும். தேசிய அரசு முறை அரசியல் ரீதியல் நிர்மாணமாவது தேச எல்லை, தலை நகரம், தேசிய கொடி, தேசிய கீதம், தேசிய அடையாள முத்திரை, வெளிநாட்டு கடவுச்சீட்டு, தேசிய நிதிமுறை, தேசிய ராணுவம், வெளிநாட்டு தூதுவர் காரியலாயம், இராணுவ மரியாதை அணிவகுப்பு தேசிய நூதனசாலை போன்ற தேசிய அடையாளங்கள் மூலமும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவத்தினை பெற்றுக் கொள்வதன் மூலமுமாகும்.

தேசியத்துவம் என்பதனால் கருதப்படுவதாவது ஒரு அரசினுள் வாழ்கின்ற மக்கள் தமது நாட்டின் மீதும் இனத்தின் மீதும் கொண்டுள்ள பற்றினை வளர்த்துக் கொள்கின்ற, தேசிய பற்றினூடாக வெளிப்படுகின்ற குணாம்சங்களை தோற்றுவிக்கும் அரசியல் எண்ணக்கருவாகும். வேறொரு வகையில் கூறுவதாயின் எங்கள் நாடு, எங்கள் இனம் என்ற எண்ணக் கருவோடு இருந்து, அதனடிப்படையில் செயலாற்றுவதும், பழகுவதும் பயிற்சி பெறுவதுமாகும். இந்த தத்துவத்துமானது பல்லினமக்கள் சமூகத்திற்கு வழங்கப்பட்டிருக்குமானால் அங்கு தேசியத்துவம் எனும் அடிப்படையில் கருதப்படுவது அந்தந்த மக்கள் தொகுதி தங்களது பிரிவு தன்மையினடிப்படையில் அமைந்தது என எண்ணாது, நாம் ஒரே இனத்தின் இனம் என்றும் ஒரே நாட்டினது பங்காளிகள் என்ற எண்ணக்கருவை உருவாக்கிக் கொண்டு சிந்திப்பதினாலும், செயலாற்றுவதினூடும் உருவாக்குகின்ற தேசியத்துவம் மிகவும் சிறப்புடையதான தன்மையுடையதாகும் என்பதாகும். இதன் மூலம் தெளிவாவது பல்லின மக்கள் சமூகத்தினுள் தேசியத்துவத்தின் அபிவிருத்தி சம்பந்தமாக பல்லின மக்களுக்கிடையிலான ஐக்கிய இயல்பானது நிச்சயபூர்வமான தன்மையில் நடைமுறைப்படுத்தப்படுதலே ஆகும்.

மேலே கூறப்பட்டதனடிப்படையில் பல்லின மக்கள் சமூகத்தினுள் தேசியத்தை கட்டியெழுப்புவது என்பதில் புரிந்துகொள்வது

வேறுபாடுகளுக்கிடையிலே ஒரு பொதுமைப்பாட்டினை உருவாக்கிக்கொள்வதேயாகும். இதற்கு மாறுபட்டதாக பொதுமைப்பாடு தோன்றாது வேறுபாடுகள் வெளிக்கிளம்பும் போது தேசியத்துவத்தினை கட்டியெழுப்பும் செயற்பாடுகள் குழப்ப நிலைக்கு உள்ளாகும். பல்லின மக்கள் சமூகத்தினுள் அரசியல் அதிகாரத்தினை பாவிப்பதும் தேசிய வளத்தை நிர்வகிப்பது தொடர்பாக இனங்களுக்குரிய பங்குபற்றல் இல்லாமல் போகும் போது அல்லது மக்கள் தொகுதிகளுக்கிடையிலான சமானத் தன்மையினை பாதுகாத்து எல்லா தொகுதி மக்கள் கூட்டங்களுக்கும் சமமான இடம் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாது போகுமிடத்து மக்கள் தொகுதிகளுக்கிடையில் சந்தேகம், பயம், விசுவாசமின்மை தோன்றும் அதே வேளை இதன் காரணமாக ஒருமைப்பாடு என்பது தோன்றாது வேற்றுமைகளே தோன்றும். வேற்றுமைகள் தோன்றுகின்றமையை ஊக்குவிக்கும் காரணிகளை சமாதான, சம உணர்வுகள் எனும் சமூகத்தை தோற்றுவிக்கும் இலக்கின் பாதையை நோக்கி செலுத்த முடியாது போகுமிடத்து அங்கு அதிருப்திகளுக்கு உள்ளாகும் மக்கள் தொகுதி அல்லது தொகுதிகள் தமக்கேயான இனத்தின் தனித்துவத்தினை கட்டி எழுப்புவதற்காக தமக்குரிய ஒரு வேறான அரசை உருவாக்கிக் கொள்ள ஒழுங்கமைப்புகள் மேற்கொள்ள முயற்சிப்பதனை எவ்வகையிலும் தடுக்க முடியாது. இவ்வாறான ஒரு நிலைப்பாட்டினுள் உருவாகும் நிலை தங்களுக்கு பொருந்துமா என சிந்திக்கும் மக்கள் தொகுதி அல்லது தொகுதிகள் நிகழ்கின்ற நிலைமையினை வேறுபடுத்த முயற்சி மேற்கொள்கின்ற போது அவ்வாறான மக்கள் தொகுதி அல்லது தொகுதிகளுக்கு எதிராக எழுச்சி கொள்கின்ற அதேவேளை இதனால் உருவாகும் வர்க்க பேதங்களின் கடைசித் தீர்வாக அமைவது மக்கள் சமூகம் ஒரு சிவில் யுத்த தன்மை வரை பயணம் செய்வதேயாகும். பல்லின சமூகத்தினுள் வர்க்க பேதம் விஸ்வரூபமெடுத்து எதிரெதிரான இனக் குழுக்கள் (மக்கள் தொகுதிகள்) தங்களுக்குள் ஒன்றை ஒன்று வெட்டிக் கொத்தி தாக்கிக் கொள்கின்ற தன்மை ஒன்று தோன்றிய பின் இனங்களை ஐக்கியப்படுத்துகின்ற செயற்பாடுகள் பரந்தளவிலான குழப்ப தன்மையை அடைகின்ற அதே வேளை அவ்வாறான குழப்ப சூழலினுள் மிகவும் தெளிவாகக் காணக்கூடியது தோமஸ் ஹோப்ஸ் தனது "லெவியாதன்" எனும் நூலில் ஒரு சிக்கலான சமூகத்தில் மனிதன் கடந்து வந்த வாழ்க்கை சம்பந்தமாக வெளியிட்ட சித்திரத்தின் தன்மையை ஒத்ததாகும். ஹோப்ஸ் மனிதன் பற்றி விபரிக்கின்ற குணாம்சம் பல்லின மக்கள் தொகுதியினுள் ஒருவரோடொருவர் விரோதத்தன்மை காணப்படும் மக்கள் தொகுதிகளோடு ஒப்பிட்டு விபரித்தால் அங்கு காணப்படும் நிலமை பின்வருமாறு அமையும்.

"பல்லின மக்கள் சமூகத்தினுள் வர்க்க ஐக்கியத்தன்மையினுள் கட்டி எழுப்பப்படுகின்ற பொதுத் தேசிய வாதம் ஒன்று இன்றி, சமநிலைப்படுத்த முடியாது போகும் வர்க்க வித்தியாசங்கள் காரணமாக ஒரு மக்கள் கூட்டம் ஒரு அரசிலிருந்து வேறாகி தனியானதோர் இனமாக தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காக தமக்கென ஒரு அரசை நிர்மாணித்துக் கொள்வதற்கு ஆயுதப்போராட்டத்தன்மை ஒன்றினை நோக்கிச் செல்கின்ற வேளையில் அதற்கு விரோதமாக இன்னொரு மக்கள் கூட்டம் எழுச்சி பெறுகின்ற நிலையில் ஒரே மக்கள் சமூகத்தினுள் பல்வேறு மக்கள் தொகுதிகள் ஒன்றுக்கொன்று விரோதத்தன்மையுடையதாக மாறுவதனை தடுத்துவிட முடியாது. இந்நிலையில் ஒன்றுக்கொன்று விரோதத்தன்மை கொண்டுள்ள மக்கள் கூட்டம் ஒன்றை ஒன்று நம்பிக்கையீனத்துடன் நோக்குகின்ற அதேவேளை ஒன்றை ஒன்று நோக்குவது மற்றவர் தம்மை அழித்துவிடக் கூடும் என்ற எண்ணத்துடனே (மனோபாவத்துடன்) ஆகும். இவ்வாறான நிலைமையினுள் காணக்கூடியதாக இருப்பது மக்கள் தொகுதிகளிடையே ஐக்கியத்தை உருவாக்குவதற்கு செயல்படுவதை விட ஒருவரையொருவர் விரோதத்தன்மையுடன் கூடிய வர்க்கங்கள் ஒருவரை ஒருவர் தோற்கடிக்கின்ற நோக்கில் தமது தனிப்பட்ட அதிகாரத்தையும் சக்தியையும் அபிவிருத்தி செய்துகொள்ளும் அதிகார போட்டியினுள் நுழைதலிலேயாகும். இவ்வாறான ஒரு நிலையினுள் வாழ்கின்ற மக்கள் சமூகத்தில் அனைவரும் வாழ்வது மரண பயத்தோடு கூடிய ஒரு வாழ்க்கையே ஆகும். இவ்வாறான ஒரு குழப்ப சூழ்நிலையில் எந்த விதமான சமூக பொருளாதார அபிவிருத்தியையும் காணமுடியாது. காணக்கூடிய ஒன்றே ஒன்று மரணத்தை சந்திக்கும் வரை விரோதத்தன்மை கொண்ட மக்கள் தொகுதிகள் ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொள்வதையேயாகும். இவ்வாறான சூழலினுள் வாழ்கின்ற மனிதர்களின் வாழ்க்கை கஷ்டமும், பயமும், தீமையும், மூதேவித்தனமும் நிறைந்த ஒரு வாழ்க்கையாக மாறிவிடும்"

மேலே கலந்துரையாடப்பட்ட விடயமானது இனம், தேசியத்துவம், தேசியத்துவத்தை கட்டி எழுப்புதல் எனும் எண்ணக் கருவோடு சம்பந்தமான செயற்பாடுகளும் பல்லின சமூகத்தின் பொது தேசிய வாதத்தினுள் இனத்தை கட்டியெழுப்பும் செயற்பாடு தோல்வியுற்றால் நிலவப் போகின்ற அழிவுப் பாதையின் தன்மை எவ்வாறானதாக இருக்கும் என்பதைப் பற்றியதேயாகும். இலங்கை தற்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்ற இனங்களுக்கிடையிலான குழப்ப நிலையும் அதனை

தீர்ப்பதற்கான முயற்சிகளின் போது ஏற்படுகின்ற வெற்றி, தோல்விகளை ஆராயும் போது மேற்கூறிய தத்துவத்தோடு ஒப்பிட்டு பார்ப்பது நல்லது. இலங்கை இன்று முகங்கொடுத்துள்ள இந்த இனப் பிரச்சனையினுள் காணக்கூடியதாக இருப்பது சுதந்திரத்தின் பின் கடந்த ஐந்து தசாப்தங்களுக்குக் கிட்டிய காலத்தினுள் இலங்கை மக்கள் சமூகத்தினுள் காணப்படுகின்ற வேறுபாடுகளினுள் ஒரு ஐக்கியத்தை கட்டி எழுப்புவதில் இலங்கை தோல்வி கண்டமையையே ஆகும். இதற்கான காரணங்கள் என்ன என்பது உடனடியாக ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டும்.

இலங்கையினுள் பொங்கி எழுந்துள்ள மக்கள் பிரிவுகளுக்கிடையிலான குழப்ப நிலை சம்பந்தமாக செய்ய வேண்டிய ஆய்வுகளை ஆரம்பிக்க வேண்டியது இலங்கையில் மக்கள் சமூகம் கட்டி எழுப்பப்பட்டுள்ள விகிதாசாரத்தன்மை எனும் அடிப்படையிலேயே ஆகும். 1981 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி இலங்கையின் மக்கள் சமூகம் கட்டி எழுப்பப்பட்டுள்ள இனமத அடிப்படையிலான விகிதம் பின்வருமாறு அமைகிறது.

இனக் குழுக்கள்	முழு மக்கள் தொகுதியினுடைய நூ. வீதம்
சிங்களம்	74.0
தமிழ்	18.2
முஸ்லிம்	7.1
பறங்கி (பர்கர்)	0.3
மலேயர்	0.3
வேறு	0.1

மத அடிப்படையில் மக்கள் பிரிந்திருக்கும் முறை பின்வருமாறு.

மதம்	முழுமக்கள் தொகுதியின் நூற்றுவீதம்
பௌத்தம்	69.3
இந்து	15.5
முஸ்லிம்	7.6
கிறிஸ்தவம்	7.5
வேறு	0.1

"மக்கள் பிரிவு, மத எண்ணிக்கையின் அடிப்படையில் நோக்குகின்றபோது மிகவும் தெளிவாகக் காணக்கூடியது இலங்கை பல்லின மக்கள் சமூகத்தைக் கொண்ட ஒரு அரசாகும் என்பதனையே ஆகும். என்றாலும் இந்த மக்கள் பிரிவுகளினதும் மதங்களினதும்,

இருக்கின்ற மக்கள் தொகையின் எண்ணிக்கையினடிப்படையில் காணக்கூடிய விசேட லட்சணமாவது சிங்கள பௌத்த மக்கள் பிரிவு இலங்கையில் காணப்படும் முழு மக்கள் தொகையில் சுமார் 70% ஆக இருப்பதும் அதன் காரணமாக இலங்கையின் மக்கள் சமூகத்தினுள் இந்த மக்கள் தொகுதிக்கு தலைமைத்துவ ஆதிக்கத்தன்மை சொந்தமாக்கியதாகும். மிகநீண்ட காலம் முதல் சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமாக இருக்கின்ற இந்த தலைமைத்துவ ஆதிக்கத்தன்மையை காரணமாகக் கொண்டு இலங்கை ஒரு சிங்கள பௌத்த அரசு என்றும், சிங்கள பௌத்தர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு நாடு இலங்கை மட்டுமே என்றும் மானசீக எண்ணக்கரு எல்லா சிங்கள பௌத்தர்களின் மனத்தினுள்ளும் புரையோடி போயுள்ளமையை காணக்கூடியதாக இருக்கிறது.

தற்போது இலங்கையினுள் தோன்றி விஸ்வரூபமெடுத்துள்ள இனங்களுக்கிடையிலான குழப்ப நிலைக்கு தாக்கத்தை செலுத்துகின்ற பிரதான காரணமாக காட்டக்கூடியது இந்த நாட்டின் அரசியல் முறையினுள் சிங்கள பௌத்தர்கள் சொந்தமாக்கிக் கொண்டுள்ள தலைமைத்துவ ஆதிக்கத்தினை ஆதாரமாகக் கொண்டு இந்நாட்டில் வாழ்கின்ற பிரதான சிறுபான்மையினரான தமிழர்கள் அந்த தலைமைத்துவ ஆதிக்கத்திற்கு எதிராக எழுச்சிகொள்ளலும், நடைமுறையில் இருக்கின்ற அரசியல் முறையிலிருந்து விலகிச் சென்று தமக்கென தனியானதொரு அரசை உருவாக்கிக் கொள்வதற்கு ஆயுதப் போராட்டம் ஒன்றில் புகுந்துள்ளமையேயாகும். இரண்டு தசாப்த காலங்களுக்கு கிட்டிய காலங்களாக நிலவுகின்ற இனப்பிரச்சனையை ஆதாரமாகக் கொண்டு இதுநாள் வரை இருபகுதிகளிலும் ஆயிரக்கணக்கான உயிர்களும் பலகோடி பெறுமதியான சொத்துக்களும் அழிந்து போகின்றன. ஒரே இனம், ஒரே நாடு எனும் தத்துவத்தினை ஏற்றுக்கொள்ளாது வேறான ஒரு அரசின் கீழ் தனித்துவமான ஒரு இனமாக தம்மை கட்டியெழுப்பிக் கொள்வதற்கு தமிழ் மக்கள் சமூகம் கிளர்ந்தமைக்கான காரணம் என்ன? எனும் வினா இவ்விடத்தில் எழுகின்றது. இதற்கான காரணங்களை பின்வருமாறு காட்டலாம்.

1. இலங்கை அரசினுள் அரசியல் அதிகாரத்தினை பிரயோகிக்கும் செயல்பாட்டில் பங்கு கொள்வதற்கு தமிழ் மக்களுக்கு இருக்கின்ற இட ஒதுக்கீடு எல்லைக்குட்பட்டமை.

சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலங்களில் இந்நாட்டின் அரசியல் முறையானது கட்டி எழுப்பப்பட்டது பெரும்பான்மையினரின் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதிநிதித்துவ ஜனநாயத்தை அடிப்படையாகக்

கொண்டேயாகும். பல்லின மக்கள் சமூகத்தினுள் காணப்படும் ஒரு மக்கள் தொகுதி நாட்டின் முழு மக்கள் தொகையினதும் 3/4 பங்குக்கு கூடிய அளவில் இருக்கும் போது அதன் தலைமைத்துவம் நிச்சயமாக பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கேற்பவே அமைவதை தடுக்க முடியாது. இதனடிப்படையில் நடைமுறையிலிருக்கின்ற பிரதிநிதித்துவ ஜனநாயக அமைப்பின் கீழ் இந்நாட்டின் அரசியல் அதிகார உரிமையாளர்களாக சிங்கள பௌத்தர்கள் மாறும் அதேவேளை இதன் விளைவாக அமைந்தது இந்நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையினர் அரசியல் முறையின் செயற்பாட்டின் பாதுகாவலர்களாகவன்றி வெறுமனே பின்னணியில் நின்று பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்களின் தன்மைக்கு தள்ளப்பட்டமையேயாகும். சுதந்திரத்தின் பின்வந்த காலங்களிலிருந்து இன்று வரை அரசியல் அதிகாரத்தினை பிரயோகிக்கும் தலைமைத்துவத்திற்கு தெரிவான ஏழு பிரதமர்களும் நான்கு ஜனாதிபதிகளும் சிங்கள பௌத்தர்களாகும். சோல்பரி அரசியல் யாப்பின் அடிப்படையிலும், 1972 அரசியல் யாப்பின் அடிப்படையிலும் நியமனம் பெற்ற பெயரளவிலான அதிகாரத்தையுடைய ஜனாதிபதி பதவிகளை வகித்த இரு இலங்கையர்களில் ஒருவர் சிங்கள கத்தோலிக்கராக இருக்க மற்றவர் சிங்கள பௌத்தராவார். கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டிருப்பது 1947 – 1994 வரையிலான காலகட்டங்களினுள் இலங்கையில் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்காக உருவாக்கப்பட்ட இருபது அமைச்சரவைகளில் காணப்பட்ட அங்கத்தவர்களில் இன அடிப்படையிலான எண்ணிக்கையேயாகும்.

வருடம்	சிங்களம்	தமிழ்	முஸ்லிம்	வேறு	மொத்தம்
1947	11	2	-	1	14
1952	11	2	-	-	13
1952 ஜூன்	11	2	1	-	14
1953	12	1	1	-	14
1956	13	-	1	-	14
1959	13	-	2	-	15
1960	07	-	1	-	08
1960 ஜூலை	10	-	1	-	11
1965 மார்ச்	15	1	1	1	18
1970 மே	17	1	1	1	20
1972 ஜூலை	21	1	2	-	24
1978 செப்	21	2	2	-	25
1980 பெப்	21	3	2	-	26

1989	19	1	2	-	22
1991 மார்ச்	23	1	2	-	26
1993 ஆகஸ்ட்	20	1	2	1	24
1994 ஆகஸ்ட்	20	1	2	-	23
1994 நவம்	19	2	2	-	23

இந்த அட்டவணையின் மூலம் தெளிவாவது என்னவெனில் இந்நாட்டின் மூன்றாவது சிறுபான்மையினரான முஸ்லிம் மக்களுக்கு கிடைத்திருக்கின்ற பிரதிநிதித்துவ பங்குகூட இரண்டாம் சிறுபான்மையினரான தமிழருக்கு அமைச்சரவையில் கிடைக்கவில்லை என்பதேயாகும். அத்தோடு 1956 – 1960 ஜூலை வரையான காலகட்டத்தில் இருந்த நான்கு அமைச்சரவைக்குள்ளும் தமிழ் மக்களுக்கு எவ்வித பிரதிநிதித்துவமும் கிடைக்காமை இங்கு காணக்கூடிய அடுத்த விசேட லட்சணமாகும். அத்தோடு இங்கு தெளிவாகின்ற ஒரு விடயம் என்னவெனில், கிடைத்திருக்கின்ற பிரதிநிதித்துவமும் அரசியல் அதிகாரத்தன்மை, தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தன்மை, திறமை போன்றவற்றை கொண்டதாக அன்றி அதிகாரத்தை நடைமுறைப்படுத்துகின்ற சிங்கள மக்கள் தொகுதியின் தலைமைத்துவத்தின் விருப்பப்படியேயாகும். இவ்விடத்தில் தோன்றுகின்ற அடுத்த வினா என்னவெனில் அமைச்சரவையில் அங்கத்துவத்தினை பெற்றுக்கொண்ட அங்கத்தவர்கள் உண்மையிலேயே தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தியவரா என்பதேயாகும். அதற்கான காரணம் 1947 – 1952 வரையிலான காலங்களைத் தவிர்த்து அமைச்சரவையில் அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொண்ட தமிழர்கள் இந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக காலத்துக்குக்காலம் அதிகாரத்தைக் கைப்பற்றி பதவிக்கு வந்த இரண்டு அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியினதும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஆதரவாளர்களே ஆகும். அரசியல் அதிகாரத்தினை பிரயோகிப்பதற்காக முறையான அங்கத்துவத்தன்மை நிலவுகின்ற அரசியல் முறைமைக்கு சொந்தமாகக் கூடாத தம் மக்கள் பிரிவின் ஆசைகள், தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் தலைமைத்துவத்தினைக் கொண்ட சிங்கள மக்கள் பிரிவை சார்ந்து தமிழ் மக்கள் இருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதேயாகும். என்றாலும் தமது அபிலாஷைகள் எதிர்பார்த்தபடி நிறைவேறாத போது நிலவுகின்ற அரசியல் முறையில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கின்றமை இயல்பானதே என்பதோடு இவ்வாறான ஒரு நிலைமையினுள் ஒன்றாக இருப்பதை விடவும் தனித்து செல்வதே தமக்கு சிறப்புடையதாகும்

என்ற எண்ணக்கருவுக்கு தமிழ் மக்களை இழுத்து செல்வதை தடுத்துவிட முடியாது.

2. நாட்டின் பிரதான சட்டத்தைப் போன்றே ஒவ்வொரு தொகுதியினதும் தனித்தன்மையைப் பேணல்

பிரதான சட்டம் என்பதினூடாகக் கருதப்படுவது அரசியல் அமைப்புச் சட்டமாகும். அரசின் பிரயோக செயற்பாட்டுத் தன்மையினை வெளியிடுகின்ற கடித, கற்று நிருபங்கள் என்பன அரசியல் அமைப்புச் சட்டங்கள் என அடையாளம் காட்டப்படும். பல்லின மக்கள் சமூகத்தன்மையினுள் இரு குழுக்களுக்கிடையில் ஐக்கிய தன்மையினை ஏற்படுத்தி, பொது ஐக்கியத் தன்மையினை கட்டி எழுப்பும் செயற்பாட்டிற்கு அவசிய ஒப்பந்தமானது, எல்லா விதமான மக்கள் தொகுதிக்கும், நீதியும், நியாயமும் சாதாரணத்தன்மையும் வழங்கப்படும் வகையில், அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய பிரதான ஒப்பந்தமாக அமைவது ஒரே இனம், ஒரே நாடு எனும் பொதுப்பார்வையினை அரசினுள் வாழ்கின்ற எல்லா பிரஜைகளின் உள்ளத்திலும் தோன்றச் செய்வதற்காக எந்தவிதமான பேதங்களும் விஷேசத் தன்மையும் இன்றி எல்லா மக்கள் தொகுதிகளைச் சேர்ந்த மக்களும் சமமான பிரஜைகளாக கருதி எல்லோரும் திருப்தியான ஒரு வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான இடத்தை சமநோக்கோடு பெற்றுக்கொடுத்தலாகும். வேறு வகையில் கூறுவதாயின், மக்கள் பிரிவு, மொழி, மதம் பிரதேசம் என்ற வேறுபாடுகளை பிரதிபலிக்கும் காரணங்களைக் கருத்திற் கொள்ளாது அரசினால் வழங்கப்படும் சமமான பாதுகாப்பினை எல்லோருக்கும் சமமான முறையில் பெற்றுக்கொடுத்தல். இந்த நிலை நிறைவேறுவது இரு காரணங்களில் தங்கியிருக்கின்றது.

(அ) நாட்டின் முக்கியமான அல்லது பிரதான சட்டமுமாகிய அரசியல் அமைப்பு ஒன்றின் மூலமாக ஒப்பந்தத்தை அத்தாட்சிப்படுத்தல்.

(ஆ) அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்கம் அந்த ஒப்பந்தத்திற்கு அனுகூலமான வகையில் அரசியல் பொருளாதார சமூகக் கொள்கைகளை அமுலாக்குவதற்கு முனைதல்.

பல்லின சமூகத்தோடு கூடிய ஒரு அரசினுள் வாழுகின்ற வெவ்வேறான மக்கள் தொகுதிகளுக்கு சமமான கவனிப்பு எனும் சித்தாந்தம்

அரசின் மூலமும் அரசால் உருவாக்கப்பட்டு பதவிக்கு வருகின்ற அரசாங்கத்தின் மூலமும் கருத்திற் கொள்ளப்படாது வர்க்க நலனிலும் விஷேசத்தன்மையிலும் அக்கறை செலுத்தும் கொள்கைகளைக் கையாளும் போது அதிருப்திக்குள்ளாகும் மக்கள் தொகுதி அல்லது தொகுதிகள் அரசின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கை சிதைந்து போகும். இவ்வாறான ஒரு நிலைமையினுள் அந்த மக்கள் தொகுதி அந்த அரசை நோக்குவது தமது பாதுகாவலனைப் போலன்றி தம்மைக் குழப்பத்துக்குள்ளாக்கும் ஒரு குழப்பக்காரனின் அமைப்பாக மாறும் எனும் எண்ண ஓட்டத்தினை மனதில் கொண்டேயாகும். இவ்வாறானதொரு மனநிலை ஏற்பட்ட பின் தேசியத்துவம் அமுக்கப்பட்டு வேற்றுமைத் தன்மை வெளிக்கிளம்பும். இதன் கடைசி விளைவாக அமைவது நடைமுறையில் இருக்கின்ற முறையிலிருந்து விலகிச் செல்கின்ற எண்ணங்கொண்ட மக்கள் தொகுதி அல்லது தொகுதிகளோடு ஒன்று சேர்வதே ஆகும்.

தற்போது இலங்கை முகங்கொடுத்துள்ள இனப்பிரச்சினை தோன்றியமைக்கான இன்னுமொரு காரணமாகக் காட்டக்கூடியது பிரஜைகளுக்கான சம அந்தஸ்து, சமமான இடம் பெற்றுக்கொடுத்தல் எனும் சித்தாந்தம் இலங்கை அரசினால் புறக்கணிக்கப்பட்டமையாகும். இது நாட்டின் பிரதான சட்டமான அரசியல் அமைப்பு சட்டத்தின் மூலமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை (புறக்கணிப்பு) இங்கு காணப்படும் விஷேட இலட்சணமாகும். உதாரணமாக 1947 – 1972 வரையிலான காலப்பகுதியினுள் நடைமுறையிலிருந்த சோல்பரி அரசியல் அமைப்பு திட்டத்தில் பிரஜைகள் அனைவரும் சமம் எனும் சித்தாந்தமல்லாது இலங்கை மக்களை பெரும்பான்மை மக்கள், சிறுபான்மை மக்கள் என இரு கூறாக்கி பெரும்பான்மையினரிடமிருந்து பாதுகாப்பிற்காக சிறுபான்மையினருக்கு விஷேட சட்டப்பாதுகாப்பு ஒன்றினை வழங்கியமையை சுட்டிக்காட்டலாம். இந்த அடிப்படையில் விஷேட வரப்பிரசாதங்களைக் கொடுத்தமையை பெரும்பான்மை மக்களான சிங்கள மக்கள் தமக்கு செய்யப்பட்ட அசாதாரணமென நோக்கினர். அடுத்தது சிறுபான்மையினர் மீது சிங்கள பெரும்பான்மையினரது மனத்தினுள் அர்த்தமற்ற முறையிலான துவேஷ மனப்பாங்கும் தோன்றி வெளிப்படுவதற்கு இந்த விதிமுறைகள் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு இதன் விளைவாக மக்கள் இனங்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் சந்தேகமும் விஸ்வாசமின்மையும் வளர்ச்சியடைந்ததேயாகும். சோல்பரி அரசியல் அமைப்புக்குப் பின் 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட முதலாம் இரண்டாம் அரசியல் அமைப்புத் திட்டங்கள் இரண்டிலும் சிறுபான்மையினருக்காக சோல்பரி அரசியல்

அமைப்புத் திட்டத்தினால் வழங்கப்பட்டிருந்த விஷேட பாதுகாப்புக் கவசம் அகற்றப்பட்டு பிரஜைகள் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் அடிப்படை உரிமைகள் தொகுதி ஒன்று முன்வைக்கப்பட்டது. இது சிறுபான்மை மக்களை திருப்திப்படுத்தவில்லை. தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த விஷேட பாதுகாப்பு ரத்து செய்யப்பட்டமையை சிறுபான்மை மக்கள் விஷேடமாக தமிழ் மக்களின் பார்வையில் இந்நாட்டின் அரசியல் செயல் முறையினுள் தலைமைத்துவ ஆதிக்கத்தினைக் கொண்ட சிங்கள பௌத்தர்களின் தலையீட்டோடு கூடிய அரசியல் அதிகாரத்தை அமுலாக்கும் சிங்கள தலைவர்களினால் தமக்கு அழிக்கப்பட்ட அநீதியாகவே காட்சியளித்தது. மறுபுறம் 1972, 1978 அரசியல் யாப்பு இரண்டின் கீழும் பிரஜைகளுக்கு அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்கான வரப்பிரசாதத்தை பெற்றுக்கொடுத்தது. ஜனநாயக சமூகத்தின் பொதுநலனையும் கடமைப்பாங்கையும் கருத்திற்கொண்டு சட்டத்தின் மூலம் எல்லைக்குட்பட்ட ஒரு ஏற்பாட்டின் மூலமே இது இடம்பெற்றது. இங்கு பொதுநலனும் கடமைப்பாங்கும் என்ன என்பதனை தீர்மானிக்கும் சட்டத்தை பிறப்பிக்கும் அதிகாரத்தைக் கொண்டது அரசாங்கமே ஆகும். அவ்வாறு பிறப்பிக்கப்படும் சட்டமானது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு முரணானதா இல்லையா என்பதனை மறுசீராய்வு செய்கின்ற அதிகாரம் 1972, 1978 ஆகிய இரண்டு அரசியலமைப்புத் திட்டத்திலும் நீதிமன்றங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படவில்லை. ஆனால், இன எண்ணிக்கையின் அடிப்படையில் அரசாங்க அதிகாரமானது தலைமைத்துவ ஆதிக்கத்தினைக் கொண்ட சிங்கள பௌத்தர்களுக்கே கிடைத்திருக்கின்றது. அரசாங்க அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் தன்மை தங்கியிருப்பது சிங்கள பௌத்தர்களின் நலனைப் பேணுகின்ற அளவிலும் அவர்கள் கடமை என்று கருதுகின்றவற்றை நிறைவேற்றப்படுகின்ற அளவிலுமே ஆகும். இதனடிப்படையில் பொதுநலன், கடமையெனும் பதங்கள் இறுதியாக அர்த்தப்படுவது சிங்கள பௌத்தர்களின் நலனும் கடமையுமே என்பதனை எவ்வகையிலுமே தடுக்கமுடியாது. இதன் மூலம் உருவாகிய பிரதி விளைவானது 1972, 1978 ஆகிய அரசியலமைப்புத் திட்டங்களின் கீழ் பிரதானமாக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மூலமாக பிரஜைகள் அனைவரும் சமம் என்ற தத்துவத்தினை அறிமுகப்படுத்தியதோடு பிரஜைகள் தொகுதியை விஷேடப்படுத்தி சட்டத்தைப் பிறப்பிக்கும் அதிகாரத்தினை அரசாங்கத்திற்கு பெற்றுக்கொடுப்பதின் மூலம் பிரஜைகள் அனைவரும் சமம் எனும் தத்துவத்தினை நாட்டின் பிரதான சட்டத்தின் மூலமே உடைத்தெரிந்தமையாகும்.

1972, 1978 அரசியலமைப்பு யாப்பு முறைகள் இரண்டின் மூலமும் சிங்கள மொழி அரச மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை பௌத்தமதத்திற்கு விஷேட இடம் ஒன்று வழங்கப்பட்டமை போன்ற காரணிகளும் நாட்டின் அரசியலமைப்பு யாப்புகள் மூலமே மக்கள் தொகுதிகளுக்கு தனித்துவத்தன்மை வழங்கப்பட்டமைக்கான இன்னுமொரு அடையாளமாகக் காட்டலாம். இதனை ஒரு வகையில் நோக்குகின்ற பொழுது நீண்ட காலந்தொட்டே இந்த நாட்டின் அரசியல் செயல் முறையினுள் சம்பிரதாய முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விடயமான சிங்கள பௌத்த தலைமைத்துவ ஆதிக்கம் நாட்டின் அரசியலமைப்பு மூலமாகவே சட்டப்பூர்வமானதாக்கப்பட்டதாக அடையாளம் காட்டக்கூடியதாக உள்ளது. மறுபுறம் இதன் மூலம் இலங்கை மக்களை பிரதான, பிரதானமற்ற எனும் வகையில் இரண்டு பகுதிகளாக பிரித்தாலும் பிரதான மக்கள் குழுவினுடைய மொழி, மதம், ஆகியவற்றுக்கு விஷேட வரப்பிரசாதங்களை பெற்றுக்கொடுக்கின்றது. பல்வின மக்கள் சமூகத்தினுள் வாழ்கின்ற மக்களை இவ்வாறு பிரதான, பிரதானமற்ற எனும் வகையில் பிரித்துக் காட்டுவதன் மூலம் நாட்டின் பிரதான சட்டத்தின் மூலமாகவே பிரதான மக்கள் தொகுதிக்கு விஷேட வரப்பிரசாதங்களை பெற்றுக்கொடுக்கின்ற இத்தன்மையானது பிரதானமற்ற மக்களை ஒரு மகிழ்ச்சியற்ற சூழ்நிலைக்கு மாற்றுவதை தடுக்கமுடியாது. இவ்வாறான ஒரு நிலைமையினுள் ஒரு நாடு, ஒரு இனம் எனும் காட்சியின் கீழ் மக்களை ஒரு பொதுத் தேசியத்துவத்தின் கீழ் கொண்டுவருவது எப்படியுமே முடியாத காரியமாகும்.

3. சுதந்திரத்தின் பின் வந்த காலகட்டங்களினுள் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் சில செயற்பாட்டுக்கொள்கைகளைக் காரணமாகக் கொண்டு மக்கள் தொகுதிகளுக்கிடையிலான ஒற்றுமையும் ஐக்கியமும் சிதைந்தமை.

பல்வகைப்பட்ட எண்ணிக்கையுடன் கூடிய மக்கள் தொகுதிகள் பலவற்றுடன் கூடிய ஒரு மக்கள் சமூகத்தினுள் ஒரு மக்கள் கூட்டம் (தொகுதி) தலைமைத்துவ ஆதிக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் போதும் பெரும்பான்மையினரின் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதிநிதித்துவ ஜனநாயக முறையின் கீழ் ஆட்சிமுறை கட்டி எழுப்பப்பட்டுள்ளபோதும் அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அந்த தலைமைத்துவ மக்கள் தொகுதிக்கு நிச்சயமாக சொந்தமாகின்ற அதேவேளை மீண்டும் அதிகாரத்தைப்

பெற்றுக்கொள்வதற்காக வாக்குகளைப் பெற்றுக்கொள்கின்ற நோக்கோடு தலைமைத்துவ மக்கள் தொகுதிக்கு விஷேட நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கின்ற வகையில் அரசாங்க செயற்றிட்ட கொள்கைகளை உருவாக்குவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிப்பது சாதாரண ஒரு விடயமே. சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலங்களினுள் இனப்பிரச்சனை இந்தளவிற்கு விஸ்வரூபம் எடுத்தமை சம்பந்தமாக தாக்கத்தினை ஏற்படுத்திய காரணிகளில் ஒன்றாக மேற்கூறப்பட்ட அம்சத்தை எடுத்துக்காட்டக்கூடியதாக இருப்பது, நாட்டை நிர்வகிப்பதற்காக பதவிக்கு வந்த அரசாங்கங்கள் மூலம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட சில செயற்றிட்ட கொள்கைகள் மூலம் வர்க்கங்களுக்கிடையிலான ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் குழைத்தமையினால் ஆகும். கிழக்கு மாகாணத்தில் "கொவி ஜனபத" (விவசாய குடியேற்றம்) எனும் திட்டத்தினை உருவாக்குவதன் மூலம் அந்தப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் குடியேற்றம் ஒன்றினை ஏற்படுத்தியமை, அரச மொழியாக சிங்கள மொழியை சட்டபூர்வமாக்கியமை, பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்க்கின்ற போது மாவட்ட அடிப்படையிலான விகிதாசார முறையினை அறிமுகப்படுத்தியமை, அறிவிக்கப்படாவிட்டாலும் அரச சேவைகளுக்கும், இராணுவ சேவை, பொலிஸ் சேவை போன்றவற்றிற்கு ஆட்சேர்ப்பின் போது இனப்பிரிவுத் தன்மையினை மையமாகக் கொண்டு விஷேடத் தன்மை கொண்ட கொள்கை ஒன்றின் வழியில் செல்லுதல், அரச சேவைகளுக்காக தடைதாண்டும் பரீட்சைகளின் போது சிங்களமொழி கட்டாயமாக்கப்படுவது, தேசிய வளங்கள் பகிர்ந்தளிக்கப்படும் போது வடக்கு மாகாணங்களுக்கு குறைந்த கவனத்தை செலுத்துதல், தமிழர்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்காது 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் புதிய அரசியலமைப்புத் திட்டங்களை பிறப்பித்தமையும் அதன் மூலம் சிங்கள பௌத்தர்களின் தலைமைத்துவ ஆதிக்கத்தினை சட்டபூர்வமாக்கியமை, தேசிய சின்னத்தை உருவாக்கும் போது சிங்கள பௌத்த கலாசாரத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டமை, நிர்மானிக்கப்பட்டமை பௌத்த சித்தாந்தங்களுக்கு அரச அனுசரணையை காட்டியமை, தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிரான அஹிம்சை வழியிலான போராட்டங்களை ஏற்படுத்திய வேளைகளிலும் அரச அதிகாரத்தை கடுமையான முறையில் பிரயோகித்து மக்களை கொன்றமை போன்றன ஐக்கியமானது சிதைந்து போனமைக்கான மற்றும் சில காரணிகளாக எடுத்துக் காட்டலாம். மேற்கூறப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் தேசிய வளங்களை பகிர்ந்தளிக்கும் தன்மையினை கவனத்திற் கொண்டால் 1948க்கு பிற்பட்ட காலகட்டங்களினுள் இந்நாட்டில்

கைத்தொழில் திட்டங்கள் பிரதேச அடிப்படையில் உருவாக்கப்பட்ட முறை பின்வருமாறு.

மாவட்டம்	கைத்தொழில் திட்டங்களின் எண்ணிக்கை
கொழும்பு	1607
கம்பஹா	490
களுத்துறை	87
காலி	68
கண்டி	65
புத்தளம்	55
குருநாகல்	39
மாத்தளை	29
அம்பாந்தொட்டை	27
இரத்தினபுரி	24
நுவரெலியா	23
பதுளை	21
கேகாலை	13
மாத்தளை	11
அம்பாறை	07
மொனராகலை	07
பொலன்னருவ	05
வவுனியா	02
திருக்கோணமலை	02
மட்டக்களப்பு	01

மேற் காட்டப்பட்ட குறிப்புக்கமைய தமிழ் மக்கள் வாழ்கின்ற வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களிலும் மூன்று கைத்தொழில் நிலையங்களே உருவாக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இதில் தெளிவாக காணக்கூடிய இன்னுமொரு இலட்சணம் யாழ்ப்பாண மாவட்டத்தினுள் ஒரு கைத்தொழில் நிறுவனத்தையாவது உருவாக்காமையாகும். மக்கள் தொகுதி ஒன்றினை விஷேடப்படுத்தி தேசிய வளங்களை முகாமைத்துவப்படுத்திய முறை இதிலிருந்து மிக நன்றாகத் தெளிவாகின்றது. இந்த அடிப்படையில் மக்கள் தொகுதி ஒன்றினை விஷேடப்படுத்தி அரசாங்க கொள்கைகளை உருவாக்கி

செயற்படுத்துவதற்கு இந்நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்ட அரசாங்கம் முயற்சிப்பதற்கு தாக்கத்தை செலுத்தும் பிரதான காரணியாய் அமைவது பிரதிநிதித்துவ ஜனநாயக முறையின் கீழ் சிங்கள பௌத்த வாக்காளர்களின் பெரும்பான்மை ஒத்துழைப்பை வென்றெடுக்கும் தேவை அரசியல் தலைவர்களுக்கு இருப்பதேயாகும். பல்லின மக்கள் சமூகத்தினுள் ஒரு மக்கள் தொகுதியை திருப்திப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் மூலம் மக்கள் தொகுதி ஒன்றினை விஷேடத்துவப்படுத்தும் திட்டத்தின் கீழ் அரச அதிகாரத்தினை பாவிக்கின்ற போது, அதன் மூலம் தீமைகளுக்குள்ளாகின்ற மக்கள் தொகுதி நடைமுறையில் இருக்கின்ற அரசியல் முறைக்கு எதிராக எழுச்சி கொள்வதனைத் தடுக்கமுடியாது.

4. தேசிய அரசியலில் கட்சிமுறையினை நடைமுறைப்படுத்தாது இருத்தல்

பல்லின மக்கள் சமூகத்தினுள் மக்களினங்களுக்கிடையில் காணப்படுகின்ற வேற்றுமைத் தன்மைகளை இல்லாதாக்கி ஐக்கியத்தைக் கட்டி எழுப்புதல் சம்பந்தமாக அரசியல் கட்சிகளுக்கு இலகுவான முறையில் காரியங்களை ஆற்றமுடியும். இந்த காரியத்தினை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமாயின் அரசியல் கட்சிகள் மக்கள் பிரிவு, மொழி, மதம், குலம், பிரதேசம் போன்றவற்றிற்கு அப்பாற்பட்டு பொதுத் தேசிய கொள்கையின் கீழ் மட்டும் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்தியாவின் காங்கிரஸ் கட்சி, மலேசியாவில் ஐக்கிய மலேசிய தேசிய ஒழுங்கமைப்பு போன்றன அந்நாட்டினுள் தேசியத்தினை கட்டி எழுப்புதல் சம்பந்தமாக கொடுக்கக்கூடிய சிறந்த ஒரு உதாரணமாகும். என்றாலும் இலங்கையில் எந்த ஒரு கட்சியும் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டி எழுப்பப்பட்டு தேசியத்தை கட்டி எழுப்பும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமையை காணமுடியாதுள்ளது. 1947 முதல் 1956 வரையிலான காலகட்டங்களினுள் ஐக்கிய தேசிய கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா கம்யூனிசக் கட்சி போன்றன ஒரு குறிப்பிட்ட அளவில் தேசிய நோக்கை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றிய தன்மையினைக் காணக்கூடியதாக இருந்தாலும், 1950 ஆம் ஆண்டின் நடு, அரைப் பகுதியில் சிங்கள பௌத்த இனவாதத்தினை பின்னணியில் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கிளர்ச்சிக்கு கிளம்பியமையைக் காரணமாகக்கொண்டு தேசியத்தினை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் தொகுதிகளுக்கிடையிலான பேதத்திற்கான போக்கினை நாடத்

தொடங்கியதுடன் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ் கட்சி ஆகியனவும் கிளர்ந்தெழுந்து கொண்டிருந்த மக்கள் இனபேதங்களுக்கு மத்தியில் ஒரு செயலற்ற தன்மையினை நோக்கிப் போகின்ற தன்மையினைக் காட்டியது. மறுபுறம் ஆரம்பம் முதலே தமிழ் முஸ்லிம் மக்கள் இன பேதங்களை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளாக ஒழுங்கமைக்கப்பட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது. பேதங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளை ஒழுங்கமைத்தமையின் பிரதி விளைவாக தேசியத்தைக் கட்டி எழுப்பும் நோக்கமானது விழுங்கப்பட்டமை மாத்திரமன்றி இனப்பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தேசிய மட்டத்தில் பொது அபிமானமொன்றினை கட்டி எழுப்பவும் முடியாது போய்விட்டது. கடந்த நான்கு தசாப்த காலங்களில் இனப்பிரச்சினையை (பேதத்தை) தீர்ப்பதற்காக பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கத்தினாலும் முன் வைக்கப்படும் தீர்வு யோசனைகளுக்கு எதிர்கட்சிகள் ஆதரவு வழங்காமை மேற்கூறப்பட்ட தன்மையை தெளிவாக்குகிறது. பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு ஐக்கிய தேசியகட்சி ஆதரவு வழங்காமை, டட்லி சேனாநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எதிர்ப்பு தெரிவித்தமை, 13வது அரசியலமைப்பு திருத்தச்சட்ட மூலத்தின் கீழ் 1988ம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் மூலம் மாகாண சபைகளை உருவாக்கியமைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியும் மற்றைய இனவாத கட்சிகளும் அதனை எதிர்த்தமை, தற்போதைய அரசாங்கத்தின் மூலம் முன்வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்வு யோசனைகள் சம்பந்தமாக ஐக்கிய தேசிய கட்சி அமைதியை கடைப்பிடித்தலும் சிங்கள இனவாதக் கட்சிகள் நேரடியாக எதிர்ப்பை தெரிவிக்கின்றமையும் இதற்கு சிறந்த உதாரணங்களாகக் காட்ட முடியும்.

இலங்கை முகங்கொடுத்துள்ள சமூகப்பேதங்களுக்கிடையிலான பிரச்சனைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ள மேற்காட்டப்பட்ட காரணிகள் அனைத்தையும் ஒன்றுபடுத்தி நோக்குகின்ற போது தெளிவாவது என்னவெனில், இனப்போராட்டங்கள், அது சம்பந்தமான அனைத்து செயற்பாடுகளும் ஒரே கேந்திரத்தினுள் கட்டுண்டிருப்பதேயாகும். இதனால் நடந்தது இலங்கை அரசு, அரசாங்கம், அரசியல் செயற்பாடுகள், சமூகம், சிங்கள பௌத்த தலைமைத்துவ ஆதிக்கத்திற்கு எதிராக பிரதான சிறுபான்மை குழுவான தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்தமையே ஆகும். இந்த இருவேறுபட்ட அந்தங்களுக்கு இடையிலும் ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி ஒரே இனம், ஒரே நாடு எனும் சித்தாந்தத்தின் கீழ் பொது தேசியத்துவத்தினை கட்டி எழுப்புவது எப்படி என்பதே

தேசியத்தை கட்டி எழுப்புதல் சம்பந்தமாக இலங்கை இன்று முகங்கொடுத்துள்ள பிரதான அரசியல் பிரச்சினையாகும்.

மக்கள் பிரிவுகளுக்கிடையிலான போராட்டத்தைத் தீர்ப்பதற்காக முன்வைக்கப்படும் தீர்வு யோசனைகள் எவ்வாறு இருப்பினும் அவை இரண்டு விதமான மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டதாக இருக்கும்.

1. தேசிய அடிப்படையில் சமத்துவமான அரசியல் முறை ஒன்றினைக் கொண்ட மறுசீரமைப்பு.

2. பிரதேச மட்டத்தில் அரசியல் அதிகாரத்தை பகிர்ந்தளித்தல்.

தேசிய மட்டத்தில் செய்யப்படும் அரசியல் மறுசீரமைப்பினூடாக ஒரு நாடு, ஒரு இனம் எனும் பார்வையின் கீழ் பொதுத் தேசியத்துவத்தினை கட்டி எழுப்புகின்ற நோக்கை அடிப்படையாகக் கொள்ளும் அதேவேளை அதற்காக கீழ் காட்டப்பட்டுள்ள மூலத்தத்துவங்களை பதிலீடாக கொண்டு புதிய அரசியலமைப்பு முறை ஒன்றினை உருவாக்கி நடைமுறைப்படுத்தல் இன்றியமையாததாகும்.

1. அரசையும் மதத்தையும் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்தி அரசை உலகியல் அடிப்படையில் ஒழுங்குபடுத்தல்.

2. பிரஜைகள் அனைவரும் சமம், எல்லோருக்கும் சம இடஒதுக்கீடு எனும் தத்துவத்தினை உறுதிப்படுத்தல்.

3. நாட்டில் வாழ்கின்ற எல்லா மக்கள் தொகுதிகளுக்கும் அரசியல் அதிகாரத்தை பிரயோகிப்பதில் பங்கு கொள்ளக்கூடிய வகையிலான அதிகார மூலதத்துவத்தினடிப்படையில் அரசாங்க வியூகத்தையும் அதிகார நிறுவனங்களையும் ஒழுங்கமைத்தல்.

4. முழு அரசின் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்ற ஒரு பொதுச்சட்டத்தினை அறிமுகப்படுத்தலும், இனபேத அடிப்படையில் செயற்படும் சில சட்ட முறைகளை ரத்து செய்தலும். இதற்கு உதாரணமாக தமிழ் மக்களோடு சம்பந்தமான தேசவழமை சட்டத்தினையும் முஸ்லிம் மக்களோடு சம்பந்தமான காதிகள் சட்டத்தையும் காட்டலாம்.

5. பிரஜைகள் அனைவரும் சமன், சமமான இடஒதுக்கீடு எனும் தத்துவங்களுக்கு முரண்பாடான பிரஜைகள் குழுவுக்கு விஷேடத்தன்மை கொடுக்குமடிப்படையில் சட்டம் பிறப்பிக்கும் முறையை ரத்து செய்தல்.

6. தேசிய வளங்களை சாதாரண முறையில் பிரதேச மட்டத்தில் பகிர்ந்தளித்தலை உறுதிப்படுத்தல்.

7. அரசியல் யாப்பை மறுசீராய்வு செய்யும் அதிகாரத்தை சுதந்திரமான பக்கசார்பற்ற நடுநிலைமையான நீதிமன்றத்திற்கு வழங்கல்.

தேசிய மட்டத்தில் செய்யப்படுகின்ற அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு மேலதிகமாக, பிரதேச மட்டத்தில் அரசியல் அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதோடு அவ்வாறு செய்கின்ற போது விஷேடமாக பொதுத் தேசிய தன்மைக்கு பாதகம் ஏற்படுகின்ற வகையில் பிரதேச மட்டத்தில் அதிகார பரவலாக்கம் மேற்கொள்ளப்படாத வகையில் பார்த்துக்கொள்ளுதல் அவசியமாகும். பல்லின மக்கள் சமூகம் ஒன்றினுள் வேற்றுமைக்குள் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்காக பொதுவான அரசியல் முறை ஒன்றை ஒழுங்கமைத்துள்ள முறைமைக்கும், பிரதேச மட்டத்தில் அரசியல் அதிகாரத்தினை பரவலாக்கியுள்ள முறைமைக்கும் சிறந்த உதாரணங்களாகவும், முன்மாதிரிகளாகவும் அமெரிக்கா, சுவிட்சிலாந்து, இந்தியா போன்ற அரசுகளில் இருந்து எமக்கு பெற்றுக் கொள்ளலாம். இங்கு முக்கியமானது அந்த நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முன்மாதிரிகளை இலங்கையில் நிலவும் தற்போதைய நிலைமையுடன் ஒப்பிட்டு இலங்கைக்கு மிகவும் ஒத்து வருகின்ற அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்ளுதலேயாகும்.

இனப் போராட்டங்களுக்கு தீர்வாக தற்காலத்தில் அரசியல் அதிகாரத்தைக் கொண்டுள்ள ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் அரசியலமைப்பு ஆலோசனைப் பொதி ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைப் பொதியில் மிகவும் முக்கியமான லட்சணமாகக் காணக்கூடியது இலங்கை அரசினுள் நிலவும் வேறுபாட்டுத் தன்மைகளை புரிந்து கொண்டு அல்லது அடையாளம் கண்டு கொண்டு அந்த தன்மையினை பொது அரசொன்றினூடாக முக்கியப்படுத்தி நிர்மானிக்கும் தன்மையிலான அடிப்படையில் பதவியினருக்கும் அரசு அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு முயற்சிப்பதேயாகும். இதற்காக அரசியலமைப்பு ஆலோசனைகளினூடாக பிராந்திய அரசாங்க முறையும் பிராந்தியங்களுக்கு

வழங்கும் அதிகாரங்களுக்காக சுயேற்சையாக செயற்படக்கூடிய அதிகாரத்தை வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. மேலே காட்டப்பட்டுள்ளது போல் அரசியல் அதிகாரத்தை பரவலாக்குதல் இனப்போராட்டங்களை தீர்ப்பதற்காக எடுக்கப்படும் எவ்வகையான முயற்சிகளுக்கும் இன்றியமையாத ஒரு அங்கமாகும். இதற்காக அரசியலமைப்பு ஆலோசனை பொதி மூலமாக முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு சம்பந்தமான ஆலோசனைகள் கட்டாயமாக செயற்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும். என்றாலும் அரசியலமைப்பு ஆலோசனைப் பொதியில் காணப்படுகின்ற பிரதானமான பலவீனமான அம்சமாக இருப்பது இந்த அரசியலமைப்பு ஆலோசனைப் பொதியினூடாக வேறுபாடுகளை மட்டும் கவனத்திலெடுத்துள்ளமையும் பொதுத் தேசியத்துவத்தினை கட்டி எழுப்புவதற்கான ஒரு ஐக்கிய தன்மையினை கவனத்திலெடுக்காததுமாகும். தேசியத்தன்மையோடு ஒன்றிணையாமல் இருப்பதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகள் இந்நாட்டின் அரசியலமைப்பு முறையினுள் இருக்கும் போது அந்த தடைகளை நீக்குவதற்கு எந்தவிதமான முயற்சிகளும் எடுக்காமலிருக்கும் நிலைமையினுள் வேறுபாடுகளை மாத்திரம் கவனத்தில் கொண்டு தீர்வொன்றினை தேடுவதால் மாத்திரம் தேசிய ஐக்கியத்தை உருவாக்கிக் கொள்ளமுடியாது. இறுதியாகச் சொல்லக்கூடியது என்னவெனில் இனத்தைப் பிரித்துக் காட்டுகின்ற காரணிகள் அப்படியே இருக்க வேறுபாடுகள் இன்னும் அபிவிருத்தி அடைவதற்கான தூண்டுதல்களைக் கொடுக்கின்ற தீர்வினூடாக நிகழக்கூடியது தேசியத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் மேலும் மேலும் பலவீனமாகி இறுதியில் வேறுபாடுகள் மாத்திரம் வெளித்தோன்றப் போவதேயாகும்.

* இலங்கையின் அதிகாரப் பரவலாக்களுக்கான வரலாறும் அது எதிர் நோக்கிய பிரச்சினைகளும்.

** பேராசிரியர் வை. ஆர். அமரசிங்க
அரசறிவியல்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

சுதந்திரத்திற்கு பிற்பட்ட கால இலங்கையின் அதாவது, இன்றைய காலகட்டத்தில் அதிகார பகிர்வு தொடர்பான வாதங்கள் இனப்பிரச்சினையின் பண்புகளையும் அதன் வரலாற்று தளங்களையும் உள்ளடக்கிக் கொண்டதாகவே இருக்கிறது. ஆனால் ஆரம்பகால கட்டங்களில் அதிகார பகிர்வு என்பது இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டிருக்கவில்லை. உண்மையிலேயே அக்காலப் பகுதியில் அதிகார பகிர்வு தொடர்பான கோரிக்கையினை விடுத்தவர்களும் அதனை எதிர்த்தவர்களும் கூட சிங்கள மக்களின் தலைவர்களாகவே விளங்கினர். தமிழர்கள், அதிகார பகிர்வு தொடர்பான கோரிக்கைகளை மிகவும் பிற்பட்டதொரு காலப்பகுதியிலேயே முன்வைத்தனர். 1926ஆம் ஆண்டில் S.W.R.D. பண்டாரநாயக்கா இலங்கையில் அதிகார பகிர்வினை மேற் கொள்வதற்கு பல வாதங்களை முன்வைத்திருந்தார். இலங்கை ஒரு பல்லின மக்கள் வாழும் நாடாக இருந்தமையே அவர் இவ்வாறு முன்வைத்தமைக்குக் காரணமாகும். அவருடைய பல உரைகள் சமஷ்டியாட்சி முறை அல்லது அதிகார பகிர்வினைப் பற்றிய யோசனைகளாக முன்வைக்கப் பட்டிருக்கின்றன. இன்னும் கூறப் போனால் யாழ்ப்பாணத்தில் கூட இவ்வாறான கருத்துக்களையே அவர் வெளியிட்டார். 1926ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட The Ceylon Morning Leader என்ற பத்திரிகையில் சமஷ்டிபற்றி கூறி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "இந்நாட்டில் எல்லா மக்கள் பிரிவினரும் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்கொண்டு நோக்குபவர்களாக இருக்கின்றனர். இவ்வாறான சந்தேகங்களுக்கு மூல காரணமாக அமைவது அரசியலே."

சோல்பரி அரசியல் திட்டத்தில் அதிகார பகிர்வு தொடர்பாக எந்த ஏற்பாடும் காணப்படவில்லை. ஆனால் 1949ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமை சட்டத்தின் காரணமாகவே தமிழர் தமது பாதுகாப்பு தொடர்பாக முதன் முதலாக சிந்திக்கத் தலைப்பட்டனர். ஆனால் அவர்கள்

---

* The History of the Devolutional Power and Its Issues

** Prof. Y.R. Amarasinghe, Dept. of Political Science, University of Peradeniya.

ஆங்கில மொழி மூலத்திலிருந்து மொழிபெயர்ப்பு : ரா. நித்தியானந்தன்

சிறுபான்மையினரின் காப்பீடாகிய 29ஆம் சரத்தையும் சிறுபான்மையினர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கத்தக்கவகையில் ஏற்பாடு செய்த பிரதிநிதித்துவ முறையும் தமிழர்களை திருப்தி செய்வதாக அமையவில்லை.

இதன் காரணமாக 1949ஆம் ஆண்டு சமஷ்டிக் கட்சி தமிழ் அரசியல் தலைவர்களால் உருவாக்கப்பட்டது. இவ்வாறான உருவாக்கம் பெரும்பான்மையினர் மனதில் இனம், சமயம், மொழி என்ற அடிப்படையில் தமிழர்களைப் பிரித்து நோக்குவதற்கு இடமளித்தது. 1949ஆம் ஆண்டு முதன் முதலாக சமஷ்டிக் கட்சியின் ஆரம்பத்துடன் அதிகார பகிர்வினை ஒரு கோரிக்கையாக முன்வைத்தனர். பிரதேச சுயாட்சி மூலம் மத்திய அரசாங்கத்தோடு நல்லுறவு ஒன்றினை பேணிக்கொள்ளலாம் என்ற எண்ணம் சமஷ்டிக் கட்சியிடம் காணப்பட்டது. ஆனால் சமஷ்டிக் கட்சியின் சுய நிர்ணய உரிமை தொடர்பான கோரிக்கை அரசியல் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளல் போன்ற கோரிக்கைகள் சிங்களவர் மத்திமிலிருந்த எதிர்ப்பினை வலுவடையச் செய்தது. ஆனால் தமிழர்களோ ஒரு பிரதேச சுயாட்சியின் மூலமே தமது சமய, கலாச்சார, மொழி போன்றவற்றை பேணிக்கொள்ள முடியுமென எண்ணினர். இவ்வாறான முரண்பாடுகள் காரணமாக அதிகார பகிர்வு நோக்கத்தில் முன்வைக்கப்பட்ட பண்டா–செல்வா, டட்லி–செல்வா ஆகிய ஒப்பந்தங்கள் தோல்வியைத் தழுவின.

சிங்கள மொழி அரச கரும மொழியாக கொண்டு வரப்பட்டமை தமிழ் மொழிக்கான பயமுறுத்தலாக அமையாவிட்டாலும் கூட தமிழ் தேசியத்துக்கு பயமுறுத்தலாகியது. மறுபுறம் காணி, குடியேற்றக் கொள்கை தமிழருடைய பிரதேச உரிமையை மறுப்பதாக அமைந்தது.

தனிச் சிங்கள சட்டமானது சிங்களவர்களை திருப்தி செய்யுமுகமாக உருவாக்கப்பட்டதேயொழிய அது இடதுசாரிகளால் முன்மொழியப்பட்டிருக்கவில்லை என்பது கவனத்திற் கொள்ள வேண்டும். இது பற்றி கூறிய S.W.R.D. பண்டாரநாயக்கா சிங்கள மொழிச் சட்டம் இது ஒரு காலத்தின் தேவை என்ற வகையில் கருத்துக் கூறினார். (Preface to Pact) ஆனால் தமிழருடைய பிரச்சினைகளை அறிந்து வைத்ததோடு அப்பிரச்சினையை தீர்க்கவும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் அதிகார பகிர்வு அவசியம் என்பதையும் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டார். எனினும், பண்டா–செல்வா ஒப்பந்தம் சம்பந்தமாக இரு தலைவர்களும் சந்தித்த போது அதிகார பகிர்வு தொடர்பான எதிரெதிரான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். தமிழர்கள் பிரதேச

சுயாட்சி கோரிக்கையை முன்வைத்தனர். S.W.R.D பண்டாரநாயக்கா பிரதேச நிர்வாக ஆட்சியினை (Regional Administraion Power) வழங்க விரும்பினார். ஆனால் இருவரும் ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்குள் இவ்வொப்பந்தத்தை செய்து கொள்ள முன் வந்தனர். வட பிரதேச ஆட்சியையும் கிழக்கு மகாணத்தை 2 அல்லது 3 பிரதேசங்களைக் கொண்ட ஆட்சி அலகுகளாக அமைக்க, அவர்கள் விரும்பினர். மிகவும் காத்திரமான சுயாட்சி இவ் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. விவசாயம், கூட்டுறவு, கல்வி, காணி, சுகாதாரம், சமூக சேவை, நீர் வடிகால் என்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் S.W.R.D பண்டாரநாயக்கா பிராந்திய சுயாட்சிக்கான அதிகார பகிர்வினை வழங்க விரும்பிய போதும் தமிழரின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழரின் மொழிப் பிரச்சினையை பொறுத்தவரை, தமிழர்கள் மொழிக்கான சம அந்தஸ்த்தை வற்புறுத்தினர். தமிழ் ஒரு தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் வட கிழக்கு மாகாணங்களில் நிர்வாகக் கடமைகள் தமிழ் மொழியில் இடம்பெற வேண்டுமெனவும் வற்புறுத்தினர். S.W.R.D. பண்டாரநாயக்கா உத்தியோகபூர்வ மொழிச் சட்டத்தை மாற்றுவதை சம்மதிக்கவில்லை. ஆனால் உத்தியோக மொழிச் சட்டத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவர்களது கோரிக்கைக்கு விட்டுக் கொடுக்க முடியுமென கூறினார். வட கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியினை நிர்வாகக் கருமமொழியாக அமுல்படுத்துவதை S.W.R.D பண்டாரநாயக்கா ஏற்றுக் கொண்டார். இருந்த போதிலும் இவ்வாறானதோர் ஒப்பந்தம் நாடு பிரிவதற்கு காரணமாகும் என்றும் சிங்களவர்களை பலவீனப்படுத்தும் முயற்சி எனக் கூறி இவ்வொப்பந்தத்தை வீழ்ச்சியுற செய்வதற்கு, இவ்வொப்பந்தத்திற்கு எதிரானவர்கள் செயல்பட்டு வெற்றியும் பெற்றனர். 1958ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இவ்வொப்பந்தம்(அவரால்) ஒருபக்க சார்பாக கைவிடப்பட்டமையால் தமிழ் மக்கள் ஏமாற்றமடைந்தனர். 1959க்கும் 1965க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அதாவது 1960ஆம் ஆண்டு சத்தியாகிரகம் வரி அறவிட்டமை, சட்ட மறுப்பு போராட்டம் என்பன தமிழின் உரிமை போராட்டங்களும் ஜனநாயக வழிமுறைகளின் கீழேயே இடம்பெற்றன. 55க்கும் 65க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மந்திரி சபையில் வட பகுதியைச் சேர்ந்த ஒரு தமிழர்தானும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் தமிழரின் பொருளாதார சமூக அரசியல் அபிவிருத்திகள் அப்பிரதேசத்தில் இடம்பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதுபோலவே டட்லி–செல்வா ஒப்பந்தமும். பண்டா–செல்வா ஒப்பந்த அளவிற்கு இது பிரதேச சுயாட்சியை வழங்காவிட்டாலும்

மாவட்ட சபைகளின் மூலம் அதிகாரத்தை பன்முகப்படுத்துவதற்கு முன்வந்தது. ஆனால், 1965ஆம் ஆண்டு இவ் ஒப்பந்தம் கூட டட்லியின் மனப்பூர்வமான விருப்பத்தின் அடிப்படையில் உருவானதென கூறமுடியாது. ஆனால் சிறுபான்மை பாராளுமன்ற பிரதிநிதிகளைக் கொண்டிருந்த ஐ. தே. க. தான் ஆட்சியை அமைக்க வேண்டுமானால் அதற்கு 14 பிரதிநிதிகளைக் கொண்டிருந்த சமஷ்டிக் கட்சியின் ஆதரவு தேவைப்பட்டது. எனவே, இவர்களின் ஆதரவை பெற்றுக் கொண்டதன் மூலம் டட்லி–செல்வா ஒப்பந்தம் இடம்பெற்றது. இந்த ஒப்பந்தத்தில் 3 அம்சங்கள் மிகப் பிரதானமானதாக உள்ளடக்கப்பட்டிருந்தன.

1. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி நிர்வாக கரும மொழியாக அமுல்படுத்தப்படும்.

2. வடகிழக்கு பிரதேசங்களுக்கு மாவட்ட சபை உருவாக்கப்படும். (அதன் அதிகாரங்கள் பின்னர் கலந்துரையாடப்படும் எனக் கூறப்பட்டது.)

3. காணி குடியேற்றம் தொடர்பாக வட கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 1965இல் தமிழ் மொழி நிர்வாக கரும மொழியாக முன்மொழியப்பட்டது. காணி குடியேற்றம் தொடர்பாக வடகிழக்கு மாகாணங்களில் வாழ்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் ஸ்ரீ.ல.சு.க. இடதுசாரிகள் என்போருடைய எதிர்ப்பின் காரணமாக இவ்விரண்டாவது ஒப்பந்தமும் தோல்வியடைந்தது. மேற்குறித்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இவ்விரு பிரதமர்களும் அதிகார பரவலாக்கல் செய்வதற்கு பல சாதகமான அம்சங்களை முன் வைக்கவே முயற்சி செய்தனர். இது தமிழர்களின் சமஷ்டி கோரிக்கைகளையும் அரசின் அதிகார பகிர்வு யோசனைகளையும் சமநிலைக்குக் கொண்டு வருவதை இலக்காகக் கொண்டு காணப்பட்டது. 1966ஆம் ஆண்டு நிர்வாக மொழியாக தமிழ் மொழிக்கான பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது அது கடும் எதிர்ப்பை எதிர்நோக்கியது. ஆனால் 1957ஆம் ஆண்டு இதைவிட கூடிய அதிகார பகிர்வினை வழங்க முன்வந்த ஸ்ரீ.ல.சு.கட்சி அதனைவிட குறைந்த அதிகார பகிர்வு யோசனையாகிய டட்லி–செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனவே, அதிகார பகிர்வு யோசனைகளை மீண்டும் மீண்டும் தோல்வியினைத் தழுவியது. அதிகார பகிர்விற்கான எதிர்ப்பானது இலங்கையின் இறைமை, ஐக்கியம் என்பவற்றை வீழ்ச்சியுறச் செய்யும் ஒரு கருவியாகக் கருதப்பட்டது.

இதன்பின் 1976ஆம் ஆண்டு சமஷ்டிக் கட்சி ஏனைய கட்சிகளோடு பேரம் பேசி தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பினை ஏற்படுத்தியது. இது தமிழர்களின் பேரம் பேசும் விடயத்தில் மேலும் அரசியல் பலம் பெற வழிவகுத்தது.

1972இல் முதலாம் குடியரசு அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் ஒற்றையாட்சி என்ற பதம் சேர்க்கப்பட்டமை தமிழர்களின் கோரிக்கைக்கு எதிரான ஒன்றாக அமையலாயிற்று. அரசியல் யாப்பு மன்றத்திலிருந்து விலகிக் கொண்ட தமிழர் கட்சிகள் அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்கலாயின. இப்பொழுதுதான் முதல் தடவையாக சமஷ்டிக்கு சார்பானதும் எதிரானதுமான வாதங்கள் பலமாக இடம்பெறலாயின. தமிழர் தமது சுய நிர்ணய உரிமை கோரிக்கையினை முன்வைத்தனர். வேறு சோஸலிச அரசியல் முறைமையில் நிலவும் நாடுகளில் அதிகார பகிர்வு மிக சீராக இடம்பெற்றுள்ளதாக சமஷ்டிக் கட்சி தமது வாதத்தை முன்வைத்தது. இனங்களின் சுய நிர்ணய உரிமை தமிழர் ஒரு தனியான இனம் என்ற வகையில் ஸ்டாலினின் கருத்தை மையமாகக் கொண்ட கருத்துக்கள் ஒரு சோஸலிச ஜனநாயகத்தை அடைந்து கொள்வதற்கு இலங்கை ஒரு பன்முக ஐக்கிய அமைப்பினை உருவாக்குவதற்கும் இவ் ஒற்றையாட்சி ஆட்சிமுறையினை இல்லாதொழிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தது. இக்காலப் பகுதியில் இடதுசாரிகளோ ஒரு சோஸலிச முறையின் கீழேயே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றனர். அதாவது சோவியத் யூனியன் இதற்கு முன் உதாரணமாக காட்டப்பட்டது. இலங்கை இப்பொழுதும் ஒரே தேசியமாகும். அதனை பொருளாதார அடிப்படையில் பிரிப்பது பிழையாகும். ஒற்றையாட்சி அமைப்புக்குள் பன்மை தன்மையை பேணுதல் அவசியமாகும். இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை முதலாளித்துவ அரசியல் முறையின் மூலமாக தீர்க்க முடியாது. அதற்கு சோசலிஸ அமைப்புமுறை காணப்பட வேண்டுமென வலியுறுத்தினர் சோசலிஸ ஆட்சி இடம்பெற்ற பின் சமஷ்டிமுறை பற்றி பேசப்பட வேண்டுமென இங்கு வலியுறுத்தப்பட்டது. மேற்குறித்த வாத பிரதிவாதங்கள் தமிழர் மத்தியில் மேலும் விரக்தியினை ஏற்படுத்தியது. அதிகார பரவலாக்கல் என்ற கருத்துக்கு எதிராக திரும்பத்திரும்ப எதிரும் புதிருமான பல கருத்துக்கள் பல மட்டங்களிலிருந்து வெளியிடப்பட்டன.

இதன் பின் 1976ஆம் ஆண்டு சமஷ்டி கட்சி ஏனைய கட்சிகளுடன் பேரம்பேசி தமிழர் விடுதலை கூட்டணி என்ற அமைப்பினை ஏற்படுத்தியது. இது தமிழர்களின் பேரம் பேசும் விடயத்தில் மேலும் அரசியல் பலம்பெற

வழிவகுத்து. இதன் பின்னரேயே வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மூலம் தமிழர்கள் "தமிழீழம்" என்ற பிரகடனத்தை முன்வைத்தனர். இந்த ஆரம்பமே இலங்கையில் ஆயுத போராட்டத்துக்கு வழிவகுத்தது.

இவ்வாறு இலங்கை அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக தமிழர் ஏமாற்றப்பட்டனர். இதன் பின்னர் 89ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை–இந்திய உடன்படிக்கை அதிகாரபரவலாக்கல் வரலாற்றில் மிக முக்கிய மைல்கல்லாகும். இதுவே சட்டபூர்வமான 13ஆம் திருத்தச் சரத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றுபடவும் 8 மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கவும் வழிவகுத்தது. ஆனால் இந்த உடன்படிக்கை நேர்மையாக செய்யப்பட்ட உடன்படிக்கையல்ல. இது மாகாணங்களுக்கான அதிகாரங்களை அர்த்த புஷ்டியோடு வழங்கவில்லை. அப்படியிருந்த போதும் அதுவும் கூட முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. எந்த மாகாணத்துக்கு அதிகார பரவலாக்கம் செய்யப்பட வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவோ அங்கு அவ்வதிகாரம் பறிக்கப்பட்டுவிட்டது. எனவே, அதிகார பகிர்வு செயல்பூர்வமானதாக இருக்க வேண்டுமானால் அம்மாகாணம் சுயாதீனமாக செயல்படக்கூடியதாக இருக்க வேண்டும். இன்று மாகாண சபைகள் பாராளுமன்ற அனுமதியைப் பெற்றே செயல்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன. கிராம அபிவிருத்தி, காணி, சுகாதாரம் போன்றவற்றில் கூட சுயாதீனமாக செயல்பட முடியாத நிலை இங்கு காணப்படுகின்றது. எனவே இன்றைய அதிகார பகிர்வு யோசனை வலிந்து திணிப்பதாக அமையாது இனப்பிரச்சினைக்கான தீர்வாக அர்த்தபுஷ்டியுள்ளதாக அமைய வேண்டும்.

இன்று பொ.ச.ஐ.மு. அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகார பகிர்வு யோசனைகள் இதற்கு முன்பு வைக்கப்பட்ட யோசனைகளை விட மிகவும் முன்னேற்றகரமானது. இது அரசியலமைப்பு ரீதியில் பிராந்திய சபைகளுக்கு தெளிவான வகையில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வழிசெய்கிறது. ஆனால் இதனோடு இது நின்று விடாமல் தொழில் ரீதியாகவும் பதவி உயர்வு வழங்குவதில் தமிழர்களுக்கு மட்டும் சிங்கள மொழியில் தேர்ச்சி அவசியம் என்று கூறப்படவும் பல்கலைக்கழகங்களுக்கான தெரிவு தரப்படுத்தலின் மூலம் கட்டுப்படுத்தப்படுவது போன்றன இவற்றோடு நீக்கப்பட வேண்டும். இன்று நிலவும் மாகாண சபையை எடுத்துக் கொண்டால் ஒரு மருத்துவரையோ, அல்லது மருத்துவ தாதியைக் கூட இடமாற்றம் செய்வதற்கு மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரம் இல்லை.

பெருந்தோட்ட மக்களுக்களுக்கான எந்த விதமான அதிகாரங்களும் இந்த சபைகளுக்கு இல்லை. இதுபோல காணிகளை வாங்க, பராமரிக்க பங்கிட இம்மாகாண சபைகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. நிதித் தேவையென்றால் திறைசேரி முன் கையேந்த வேண்டிய நிலை மாகாணசபைகளுக்கு காணப்படுகிறது. இவ்வாறான காரணங்களே தமிழ் மக்களின் கோரிக்கைகளை பின்தள்ளி விட காரணமாக அமைந்திருக்கின்றது. இவ்வாறான முரண்பாடுகளை நீக்குமுகமாக இன்று ஐ.தே.க., பொ.ச.ஜ.மு. ஆகிய இரண்டும் அதிகார பகிர்வு யோசனையில் பெருமளவு ஒன்றுபட்டு நிற்கின்றன. இச்சந்தர்ப்பம் பயன்படுத்தப்பட வேண்டும். K.C. வியர் என்ற ஆசிரியர் அமெரிக்க சமஷ்டி பற்றி கூறியதை இங்கு நினைவுறுத்த விரும்புகிறேன். அமெரிக்க சமஷ்டியானது மத்திய அரசும் மாநிலங்களும் ஒன்றில் மற்றொன்று தங்கி இருக்கின்ற ஒன்றிணைக்கப்பட்ட அதிகாரமாகக் காணப்படுகின்றது. இந்த விடயம் காலம் சென்ற காமினி திஸாநாயக்க அவர்களால் நன்கு விளங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. எனவேதான் ஒன்றிணைக்கப்பட்ட (Dependant Consolidation) மத்திய அரசும் மாகாண அரசுகளும் அதிகார பகர்வினை மேற்கொள்ள வேண்டுமேன அவர் கூறினார்.

அதிகார பகிர்வு செய்யும் முறையில் ஒரு விடயம் புகுத்தப்படல் வேண்டும். பிராந்தியங்களில் வாழும் மக்கள், மத்திய அரசாங்கததில் பங்கெடுப்பதன் மூலம் மத்திய அரசில் தாமும் இணைத்து கொள்ளத்தக்க வகையில் உத்திகள் சேர்க்கப்பட வேண்டும். பிராந்தியங்களை இணைத்துக் கொள்வதென்பது தேசிய ரீதியிலான ஒன்றிணைவாகும். பிராந்திய மக்கள் மத்திய அரசாங்கத்துடன் தாம் தொடர்பு கொள்ள வேண்டுமென கூற வரும் போது, அது தலைநகரை வேறுபடுத்தி நோக்குவதாகவே அமையும்.

நாங்கள் இப்போது ஓர் இக்கட்டான சந்தர்ப்பத்தில் இருக்கின்றோம். இச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் மீண்டும் இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இவ்வாறான நல்லதோர் சந்தர்ப்பத்தை அடைந்துகொள்ள முடியாது. இதனை ஒவ்வொருவரும் கவனத்திற்கொண்டு செயல்பட வேண்டும். இதற்காக அதிகார பகிர்வு தொடர்பான அறிவினை சகல மக்களோடும் பகிர்ந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

* 'பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வு யோசனைகளின் சிறப்புக்களும் குறைபாடுகளும் : ஓர் ஆய்வு

** பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா
அரசறிவியற்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

I

இலங்கை இன்று எதிர் நோக்குகின்ற இன முரண்பாட்டிற்குச் சமாதானமாகத் தீர்வு காண்பதற்கு முன்னரும் தற்போதும் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் தற்போதைய பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன் வைத்திருக்கும் அதிகாரப் பகிர்வுக்கான யோசனைகள் ஒரு சட்ட ஆவணமாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் அறிமுகம் என்ற பகுதி இன முரண்பாட்டுக்கு சமாதான முறையில் தீர்வு காண முன்பு எடுக்கப்பட்ட முயற்சிகளை விபரிப்பதோடு தற்போதைய ஆவணம் சமாதானத் தீர்வொன்றின் மூலமாகவே இந் நெருக்கடிக்கு இறுதித் தீர்வைக் காணலாம் என்ற நிலையை இன்றைய அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் சரி, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் சரி, இலங்கை வாசிகளுள் பெரும்பான்மையோர் கொண்டுள்ள கருத்தும் இதுவே. சிங்களவர், தமிழர், சோனகர், மலாயர்கள், பறங்கியர் போன்ற பல்வேறு இனத்தவர்களும், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள் ஆகிய சகல மதத்தவர்களும் இக்கருத்தை அங்கீகரித்துள்ளனர். அத்தகைய அரசியல் தீர்வொன்றை வழங்கும் எண்ணத்துடனேயே அரசாங்கம் தத்துவப் பரவலாக்கல் செயற்றிட்டமொன்றுக்கான அதன் பிரேரணைகளை முன்வைத்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இவ் ஆவணம் இன முரண்பாட்டிற்குத் தீர்வு காண்பதற்கே முன்வைக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கத்தக்கதாகும். இத் தீர்வு யோசனைகள் அதிகாரத்தைப் பகிர்வதனையே முக்கியத்துவப் படுத்துவதால் முதலில் அதிகாரப் பகிர்வு என்றால் என்ன என்பதை நோக்குவோம்.

---

* Merits and Demerits of the Develution Proposals for the the P.A. Government

** Prof. Ambalavanar Sivarajah

II

அதிகார பகிர்வு பற்றி ஆராய்ந்து இலங்கையில் அதிகாரப் பகிர்வு என்ற நூலினை வெளியிட்ட பேராசிரியர் சூரியகுமாரன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> அதிகாரப் பரவலாக்கம் என்பது சில தெரிவு செய்யப்பட்ட கடமைகளை எல்லைப்புறங்களுக்கு, பிரதேசங்களுக்கு, மாவட்டத்திற்கு, நகரத்துக்கு அல்லது கிராமத்துக்கு வழங்குவதாகும். ஆனால் இது இரண்டு இயல்புகளைக் கொண்டது. முதலாவது இவை பெருமளவுக்கு சட்டம் ஒழுங்கு என்பவற்றைப் பராமரிப்பதோடு சம்பந்தப்பட்டவை என்பதோடு நிர்வாகக் கடமைகளுமாகும். இரண்டாவதாக மத்திய அரசாங்கத்தின் விருப்பத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட கடமைகளே இவை என்பதோடு பாராளுமன்றத்தின் சாதாரண சட்டங்களினால் காலத்துக்குக் காலம் இவற்றை மாற்றவும் முடியும்.
>
> அதிகாரப் பகிர்வு மேற்சொன்னவற்றிலிருந்து பெருமளவு வேறுபடுகிறது என்பதோடு அது மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை (பகிர்வதுமாகும்) பங்கிடுவதுமாகும். இவ்வதிகாரங்கள் அரசியல் யாப்பில் நிதி மூலவளங்களை ஒதுக்குவதோடு எந்த ஒரு பகுதியினதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கேற்ப மாற்றமுடியாததாகும். சில தேசீய கொள்கைகளை, பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்புகள், பணம் விசேட தேசீய மூலவளங்கள் போன்றவற்றில் மத்திய அரசாங்கத்துக்கு மாற்றமுடியாத முன்னுரிமைகள் உண்டு. அதே வேளை எல்லைப்புறமொன்றின் அதிகாரப் பரப்பு, மூலவளங்களை, கடமைகளை, பணத்தினை பயன்படுத்தும் அதிகாரங்களை மதிக்கும், ஆதரவளிக்கும் கடமைப்பாட்டுக்கு மத்திய அரசாங்கம் உட்படவேண்டும்.

ஆகவே, அதிகாரப் பரவலாக்கத்துக்கும் அதிகாரப் பகிர்வுக்கும் வேறுபாடுகளுண்டு என்பது தெளிவாகின்றது.

III

பிராந்திய சபைகளின் கட்டமைப்பு

சட்ட ஆவணத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒவ்வொரு பிராந்திய சபை உருவாக்கப்படும். இருந்தும் கொழும்பும் ஸ்ரீ ஜெயவர்தனபுரம் அடங்கிய தலமைநகர் பிரதேசம் மேற்குப் பிராந்திய சபையின் நிர்வாகத்திலிருந்து விலக்கப்பட்டு மத்திய அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும். பிராந்திய சபைத் தேர்தல்கள் தொடர்பான சட்ட விதிகளின் பிரகாரம் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் அங்கத்தவர்கள் மக்களால் தெரிவு செய்யப்படுவார்கள். ஒவ்வொரு பிராந்திய சபையும் எந்தப் பிராந்தியத்துக்கென ஸ்தாபிக்கப்படுகிறதோ அப் பிராந்தியத்தின் பரப்பளவு, சனத்தொகை என்பனவற்றைக் கவனத்தில் கொண்டு சட்டத்தினால் தீர்மானிக்கப்படும். அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களை அச் சபை கொண்டிருத்தல் வேண்டும். பிராந்திய சபையொன்று முன்னரே கலைக்கப்பட்டாலன்றி ஐந்து வருடங்களுக்குப் பதவியில் இருக்கும்.

IV

ஆளுநர்

ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒவ்வொரு ஆளுநர் அப் பிராந்திய முதலமைச்சரது ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படவேண்டும். 13வது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டு தற்போது நடைமுறையிலிருக்கும் மாகாணசபை ஆளுநர்களை ஜனாதிபதி நேரடியாகவே நியமிக்கிறார். இதனால் ஆளுநர் அவரின் பிரதிநிதியாகவே கடமையாற்றுகிறார். ஆனால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சட்ட ஆவணத்தின்படி முதலமைச்சர் தெரிவு செய்யும் ஒருவரே ஆளுநராக நியமிக்கப்படுவார். இது ஒரு முன்னேற்றகரமான விடயமாகும். ஆளுநராகப் பதவி பெறும் ஒருவர் ஐந்து வருடங்களுக்குப் பதவியிலிருப்பார். இவர் காலத்துக்குக் காலம் பிராந்திய சபையைக் கூட்டலாம். அவை சபை அமர்வினை இடைநிறுத்தலாம். பிராந்திய சபையைக் கலைக்கலாம். பிராந்தியம் ஒன்றுக்குள் இழைக்கப்பட்ட குற்றத்துக்காக தண்டனை வழங்கப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு வழங்கவும் தண்டனைக் காலத்தை குறைக்கவும் அதிகாரம் கொண்டிருப்பார்.

V

பிராந்திய சபையின் சட்ட ஆக்க அதிகாரங்கள்

ஒரு பிராந்திய சபையானது பிராந்திய நிரல் எனக் குறிப்பிடப்படும். இரண்டாம் அட்டவணையில் நிரல் 2 என வரிசைப்படுத்திக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அத்தகைய பிராந்தியத்திற்கு அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்கு சட்டமியற்றும் அதிகாரமுடையது. இந்நிரலில் சுமார் நாற்பத்தாறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உ+ம்: சுகாதாரமும் சுதேச வைத்தியமும், கமத்தொழிலும் கமநல சேவைகளும், பிராந்தியத்தின் கைத்தொழில் அபிவிருத்தி.

தற்போது நடைமுறையிலுள்ள மாகாண சபைகளுக்கு இத்தகைய சட்ட ஆக்க அதிகாரங்கள், இங்கே வரைவு நியதிச் சட்டமொன்று சட்டமாகும்போது பிராந்திய சபையொன்றினால் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு வரைபு நியதிச் சட்டமும், சபாநாயகரின் சான்றுரை பெற்றதன் பின்னர் நடைமுறைக்கு வரும்.

VI

பிராந்திய சபைகளின் நிர்வாக அதிகாரங்கள்

எந்த விடயங்களில் பிராந்திய சபைச் சட்டங்களை ஆக்குவதற்கு அதிகாரம் கொண்டுள்ளதோ அந்த விடயங்கள் தொடர்பாக அவற்றை நிறைவேற்றுவதற்கான நிர்வாக அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வதிகாரங்கள் முதலமைச்சரினதும் அமைச்சர்கள் சபையினதும் ஆலோசனைப்படி செயலாற்றுகின்ற ஆளுநரிடம் வழங்கப்படும். இதன்படி சபையினால் ஒன்றில் நேரடியாகவோ அமைச்சர்கள் அல்லது பிரதான அமைச்சர் மற்றும் அமைச்சர்கள் சபை அமைச்சர்கள் அல்லது கீழமைந்த அலுவலர்கள் மூலமாகவோ நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

VII

பிராந்திய சபையின் நீதித்துறை அதிகாரங்கள்

பிராந்திய சபைகள் பற்றிய சட்ட ஆவணம் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு மேல் நீதி மன்றம் இருத்தல் வேண்டும் எனவும் அத்தகைய ஒவ்வொரு மேல் நீதி மன்றமும் :

(அ) பிராந்தியத்தினுள் புரியப்படும் தவறுகள் தொடர்பாக இலங்கையில் நீதிமன்றத்தின் தொடக்கக் குற்றவியல் நீதி அதிகாரத்தினை பிரயோகித்தல் வேண்டும்.

(ஆ) பிராந்தியத்திலுள்ள நீதவான் நீதிமன்றங்களாலும் ஆரம்ப நீதி மன்றங்களாலும் விதிக்கப்பட்ட குற்றத் தீர்ப்புகள், மேன்முறையீடுகள் என்பவை தொடர்பாக மீளாய்வு அதிகாரத்தை பிரயோகத்தல் வேண்டும்.

(இ) பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யக் கூடியவாறான அத்தகைய வேறு நீதி அதிகாரங்களையும் தத்துவங்களையும் பிரயோகிக்க வேண்டும்.

மேலும் பிராந்திய நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பாக அத்தகைய ஒவ்வொரு மேல் நீதிமன்றமும் சட்டத்துக்கிணங்க பின்வரும் கட்டளைகளை வழங்க அதிகாரம் கொண்டுள்ளது:

(அ) பிராந்தியத்தினுள் சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆட்கள் தொடர்பில் ஆட்கொணர் எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளைகள்

(ஆ) (i) ஏதேனும் சட்டத்தின் கீழ், அல்லது

(ii) அப் பிராந்தியத்திற்கென்று தாபிக்கப்பட்ட பிராந்தியச் சபையினால் ஆக்கப்படும் ஏதேனும் அதிகாரத்தை அப்பிராந்தியத்தினுள் பிரயோகிக்கும் எவரேனும் ஆளுக்கெதிராக தன்னிடையிலான கட்டளைகள்

ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் பிராந்திய நீதிச்சேவை ஆணைக்குழுவொன்று இருத்தல் வேண்டும் என்றும் இவ் ஆவணம் குறிப்பிடுகின்றது. இது பிராந்தியத்தின் பிரதான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அரசியலமைப்பு பேரவையினால் நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற மூன்று நீதிபதிகளை அல்லது அமர்கின்ற நீதிபதிகளை கொண்டிருத்தல் வேண்டும். இப் பிராந்திய நீதிச்சேவை ஆணைக்குழு அப்பிராந்தியத்தினுள் நீதித்துறை அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றுக்குப் பொறுப்பாகவிருக்கும்.

ஆக நவீன அரசு அல்லது அரசாங்கத்தின் மூன்று முக்கியமான பிரிவுகளான சட்ட ஆக்கம், நிர்வாகம், நீதித்துறை என்பனவற்றில் அமைய இருக்கின்ற பிராந்திய சபைகள் போதியளவு அதிகாரம் கொண்டிருக்கும்

என்பது இவ் ஆவணம் சம்பந்தமான சிறப்பம்சங்களாகும். மேலும் இத்தகைய பிராந்திய சபைகள் பிராந்தியச் சட்டத்துறை தலைமையதிபதி, நிதி ஆணைக்குழு, பிராந்திய பொது சேவை ஆணைக்குழு; பிராந்திய பொது சேவை என்பனவும் அமைக்கப்பட இருப்பதும் சிறப்பான அம்சங்களாகும். குறிப்பாக நிதி ஆணைக்குழு மூன்று பிரதான சமூகங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களை கொண்டு அமையவிருப்பதும் அக்குழு பிராந்தியங்களின் தேவைகளைச் சமாளிக்கும் நோக்கத்திற்காகப் போதுமான அத்தகைய நிதிகளை அரசாங்கம் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீதும் அதன் கலந்தாலோசனையுடனும் குறிப்பிட்ட ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கும் என்பது மேலும் ஒரு சிறப்பம்சமாகும்.

இவ் ஆவணம் மேற்சொன்ன சிறப்பான அம்சங்களைக் கொண்டுள்ள போதிலும் பல குறைபாடுகளையும் கொண்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அவை எவை என்பதனை இங்கு நோக்குவோம்.

VIII

இவ் ஆவணத்தில் காணப்படும் குறைபாடுகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். (i) ஆவணத்தில் இடம்பெற்ற அம்சங்கள் தொடர்பான குறைபாடுகள் (ii) ஆவணத்தில் இடம் பெறாதவையினால் ஏற்படும் குறைபாடுகள். முதலில் ஆவணத்தில் இடம்பெற்ற குறைபாடுகளைக் கவனத்துள் எடுப்போம்.

முதலாவதாக அரச காணி என்பதை எடுத்துக் கொள்வோம். ஆவணம் ஒரு பிராந்தியத்தினுள் உள்ள அரச காணி பிராந்தியத்திற்குரியதாக்கப்பட வேண்டுமென்பதுடன் பிராந்திய நிரலில் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காகப் பிராந்திய சபையினால் கையாளப்படக்கூடியதாதலும் வேண்டும். ஆகவே காணி பிராந்தியத்துக்கென ஒதுக்கிய விடயம் என்பது தெளிவாகின்றது. இருந்த போதிலும் ஆவணத்தின் இன்னொரு பகுதி (24–3) ஒரு பிராந்தியத்திலுள்ள காணி ஒதுக்கிய விடயமொன்றுக்குத் தேவைப்படுகின்றதென மத்திய அரசு திருப்திப்படின், மத்திய அரசு, இயையான பிராந்திய நிர்வாகத்துடனான கலந்தாலோசனையின் பின்னர், மத்திய அரசுக்கு, அல்லது மத்திய அரசு குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய பகிரங்க அதிகார சபைக்கு, அத்தகைய நோக்கத்துக்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய காணியை கிடைக்கக் கூடியதாக்கும்படி பிராந்திய நிர்வாகத்தைத்

தேவைப்படுத்தலாமென்பதுடன், பிராந்திய நிருவாகம் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. இந்த சரத்தில் இரண்டு அம்சங்கள் அவதானத்துக்குரியவை. (1)தேவைப்படுதலாம் (2)இணங்கியொழுகுதல், இவை உண்மையில் காணி பிராந்தியங்களுக்கு பகிர்வு செய்யப்பட்ட விடயமல்ல என்பதையே காட்டுகின்றன. மேலும் ஆவணத்தின் 24-4 3ஆம் பிரிவு பிராந்தியங்களுக்கிடையேயான நீர்பாசனக் கருத்திட்டங்கள் ஏவல். இடப்பரப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியங்களுள் அடங்குகின்ற திட்டங்களாகும். இவை மத்திய அரசின் பொறுப்பாகும் எனக் குறிப்பிடுகிறது. இந்த விடயமும் குறைபாடானதாகும். ஏனெனில் இது மத்திய அரசு பிராந்திய சபையில் தலையிட வழிவகுக்கின்றது.

சட்டமும் ஒழுங்கமைதியும் பிராந்தியங்களுக்குப் பரவலாக்கப்பட்ட ஒரு விடயமாகும் என ஆவணம் குறிப்பிடுகின்றது. அதற்காக பிராந்திய பொலிசுச் சேவையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. அதேவேளை தேசிய பொலிசுச் சேவையொன்று இருத்தல் வேண்டுமென்றும் அதுவே ஒரு பிராந்தியத்திலிருந்து இன்னொரு பிராந்தியத்துக்குப் பொலிசுச் சேவையிலுள்ள அலுவலர்கள் இடமாற்றுதலுக்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடுகிறது. இது ஆவணத்தில் காணப்படும் ஒரு குறைபாடாகும். இந்த விதி பிராந்திய பொலிசுச் சேவையில் தேசீய பொலிசுச் சேவை தலையிட இடமளிக்கிறது.

பிராந்திய சபையொன்று சிறப்பாக இயங்குவதற்கு நிதிபலம் அவசியமாகும். ஆகவே குறிப்பிட்ட பிராந்தியத்தினுள் ஒரு பிராந்திய சபை வரி அறவிட அதிகாரம் வழங்கப்பட வேண்டும். ஆனால் அதிகாரப் பகிர்வு சம்பந்தமான ஆவணத்தின் 27ம் பிரிவு முதலாம் உபபிரிவு சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தவிர, வரியெதுவும் அறவிடப்படுதலோ அல்லது சேகரிக்கப்படுதலோ ஆகாது எனக் குறிப்பிடுகிறது. இது குறைபாடான ஒரு சரத்து ஆகும். மேலும் 27ஆம் சரத்து 2 உபபிரிவு (அ)சரத்து பிராந்திய சபையினால் திரட்டப்பட்ட எல்லாக் கடன்களும் அச்சபையினால் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பிராந்தியத்தின் திரட்டு நிதியம் என அழைக்கப்பட வேண்டிய ஒரு திரட்டு நிதியமாகவமைதல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. ஆகவே வரி அறவிடுதல் தொடர்பாக பிராந்திய சபைகளுக்கு எந்த வித அதிகாரத்தையும் இவ் ஆவணம் வழங்கவில்லை.

மேலும் இவ் ஆவணத்தின் 28ஆம் பிரிவு 3ஆம் உபபிரிவு சர்வதேசக் கடன் பெறுகைகள் மத்திய அரசினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய உரைகற்களுக்கும் வரையறைகளுக்கும் அமையவிருத்தல் வேண்டுமென்பதுடன் மத்திய அரசின் பொறுப்பாகும். அவற்றுக்கு தேவையாகும் எனக் குறிப்பிடுகிறது. அத்தோடு 283ஆம் பிரிவு 5ஆம் உபபிரிவு சர்வதேச மானியக் கொடைகளும் வெளிநாட்டு அபிவிருத்தி உதவியும் தொடர்பாகப் பிராந்திய நிருவாகங்களினால் பேச்சுவார்த்தைக்குப் பின் செய்துகொள்ளப்பட்ட எவையேனும் உடன்படிக்கைகள், அமைச்சரவை அமைச்சர்களினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்பட்டு குடியரசின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச உதவி பற்றிய தேசீயக் கொள்கைகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது. மேற்சொன்ன இரு சரத்துகளும் பிராந்திய சபை ஒன்றிற்கு சர்வதேச கடன் பெறுவதற்கும், சர்வதேச மானியக் கொடைகளைப் பெறுவதற்கும், வெளிநாட்டு அபிவிருத்தி உதவி பெறுவதற்கும் அதிகாரம் உடையதல்ல என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இதுவும் இவ் ஆவணத்தில் காணப்படும் ஒரு குறைபாடாகும்.

இவ் ஆவணத்தின் 26ஆம் பிரிவு 4ஆம் உப பிரிவு (அ) பிராந்திய நிருவாகம், குடியரசின் ஐக்கியத்துக்கும் இறைமைக்கும் தெளிவானதும் நிகழ்வுள்ளதுமான அபாயமாக அமைகின்ற ஆயுதப் புரட்சியை அல்லது கிளர்ச்சியை மேம்படுத்துகின்ற அல்லது அரசியலமைப்பை வேண்டுமென்றே மீறுகையில் ஈடுபடுகின்ற ஒரு நிலைமை எழுந்துள்ளதெனச் சனாதிபதி திருப்திபடின், சனாதிபதி, பிரகடனத்தின் மூலம் அப் பிராந்தியத்தினது நிருவாகத்தின் பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் அத்துடன் ஆளுநருக்கு, பிரதான அமைச்சருக்கு, அமைச்சர்கள் சபைக்கு அல்லது அப் பிராந்தியத்திலுள்ள ஏதேனும் குழுவுக்கு அல்லது அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் தாமே ஏற்றுக் கொள்ளலாம். இச் சூழ்நிலைகளில் சனாதிபதி பிராந்தியச் சபையை கலைப்பதற்கும் தத்துவமுடையவராதல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

அதிகாரப் பகிர்வு என்பது பல நோக்கங்களுக்காகக் கொண்டுவரப்படலாம். இலங்கையில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வுக்கான யோசனைகள் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதை ஆவணத்தினை மேற்கோள் காட்டி முன்பு கண்டோம். அக் கோணத்திலிருந்து பார்க்கும்

போது ஜனாதிபதிக்கு பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரத்தினை வழங்கினால் அவர் அதனை அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்தலாம் எனக் குறை கூறப்படுகிறது. கலைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது அவர் ஒன்றில் உருவாக்கப்படவிருக்கும் அரசியல் யாப்புச் சபையினதோ அல்லது உயர் நீதிமன்றத்தினதோ ஆலோசணையினைப் பெற்றுச் செயற்படுதலே பொருத்தமானதாகும்.

இனி இவ் ஆவணத்தில் இடம்பெறாதவை எவை என்பதைக் காண்போம். முதலாவாதாக பிராந்தியங்களுக்கு அதிகாரத்தினை பகிரும்போது அப்பிராந்தியங்கள் மத்திய அரசு மட்டத்தில் பிரதிநிதித்துவம் வகுத்தில் வேண்டும். அதற்கென பிராந்தியங்களுக்கு சம பிரதிநிதித்துவம் வழங்கத்தக்க ஒரு இரண்டாவது சபை அமைக்க இடமளிக்காமை ஒரு குறைபாடாகும். 1995ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 3ஆம் திகதி முதன் முதலாக ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதிகாரப் பகிர்வு யோசனைகள் அடங்கிய பொதியினை வெளியிட்டபோது அதில் தற்போதைய மாகாண எல்லைகளை மீள் பரிசோதனை செய்யவென ஒரு மாகாண எல்லைகளை மீள வரையும் ஒரு ஆணைக்குழு நியமிக்கப்படும் எனவும் அது தற்போதைய வட கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மீள அமைத்து இவை இரண்டும் இணைந்த ஒரு பிராந்திய சபையினை அதாவது கிழக்கில் வாழுகின்ற சிங்கள, முஸ்லீம் மக்களது நலன்களைக் கவனமாகக் கருத்தில் எடுத்து உருவாக்கும் எனக் குறிப்பிட்டிருந்தது. இந்த அம்சம் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட ஆவணத்தில் காணப்படாமையும் ஒரு குறைபாடாகும்.

IX

ஆகவே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பகிர்வு யோசனைகளில் சிறப்புக்களும் குறைபாடுகளும் உள்ளன என்பது தெரிகின்றது. இலங்கையின் அண்மைக்கால அரசியல் வரலாற்றில் இன முரண்பாட்டிற்கு தீர்வு காண்பதற்காக பல யோசனைகள் முன்வைக்கப்பட்டன. உ+ம் : 1987ஆம் ஆண்டின் மாகாண சபை அமைப்பு ஆனால் அவை குறைபாடுகள் உடையன என்பதால் தமிழ் மக்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் அவை ஏற்புடையதாக அமையவில்லை. அவற்றோடு ஒப்பிடும்போது தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் முன்னேற்றகரமானவை. இதனை ஒரு முதற்படியாகக் கொள்ளலாம். ஆனால். அதே வேளை இந்த யோசனைகள் பல குறைபாடுகளையும் கொண்டுள்ளன.

அக்குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும். அத்தோடு இவ் யோசனை சட்ட மூலமாக நிறைவேற்ற முன்பு தமிழ் அரசியல் அமைப்புகள் அனைத்தினதும் ஆலோசனைகளைப் பெற்று அவற்றின் ஆதரவுடனேயே நிறைவேற்ற வேண்டும். இல்லாவிடின் இவற்றை பின்னர் நடைமுறைப்படுத்த முடியாது இருக்கும்.

* சமத்துவமற்ற சமஷ்டி முறை மூலமாக மட்டுமே ஐக்கிய இலங்கைக்குள் உட்பட்டதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.....!

** பேராசிரியர். ஏ.ஜே. வில்சன்

எம்முடைய இலக்குகள் கவனமான முறையில் இப்போது வரையறுக்கப்பட்டுள்ளன என யாராவது எண்ணலாம். சட்டசபையில் ஐம்பதுக்கு ஐம்பது பிரதிநிதித்துவம் கேட்டு நடத்தப்பட்ட போராட்டங்களினூடாக நாம் வந்துள்ளோம். பின்னர். தமிழரசுக் கட்சியின் தலைமையின் கீழ் 1949முதல் 1977 வரையில் சமஷ்டி என்ற உருவம் எம்மீது வீசப்பட்டது. எமது தலைமைகள் இரண்டு உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன. பண்டா-செல்வா ஒப்பந்தம் 1957இல் கைச்சாத்திடப்பட்டது. டட்லி-செல்வா ஒப்பந்தம் 1965இல் கைச்சாத்திடப்பட்டது. சிங்கள தீவிரவாத சக்திகளிடமிருந்து உருவான எதிர்ப்பின் காரணமாக இவற்றில் எதுவுமே எந்தப் பலனையும் தரவில்லை.

இதனால் 1977இல் தமிழ் ஈழத்தின் இளைஞர்கள் கடல் போன்ற இந்தப் பிரச்சினைகளுக்கு எதிராக ஆயுதமேந்தினார்கள். சிங்களத் தலைமைத்துவமும் எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே இதனை ஒடுக்குவதற்காக ராணுவ முஸ்தீபுகளை மேற்கொண்டது. 1987 ஜூலையில் ஏற்பட்ட ஜயவர்தன-ராஜீவ்காந்தி ஒப்பந்தத்தையும் அதனுடன் இணைந்து வந்த இந்தியத் தலையீட்டையும் விட வேறு எந்தவிதமான ஆக்கபூர்வமான பலனையும் இந்த ராணுவ நடவடிக்கைகள் கொண்டுவரவில்லை.

துரதிர்ஷ்டமாக தமிழர்கள் உண்மையாகவே கோருவது என்ன என்பதையிட்டு சிங்கள மக்கள் இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள அம்சங்களை மனப்பூர்வமாக நிறைவேற்றமாட்டார்கள் என்ற தமிழர்களிடம் காலங்காலமாக இருந்து வரும் சந்தேகம்கூட ராஜீவ் காந்திக்குத் தெரிவிக்கப்படவில்லை. இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாதது ஆச்சரியப்படத்தக்க ஒரு விஷயமல்ல.

---

* Resolution of Ethnic Conflict through on Assymetrical Federetion with United Sri Lanka.

** Prof. A. J. Wilson
Head. New Pronwick University - Canada.

மத்தியஸ்தத்திற்கான ஆவணம்!

இந்தக் குறைபாடுகளின் மத்தியிலும் இறைமையுள்ள இரு நாடுகளால் கையொப்பமிடப்பட்ட ஓர் ஆவணமே எம்மிடமுள்ளது. சர்வதேச சமூகத்தின் உறுப்பினர்கள் தலையீட்டைத் தெரிவு செய்யும்போது ஆவணத்தை மத்தியஸ்தத்திற்கான ஓர் அடிப்படையாக சர்வதேசச் சட்டத்தில் நாம் பயன்படுத்த முடியும். அத்துடன் எதிர்காலத்தில் இந்தியத் தலையீடு பற்றிய அச்சமுமில்லை. அவர்கள் தமிழர்களுக்கு ஆதரவாகவே இதனை மேற்கொள்வார்கள். ஜெயலலிதாவோ, நரசிம்மராவோ எப்போதும் இருக்கப் போவதில்லை.

எனவே, எம்முடைய இலக்கு இரண்டு அடிப்படைகளிலானதாக இருக்க வேண்டும். சர்வதேச சமூகத்தின் மீது நாம் மேலும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும். இரண்டாவதாக, தமிழ்நாட்டுடன் உள்ளதைப் போல அதிகளவிலான நல்லுறவை புதுடில்லியுடன் வளர்த்துக் கொள்ளக் கூடாது. உலக சரித்திரப் போக்கு தமிழ்நாடு தமிழ் ஈழ நல்லுறவு அபிவிருத்தியடையும் என்பதை உறுதி செய்கின்றது. 10 முதல் 50 வருட காலம் வரையில் அது எங்கேயும் செல்லலாம். ஆனால் வெற்றியை நாம் பெறுவோம். இதனையடைவதையிட்டு எந்த அச்சமும் இல்லை. இலங்கை அரசாங்கம் கொள்வனவு செய்து கொண்டிருக்கும் சுப்பர் சோனிக் ஜெட் விமானங்களினாலும் கனரக வாகனங்களினாலும் அதனைத் தடுத்து நிறுத்த முடியாமலேயே இருக்கும்.

உண்மையாக வேண்டுவதென்ன?

தமிழர்கள் உண்மையாக வேண்டுவது என்ன? என்ற என்னுடைய விடயத்திற்கு நான் இப்போது வருகின்றேன். இந்த விடயத்தைப் பொறுத்தவரை சிங்களவர்கள் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார்கள் என நான் நினைக்கின்றேன். அவர்கள் ஏன் இந்த விதமாக நடந்து கொள்கின்றார்கள்? பெரும்பான்மை இனக் குழு என்ற முறையில் தமக்குள்ள சாதகமானவைகளை அதிகரிப்பதற்கு அவர்கள் முன்னிற்கிறார்கள். 20களின் ஆரம்பத்தில் இலங்கை தேசிய காங்கிரஸிலிருந்து சேர். பொன்னம்பலம் அருணாசலம் வெளியேறுவதற்குத் தீர்மானித்த போது இது வெளியானது. கலக்கப்படாத பிராந்திய பிரதிநிதித்துவத்தையே சிங்கள அரசியல்வாதிகள் விரும்பினார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் சர்வஜன வாக்குரிமையை எதிர்த்தார்கள்.

சலுகைகளைக் கொண்டுள்ள சில சிங்களவர்களுக்கு மட்டுமே பிரதேசத்தில் பொரும்பான்மையைக் கொண்டுள்ளதற்கான இந்தச் சலுகை மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டுமென அவர்கள் கோரினார்கள். அதாவது, வரையறுக்கப்பட்ட வாக்களிப்பு உரிமைகள், சொத்துக்களின் உரிமையாளர்கள் கல்வியறிவுள்ளவர்களுக்கே மட்டுமே வழங்கப்பட வேண்டுமென அவர்கள் கோரினார்கள். இந்த பிரதான நோக்கத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டவையாகவே இருந்தன. வடக்கு-கிழக்கு தமிழர் தாயக இணைப்பு அதனுடன் கொழும்புக்கு உள்ள தொடர்பு என்பதே அது. இந்தவிதமான ஒரு உடன்படிக்கை மூலம் இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டைப் பாதுகாத்திருக்க முடியும். மீண்டும் ஒரு முறை சிங்களப் பெரும்பான்னைமின மக்கள் இந்நாட்டின் ஒரேயொரு உரிமையாளர்கள் தாமே என்பது போல நடந்து கொண்டனர். இன்று அவர்கள் முடிவைக் காண முடியாத தமிழர்களின் எதிர்ப்புக்குமுகம் கொடுத்து வருகின்றார்கள். இது தமிழர்களுக்குக் கூட பயங்கரமான ஓர் உண்மை நிலைதான். இதற்கு என்ன செய்வது?

பல தமிழ்க் குழுக்களாலும், சிங்களவர்களாலும் முன்மொழியப்பட்ட பல தீர்வு யோசனைகளை நாம் கண்டு வந்துள்ளோம். நோர்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற வெளிநாடுகள் கூட இப்பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்வதற்கான தமது விருப்பத்தை வெளிமிட்டிருந்தன. தமிழர்கள் வேண்டுவது என்ன என்பதை இந்த நாடுகள் அனைத்தும் அறிய விரும்புகின்றன.

ஒருமைப்பாடான அரசின் கீழ், சமஷ்டி அல்லது பிராந்திய தன்னாதிக்கம் என்ற எண்ணக்கரு ஒரு நடைமுறைச் சாத்தியமான நியாயமான தீர்வாக ஒரு காலத்தில் காணப்பட்டது. ஆனால் இப்போது பெருந்தொகையான தமிழர்களின் உயிர் இழப்புக்கள், சொத்திழப்புக்கள், விமானக் குண்டு வீச்சுக்கள். கடற்படைத் தாக்குதல்களின் பின்னர் இந்தியாவில் உள்ளதைப் போன்ற ஒரு சமஷ்டி அமைப்பை ஏற்றுக் கொள்வது கடினமானதாகவே இருக்கும்.

இந்திய யூனியனில், புதுடில்லியிலுள்ள சமஷ்டி அரசானது, குறிப்பிட்ட சில காரணங்களுக்காக ஒரு மாநில அரசைக் கலைத்து, மாநில தேர்தல் நடைபெறும் வரை ஜனாதிபதி ஆட்சியை அமுல் செய்வது சாத்தியமானதாக இருக்கலாம். ஆனால், இலங்கையில் அரசியலமைப்பு ஏற்பாடுகள் இதற்கும் மேலாக செல்கின்றது. அண்மைக்காலத்தில் இந்த

நாட்டை அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சி செய்து வரும் அரசுக்கு இது சாத்தியமாகவே இருக்கும். இவ்வாறான நிலையில் சமஷ்டி என்பது அர்த்தமற்றதொன்றாகவே இருக்கும்.

அரசியலமைப்பு நீதிமன்றம்

மேலும் அதிகளவு செலவாகும் வழக்கு விவாதங்களுக்குள்ளும் சமஷ்டி உள்ளாகின்றது. தீர்ப்பு சிங்கள அரசாங்கத்திற்குச் சாதகமாகவே அமைகின்றது. பாகுபாடான நீதித்துறை இருக்கும் வரையில் சமஷ்டி முறை அர்த்தமுள்ளதாக இருக்காது. இவ்வாறான அரசியல் தீர்மானங்களை மேற்கொள்வதில் சம்பந்தப்பட்டுள்ள நீதிமன்ற நீதிவான்களில் ஐம்பது வீதமானவர்கள் தமிழ்ப் பகுதிகளிலிருந்து பிரேரிக்கப்படுபவர்களாக இருப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இதனைத் தவிர்த்துக்கொள்ள முடியும். இதற்கான் தனியான அரசியலமைப்பு நீதிமன்றமொன்றுகூட இருக்க முடியும்.

சிங்கள அரசாங்கம் தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டால், நாம் தொடர்ந்தும் ஓர் ஐக்கியப்பட்ட நாடாகவே இயங்க முடியும். சிங்கள மாகாணங்களுக்கு மாகாண சபைகள் இருப்பது அர்த்தமற்றது. சமஷ்டி அல்லது அதிகாரப் பகிர்வு, அல்லது பிராந்திய சுய அதிகாரம் ஆகிய எண்ணக் கருக்களில் சிங்கள மக்கள் எந்தவிதமான அக்கறையும் காட்டவில்லை. தமிழர்கள் மட்டும்தான் தமது அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரு மூலமாக சுய அதிகாரத்தில் அக்கறை காட்டினார்கள். சிங்களப் பேரினவாதிகள் பிரசாரம் செய்து வருவதற்கு முரணான இன்றைய நிலைமையில் தமிழர்கள் தமிழ்நாட்டுடன் ஒரு விசேடமான உறவைக் கொண்டிருக்கவிரும்பவில்லை. ஆனால் சிங்களத் தலைமை இணக்கமொன்றிற்கு வராத, சமாதானத்தை ஏற்காத நிலைமையிலிருப்பதை நிரூபித்தால், அவர்கள் அவ்வாறான ஒரு நிலைமைக்குத் தள்ளப்படலாம்.

பொறாமையின் காரணம்!

ஆனால் சிறுபான்மையினருடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு அவர்கள் விரும்பவில்லை. இதற்கான காரணம் என்ன? ஒரு விதத்தில் இதற்கு சமூகப் பொறாமை தான் காரணம். தமிழர்கள் பெருமளவில் மத்தியதர வேலைகளைப் பெற்றிருந்தார்கள். தமது

பகுதிகளிலிருந்த மிஸனரி கல்வித் திட்டங்களைத் தமிழர்கள் சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் அரசாங்க வேலைகளையும் ஏனைய துறைசார் வேலைகளையும் பெற்றுக் கொண்டனர். தமிழர்கள் சிங்களவர்களிடம் அவர்களுடைய பங்கைக் கவர்ந்து கொள்ள முயலவில்லை.

பாரபட்சமாக நடத்தப்படுவதிலிருந்து தமிழர்களைப் பாதுகாப்பதற்காகவே ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால், பிரிட்டிஷ் ஆட்சி பழமைவாத இனவாத சிங்களத் தலைவரான டி.எஸ். சேனநாயகாவிடம் இந்த நாட்டை ஒப்படைத்தது.

டி. எஸ். சேனநாயக்கா இந்தியத் தமிழர்களுடைய வாக்குரிமையைப் பறித்ததுடன் சட்டசபையில் அவர்களுக்கிருந்த ஏழு ஆசனங்களையும் பறித்துக் கொண்டார். இதே வேளையில் தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியேற்றும் ஒரு கொள்கையையும் அவர் மேற்கொண்டார்.

அதிர்ஷ்டவசமாக தமிழ் மக்களுக்கு தமிழரசுக் கட்சி மாற்றீடான தலைமைத்துவம் ஒன்றை வழங்கியது. தமிழ்க் காங்கிரஸ். டி.எஸ். சேனநாயக்காவினால் ஏமாற்றப்பட்டிருந்தது.

1956இலிருந்து 1983வரையில் சிங்களப் பேரின வாதத்திற்கெதிராக தமிழரசுக் கட்சி அகிம்சைப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டது. ஆனால், அதில் அவர்கள் வெற்றி பெறவில்லை. ஆயுதங்களை ஏந்துவதென்று தமிழ் இளைஞர்கள் தீர்மானித்தது எதிர்பாராததும் முன்கூட்டியே கூறமுடியாததுமான ஒரு சம்பவமாகும்.

ஆயுதப் போராட்டம் ஏன் ஆரம்பித்தது?

இருபது வருடங்களுக்கு முன்னர், இந்நாட்டில் ஒருவராவது இவ்வாறான ஒரு சூழ்நிலை உருவாகும் என எண்ணியிருக்கமாட்டார். தமிழர்கள் எவ்வளவு அகௌரவத்தையாவது அனுபவிக்கட்டும் என்பதே சிங்களவர்களின் நம்பிக்கையாகவிருந்தது. தமிழ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஐம்பது அல்லது அறுபது இலட்சம் தமிழர்களைப்பற்றி எதுவும் பேசப்படவில்லை. இரண்டாம் தரப் பிரஜைகளாக அடக்கி

ஒடுக்கப்படுவதைவிட ஆயுதங்களை நாடுவதே சிறந்ததென அமைதியான அடக்கப்பட்ட தமிழர்கள் தீர்மானித்தது தமிழக மக்களைக் கிளர்ந்தெழச் செய்தது.

எனவே தமிழர்கள் உண்மையாக வேண்டுவது என்ன என்று எமது வினாவுக்கான பதில் நேரடியானது. இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. சிங்களவர்களைப் போல சம உரிமை தமக்கும் வேண்டும் என அவர்கள் கேட்கின்றார்கள்.

பாரம்பரிய பிரதேசம்

சமத்துவமான பிரஜைகளாகுவதற்கு, சிங்கள மொழியைப் போல தமிழ் மொழிக்கும் சமத்துவ அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். அதிஷ்டவசமாக நாம் புவியியல் ரீதியாகத் தொடர்புபட்ட ஒரு பிரதேசத்தைக் கொண்டுள்ளோம். மொழியும், பிரதேசமும் ஒன்றாகவுள்ளது. தமிழ் அங்கீகரிக்கப்பட்டு 70வீதமான முஸ்லிம்கள் இன்று வாழ்வது போல நாடு முழுவதும் சிங்கள மொழி பேசும் பகுதிகளுக்குள் நாம் வாழ்வதாக இருந்தால், நாம் சிங்கள மயமாக்கப்பட்டு காலப் போக்கில் அதனை ஏற்றுக் கொண்டுவிடும் நிலைமையே இருக்கும். இதனை ஏற்றுக்கொள்வது சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக இருக்காது உண்மையில் சிங்களத்தில் மிகுந்த திறமையை நாம் பெற்றிருந்தால்கூட அது ஏற்றுக் கொள்ளப்படுவதாக இருக்காது. அதனால் எமது இரண்டாவது கோரிக்கை தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம், ஏழு சிங்கள மாநிலங்களுடன் சமஷ்டியாக்கப்பட வேண்டும்.

நன்றி வீரகேசரி
09-05-1993

* ஏன் அதிகாரப் பகிர்வு இலங்கைக்கு அவசியம்?

** கலாநிதி ஏ. எம். நவரத்ன பண்டார
அரசறிவியற்துறை,
பேராதனைப்பல்கலைக்கழகம்

இன்று இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினையில் தனிநாட்டுக் கோரிக்கை ஓர் அரசியல் பிரச்சினையாகும். நாம் இன்று அந்த அரசியல் பிரச்சினைக்கான விளைவுகளை அதன் காரணத்துடன் மட்டுமன்றி எல்.ரீ.ரீயுடன் எதிர்கொள்கின்றோம். அண்மைக்கால வரலாற்றுடனும் சிங்கள மக்களின் வரலாற்று நினைவுகளுடனும் மட்டுமன்றி அண்மைகால வரலாறும் இதற்கு காரணமாகும். இன்று அரசினால் முன்வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்வுத் திட்ட ஆலோசனைகள் சிங்களத் தேசியவாதத்துடன் தொடர்பான வரலாற்று நினைவுகளினூடாகவே விமர்சிக்கப்படுகின்றன.

இன்று முன் வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத்திட்டத்தினால் நாடு எட்டுத் துண்டங்களாகப் பிளவுபட்டுவிடும் என்பது அந்த விமரிசனங்களுள் ஒன்றாகும். இது எமது நாடு; இந்நாடு எமக்கேயுரியது; இந்நாட்டில் நாம் நீண்ட காலம் வாழ்கின்றோம் என்ற மனப்பாங்கில் இருந்து கொண்டே எட்டுத் துண்டங்கள் என்ற கருத்தும் கலந்துரையாடலும் இன்று இடம்பெறுகின்றது. இந்த வரலாற்று வரையறையிலிருந்து எள்ளளவு மாற்றமும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற கருத்து இவர்களிடம் ஆழப்பதிந்துள்ளது.

பிளவுற்றுள்ள நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காக வெளிப்படையாகவும் நேர்மையான உள்ளத்துடனும், மன தைரியத்துடனும் முன்வைக்கப்பட்டுள்ள ஓர் அரசியல் தீர்வு என்றே நான் இந்த ஆலோசனைகளை கருதுகின்றேன். பதவியில் அமர்ந்திருக்கும் அரசாங்கம் தனது பிரபல்யம், அதிகாரத்தில் தொடர்ந்திருக்கும் ஆவல் ஆகிய விடயங்களை மறந்து, விமரிசனங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதை வெளிப்படையாகத் தெரிந்து கொண்டே எவ்விதத் தயக்கமும் இன்றி இந்த அரசியல் திட்டத்தினை முன்வைத்துள்ளது.

---

* Why Devolution is important in Sri Lanka?
-Dr. A. M. Nawaratnabandara.

** தமிழாக்கம் : திரு. என். பீ. எச். சைபுதீன்
(விரிவுரையாளர் அரசறிவியற்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)

1987இல் மாகாண சபை முறை எவ்வாறு அறிமுகம் செய்யப்பட்டது என்பதை நாம் அறிவோம். அந்த நினைவிலிருந்து பார்க்கும் போது இது நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் ஒரு திட்டமாகும். 1957 பண்டாரநாயக்கா–செல்வநாயகம் ஒப்பந்தம் 1968 டட்லிசேனநாயக்கா–செல்வநாயகம் ஒப்பந்தம் ஆகிய இரண்டுக்கும் முறையே அவற்றோடு தொடர்புடைய பிராந்திய சபை மாவட்ட சபை போன்ற ஆலோசனைகளுக்கும் என்ன நிகழ்ந்தது என்பதை நாம் அறிவோம். அந்த அனுபவங்களில் இருந்து பார்க்கும் போது, இந்த அரசாங்கம் தனது செல்வாக்கை சூதாட்டம் ஒன்றில் பந்தயம் பிடிப்பது போன்றே அரசியல் திட்டத்தினை முன் வைத்துள்ளது.

சுதந்திரத்துக்குப் பிற்பட்ட கால எமது வரலாற்றில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பி, நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு உலக அபிவிருத்தியுடன் நடைபோடக் கூடிய ஓர் ஐக்கிய தேசம் பற்றிய எண்ணக்கருவுக்கு இந்த அரசியல் தீர்வு ஆலோசனைகளின் மூலம் ஒரு பலமான தளம் அமைக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் இனப் பிரச்சினை என்ற ஒன்று காணப்படுவதில்லை என்று சிலர் கூறுகின்றனர். அவர்களுக்கு அரசியல் தீர்வு ஆலோசனைகள் பதிலாக அமையாது.

இன்று எமது நாட்டில் நிலவும் பிரிவினைவாதப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதனைக் கருத்திற் கொள்ளும்போது நாம் வரலாற்றையும் சற்றுப் பின்னோக்கிப் பார்க்க வேண்டும். 1910ஆம் ஆண்டளவிலிருந்து அண்மைக்கால வரலாறு வரையுள்ள காலப்பகுதியை திரும்பிப் பார்ப்பின், அதிகாரத்தில் ஒரு பங்கினைப் பெறுவதில் அல்லது அரசியல், பொருளாதார, சமூக அதிகாரத்தினைத் தமக்கிடையே பகிர்ந்து பிரயோகிப்பதில் பெரும்பான்மை இனத் தலைவர்களுக்கும் சிறுபான்மை இனத்தவர்களுக்குமிடையில் தொடர்ச்சியாகப் பிரச்சினைகள் நிலவி வந்துள்ளமையை அவதானிக்கலாம். ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் 50 : 50 கோரிக்கையை தமிழ் தலைவர்கள் ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தின் கீழ் அரசியல் அதிகாரத்தை கூட்டாகப் பகிர்ந்து கொள்வதற்காக மேற்கொண்ட இறுதி முயற்சி என்ற வகையிலேயே நான் காண்கின்றேன். குடியேற்ற ஆட்சிக் காலத்தில், அரசியல் யாப்புச் சீர்திருத்தப் போராட்டத்தின் போது, சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் கூட்டாக அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும்

ஓர் ஆட்சி முறையை ஏற்படுத்தவே அவர்கள் தொடர்ந்தும் முயற்சி செய்தனர். அவர்கள் பிரதிநிதித்துவத்தினூடாக இந்நிலையை உருவாக்க முயன்றனர். 1910–11ஆம் ஆண்டு காலப்பகுதியில் சட்டத்துறையில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தின்படி சிங்கள, தமிழ் பிரதிநிதித்துவத்தை நிலைநிறுத்த முயன்றனர். 1921ஆம் ஆண்டுவரை தமிழ் தலைவர்கள் பிரதிநிதித்துவத்தில் 1 : 2 என்ற விகிதத்தை முன்வைத்தனர். அதாவது இரண்டு சிங்களவர்களுக்கு ஒரு தமிழர் ஆகும். 1921–1939 வரை இச்சட்டத்துறையில் மூன்று சிங்களவர் இடம்பெற்றால் இரண்டு தமிழர்கள் இடம்பெற வேண்டும். அதாவது 3 : 2 என்ற கோரிக்கையை முன்வைத்தனர். ஜீ. ஜீ பொன்னம்பலம் சிங்களவர் 50 பேராயின் ஏனைய சகல சிறுபான்மையின்ரும் 50 பேர் இடம்பெற வேண்டும் என்று கோரினார். இரு பகுதியினரும் ஒன்றாக இணைந்த ஓர் அரசாங்கத்தை அமைப்பதையே அவர் நோக்கமாகக் கொண்டிருந்தார். இதன்மூலம் அரசாங்கத்தை அமைப்பதில் பெரும்பான்மையினரும், சிறுபான்மையினரும் தொடர்புபடுத்தப்படுவர்.

> டொனமூர் காலத்தில் எமது நாட்டில், சிங்களவரும், தமிழரும் இணைந்து செயற்பட்ட ஓர் ஆட்சிமுறையே நிலவியது. அதனால் டொனமூர் அரசியற் திட்டம், குடியேற்றாட்சிக் காலத்தில், அதிகாரப் பரவலாக்கம் பற்றிய கருத்தினை முன்னெடுத்துச் சென்ற ஒரு முறை என்று கருதப்படுகின்றது. அங்கு பெரும்பான்மையினரும், சிறுபான்மையினரும் அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் காணப்பட்டன. இரு பகுதியினரும் உடன்பாட்டின் அடிப்படையில் நாட்டின் ஆட்சியைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை அங்கு தோன்றியது. இலங்கை போன்ற நாடுகளுக்குப் பொருத்தமான ஜனநாயகமுறை, பெரும்பான்மையினரையும், சிறுபான்மையினரையும் ஒன்றிணைக்கின்ற இருபகுதியினரையும் பங்குபெறச் செய்கின்றவகையில் அரசாங்கத்தின் அதிகார அமைப்பை ஒழுங்குபடுத்தும் முறையாகும்.

ஆனால், நாம் ஜனநாயகத்தை அவ்வாறு பார்க்கவில்லை. தலைகளை எண்ணிப்பார்த்து அதிகமானவர்கள் எப்பகுதியிலோ அவர்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்ற பார்வையிலேயே ஜனநாயகத்தை நோக்கினோம். அம்முறையினால் சிறுபான்மையினர் எப்பொழுதுமே வெளியில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் விளைவே சிறுபான்மையினர் பிரதான அரசியல் நீரோட்டத்திலிருந்து தள்ளப்பட்டுள்ளமையாகும்.

1972இல் முதலாம் குடியரசு யாப்பும் பெரும்பான்மையினரின் அரசாங்கத்தையே நிறுவியது. அதன் விளைவே, இந்த அரசாங்கத்தில் இருப்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்து தனி இராச்சியம் ஒன்றைப் பெற வேண்டும் என்று தமிழ் சிறுபான்மையினர் ஆயத்தமாகியமையாகும். இதன் பின்னரே எமது நாட்டில் நெருக்கடி நிலைகள் தோன்றி வளர்ச்சியடைந்துள்ளன.

1948இல் சுதந்திரத்தின் பின்னர் நாம் 50 : 50 கோரிக்கையை நிராகரித்துவிட்டு, ஏகாதிபத்தியவாதிகள் எமக்குக் கற்றுத் தந்த மத்தியமயப்படுத்தப்பட்ட அரசாங்கம் பற்றிய கருத்துடன் நாம் செயற்பட்டோம். இந்தப் பயணத்தின் போதே பிரஜாவுரிமைச் சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டன. இதன்பின்னர் தமிழ்த் தலைவர்களும் தமது அரசியற் சுலோகத்தை மாற்றிக் கொண்டனர். அங்குதான், சமஷ்டி முறையின் மூலம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் கட்சிகள் முன்வைத்தன. தமிழ் மாநிலம், சிங்கள மாநிலம் என்ற இரண்டு மாநிலங்கள் உருவாக்கப்பட்டு, ஒரு மத்திய அரசின் கீழ் நாம் ஒன்றிணைந்து வாழ வேண்டும் என்ற கருத்தினை தமிழரசுக் கட்சி தொடர்ச்சியாக முன்வைத்து வந்தது. தமிழ் தலைவர்களின் பாராளுமன்ற உரைகள் அடங்கிய ஹன்சாட் ஏட்டினைப் புரட்டிப் பார்த்தால் இதனை உறுதி செய்துகொள்ளலாம்.

திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா தமிழர் கேட்ட சமஷ்டியை விடப் பலம் குறைந்த ஒரு சமஷ்டி முறையை முன்வைத்து உடன்பாட்டுக்கு வர முயன்றார். வடக்கு, கிழக்கு நிருவாகத்தில் அவர்களுக்குப் பங்குபற்ற இடமளித்து தமிழ் மொழியை அவர்களது நிருவாக மொழியாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பளித்துத் தமிழ்த் தலைவர்களை வெற்றி கொள்ள முயன்றார். தமிழ் தலைவர்களும் இந்த ஏற்பாட்டினை விரும்பி ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட்டு ஏற்றுக் கொண்டனர். ஆனால் அவ்வொப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது. அரசாங்கமே அதைக் கிழித்தெறிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணி தற்போது முன்வைத்திருக்கும் அரசியல் தீர்வு ஆலோசனைத் திட்டத்தின் முக்கியத்துவம் என்னவெனில் அதனை மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்புக்குச் சமர்ப்பித்து மக்களின் அங்கீகாரத்தைப் பெற இருப்பதாகும். இதற்கு முன்னர் ஒரு போதும்

இவ்வாறான ஒரு முக்கிய விடயத்தினைப் பற்றிய தீர்மானத்தினை எடுக்கும் சந்தர்ப்பம் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை. இன்று எமது மக்கள் 1950, 1960 தசாப்தங்களில் நிலவிய மனோநிலையில் வாழவில்லை. அதனைவிட முன்னேறிய மனப்பக்குவத்துடன் வாழ்கின்றனர். இந்த அரசியல் தீர்வு பற்றி மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்களின் மூலம் ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு அவர்களுக்கு இடமளிக்க வேண்டும்.

எமது நாடு இன்று உளரீதியாகப் பிளவுபட்ட நாடாகும். புதிய அரசியல் பொதியினால் நாடு பிளவுபடுத்தப்பட்டு விடும் என்ற கருத்தினை முன்வைப்பதற்கு முன் ஒரு விடயத்தினை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். அதுவே உளரீதியாக இந்நாடு பிளவுபட்டுள்ளது என்பதாகும்.

அரசியல் தீர்வு ஆலோசனைகளை நிறைவேற்ற வேண்டுமாயின் பிரிவினைவாதத்தை ஏற்றுள்ளவர்கள் அதனைக் கைவிட வேண்டும். அவ்வாறின்றேல், இந்தத் திட்டமும் மீண்டும் எழுத்தளவில் மட்டும் இடம்பெறும் ஓர் ஆவணமாகவே மாறிவிடும். இன்று நடைமுறையிலுள்ள மாகாண சபைகள் ஒரு வெள்ளை யானை (வீண் விரையம்) என்று வர்ணிக்கப்படுகின்றது. வடக்கு கிழக்கில் நிலவிய நெருக்கடி நிலைமைகளைச் சமாளிப்பதற்கு மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டாலும், இன்று அது தென்னிலங்கையில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதனால் இந்த அரசியல் பொதியினை முழு நாட்டிலும் நடைமுறைப்படுத்தப்படும் ஒன்றாக உருவாக்க வேண்டும்.

இலங்கை, பிரிவினைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் இயக்கம் செயற்படும் நாடாகும். பிரிவினைவாதம் தமிழர்களிடம் மட்டுமன்றிச் சிங்களவர்களிடமும் காணப்படுகின்றது. 1950களிலிருந்து சிங்கள அரசியல் பிரிவினைவாதத்தை அடிப்படையாகக் கொண்டே முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இது சிங்களவர்களின் நாடு சிங்கள பௌத்தர்களின் நாடு என்ற சுலோகங்களே முன்வைக்கப்பட்டன. அதனால் நாம் இரு பிரிவினைவாதக் கருத்துக்களுடனேயே வாழ்கின்றோம். நாட்டை பிளவுபடுத்தியிருப்பது இந்த பிரிவினைவாத மனோநிலையேயன்றி அரசியல் தீர்வுத்திட்டமன்று.

எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தினை இராணுவ ரீதியாகத் தோல்வியடையச் செய்வதன் மூலம் மட்டும் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. காரணம் இப்பிரச்சினை உருவாகிய கருப்பையிலே அவ்வாறான கருக்கள் மேலும்

தோன்றலாம். நிழலையன்றி விளக்கையே அணைக்க வேண்டும். எல். டீ. டீ. ஈ. இயக்கம் அவற்றுள் ஒன்று மட்டுமே எல். டீ. டீ. ஈ. இயக்கத்துடன் மேற்கொள்ளும் யுத்தத்தோடு இப்பிரச்சினையை இணைத்துப் பார்க்க முடியாது.

யுத்தத்தின் மூலம் இல்லாத பிரச்சினைகளை நாம் உருவாக்குகின்றோம். ஒரு சந்தர்ப்பதில் இராணுவம் வெற்றி கொள்கின்றது. பிறிதொரு சந்தர்ப்பத்தில் எல். டீ. டீ. ஈ வெற்றி கொள்கின்றது. இதற்குச் சமாந்திரமாக நாம் எமது தலைகளை இரு பக்கங்களுக்கும் திருப்பிப் பார்க்கின்றோம். அதன்படி தேசியவாதத்தையும், தேசப்பற்றையும் வெளிப்படுத்துகின்றோம். இந்த மனோநிலையினூடாகவே நாம் இப்பிரச்சினையைப் பார்க்கின்றோம். இதனை நாம் அறிவுபூர்வமாக நோக்க வேண்டும். உணர்ச்சிகளுக்கு அடிமைப்படின் இப்பிரச்சினை சிக்கலடைந்துவிடும்.

சிங்களவர்களின் வரலாற்று நினைவுகளிலிருந்து பார்க்கும்போது, இவ்வாறான ஓர் அரசியல் தீர்வு ஆலோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சில தேசியத் தலைவர்கள் குறிப்பிடுகின்றனர். மாகாண எல்லைகளை மாற்றியமைப்பது பற்றி நிலவும் அச்சம், அதிகாரம் வழங்கப்பட்டால் பிரிந்து விடுமோ என்ற அச்சம், போன்ற மனோநிலையுடனேயே பிரச்சினைகளை எழுப்புகின்றனர். இந்தப் பிரச்சினையை நாம் மகாவம்ச ஆசிரியர் காலத்திலிருந்து தோன்றிய கொள்கையிலிருந்து கொண்டே நோக்குகின்றோம். இந்த மனோநிலையிலிருந்து கொண்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. நாம் சிங்கள மக்களை விழித்துப் பேச வேண்டும்.

இப்பிரச்சினைக்குச் சரியான தீர்வைக் காண வேண்டுமாயின் தியாகம் செய்யச் சித்தமாக இருக்க வேண்டும். பழைய எல்லைகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அவற்றை அசைக்க முடியாது என்று கூறுவதனால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. நாம் இன்று பேசும் மாகாண எல்லைகள் சிங்கள வரலாற்றினால் உருவாக்கப்பட்டவையன்று. அவை ஏகாதிபத்தியவாதிகள் தமது மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சியை முழு நாட்டிலும் நிலைநிறுத்துவதனை இலக்காகக் கொண்டு உருவாக்கிய எல்லைகளாகும். ஆரம்பத்தில் ஐந்து மாகாணங்கள் காணப்பட்டன. பின்னர் அவை ஒன்பதாக அதிகரிக்கப்பட்டன. அவர்கள் மாகாணங்களை உருவாக்கினாலும் மாவட்டங்களை

அடிப்படையாகக் கொண்டே நாட்டின் ஆட்சியைக் கொண்டு நடாத்தினர். கொழும்பிலிருந்து கட்டளையிடும். கொழும்பு அரசாங்கத்துக்குப் பொறுப்புச் சொல்லும் அரசாங்க ஏஜன்ட் ஒருவரைப் பயன்படுத்தி அவர் மூலம் மாகாண அதிகாரத்தை உறுதிப்படுத்தும் முறை பின்பற்றப்பட்டது. நாம் இன்று பேசும் தேசிய அரசு என்ற எண்ணக்கரு இவ்வாறே எமது நாட்டில் உருவாக்கப்பட்டது. கட்டளையிடுபவர் தலைநகரில் இருந்து கொண்டு அவரோடு அனைத்தையும் இணைக்கும் முறையையே ஏகாதிபத்தியவாதிகள் அன்று நடைமுறைப்படுத்தினர். அது ஏகாதிபத்தியவாதிகளுக்கு வசதியாக அமைந்த முறையேயன்றி சிங்களவர்களின் குறையன்று.

நாம் இன்று பேசும் அதிகாரப் பரவலாக்கல் முறையே எமது வரலாற்றில் இடம்பெற்ற முறையாகும். கிராமத் தலைவர்கள் கிராமத்தை நிருவகித்து, சுயாட்சி அலகுகள் என்ற வகையில் கிராமத்தையும் நாட்டையும் அடிப்படையாகக்கொண்டு செயற்பட்ட அந்த ஆட்சிமுறை குடியேற்ற ஆட்சிக் காலத்தில் முழுமையாகக் கைவிடப்பட்டது. நாம் இன்று அந்த குடியேற்ற ஆட்சி மரபுரிமையான ஆட்சி முறையில் இருந்து கொண்டே சிந்திக்கின்றோம்.

பிளவுபட்ட மனோநிலையினையுடைய எமது சமூகத்தை ஐக்கியப்படுத்த வேண்டுமாயின், இது எனது நாடு, இது எமது நாடு என்ற மனமார்ந்த உணர்வு சுகல இனக்குழுக்கள் மத்தியிலும் ஏற்படக் கூடிய வகையில், ஒவ்வொரு இனக்குழுவும் தனது தலைவர்களினூடாக ஆட்சியில் பங்குபற்றக்கூடியவகையில் அதிகாரப் பரவலாக்கல் முறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இந்த அதிகாரப் பகிர்வு நடைமுறையின் ஒரு பிரதான கட்டம் என்ற வகையில் அரசியல் திட்டத்தினை அறிமுகம் செய்யலாம்.

அரசியல் அமைப்பு ரீதியாகப் பார்ப்பின் இங்கு சமஷ்டிப் பண்புகள் இல்லையென்று வாதிடலாம். சமஷ்டிப் பண்புகள் காணப்படுகின்றன என்றும் வாதிடலாம். சமஷ்டி முறை என்றும் வாதிடலாம். இங்கு ஒருவகையான சமஷ்டிப் பண்புகள் காணப்படுகின்றன. அதனை மறைக்க வேண்டிய அவசியமில்லை. 1987 மாகாண சபை முறையின் மூலமும் சில சமஷ்டிப் பண்புகள் அறிமுகம் செய்யப்பட்டன. ஐக்கிய அமெரிக்கா, சுவிர்சர்லாந்து போன்ற நாடுகளில் உள்ளது போன்ற சமஷ்டி முறை இன்று உருவாக்கப்படுவதில்லை. இந்தியாவிலிலேயே புதிய சமஷ்டி முறை (New

Federalism) ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது. ஒற்றையாட்சி முறையின் கீழ் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அதிகாரத்தை ஒப்படைத்து அதிகாரச் சமநிலையை மறு ஒழுங்கு செய்து உருவாக்கப்பட்ட ஓர் ஆட்சி முறையென்று நாம் இந்திய முறையைக் கருதுகின்றோம். அம்முறை பகிர்வுச் சமஷ்டிவாதம் (Devolutionary Federalism) என்றழைக்கப்படுகின்றது. இன்றைய எமது யாப்பு ஓர் ஒற்றையாட்சி யாப்பு என்று அறிமுகஞ் செய்யப்படுகின்றது. இந்த ஒற்றையாட்சி முறையிலிருந்தே பிரிவினைவாதம் தோன்றியுள்ளது. சிங்கள மக்களின் பிரிவினைவாதத்துக்குத் தமிழ் மக்களின் பிரிவினைவாதம் பதில் அளிக்க முற்பட்டமையாலேயே இந்நிலை தோன்றியுள்ளது. ஆகவே, இப்பிரிவினைவாத மனோநிலையில் இருந்து கொண்டு இந்தப் பிரச்சினைக்குப் பதிலுரைக்க முடியாது. பிரச்சினைக்குரிய உண்மையான காரணிக்குப் பதிலிருப்பதன் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

1960இல் நைஜீரியா சுதந்திரமடையும்போது அங்கு ஒற்றையாட்சி முறையே நிலவியது. பின்னர் மத்திய அரசின் அதிகாரங்கள் பகிரப்பட்டு மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டு சமஷ்டிமுறை உருவாக்கப்பட்டது. மூன்று மாகாணங்களுடனேயே அச்சமஷ்டி முறை உருவாகியது. பின்னர் அதிகாரத்துக்கு வந்த இராணுவ ஆட்சியாளர்கள் இம் முறையை இராணுவச் சமஷ்டிமுறையென்று அறிமுகம் செய்தனர். அன்று மூன்று மாகாண அரசுகள் காணப்பட்ட நைஜீரியாவில் இன்று 21 மாகாண அரசுகள் காணப்படுகின்றன.

1950இல் இந்திய அரசியல் தலைவர்கள் தம்மிடம் குவிந்திருந்த அதிகாரத்தைப் பிரதேசங்களிடம் ஒப்படைத்து, அதிகார அமைப்பை மறு ஒழுங்கு செய்தே, இந்தியப் பிரிவினைவாதத்தை முகாமைத்துவப்படுத்துவதற்குத் தேவையான அமைப்பு முறையினை உருவாக்கினர். இந்தியப் பன்முகச் சமூகத்தில் பலதரப்பட்ட ஜனக்குழுக்களின் நலன்கள் வெளிப்படும்போது அதற்காகப் பேரம் பேசும் வாய்ப்பினை இந்திய அரசியல் யாப்பு வழங்கியுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் தோன்றிய பிரிவினைவாதத்தை வெற்றி கொள்வதில் இந்தியத் தலைவர்கள் வெற்றிபெற்றனர். மத்திய அரசு மேலும் அதிகாரத்தினை சென்னை அரசுக்கு வழங்க உடன்பட்டமையாலேயே அண்ணாத்துரை பிரிவினைவாதத்தைக் கைவிட்டார். அதன் பின்னரே தமிழ்நாடு உருவாகியது.

1988இல் மிசரோமில் மாகாண அரசு நிலை காணப்படவில்லை. அங்கு தோன்றிய ஆயுதம் தாங்கிய இயக்கத்துடன் உடன்பாட்டுக்கு வந்து மாகாண அரசு மட்டத்தினை விடக்கூடுதலான அதிகாரங்களை வழங்கி, அவ்வியக்கம் மீண்டும் அரசியல் நீரோட்டத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அவ்வியக்கம் ஆயுதங்களையும் கீழே வைத்தது. இன்று அந்த மாகாணம் அன்று பிரிவினைவாதக் கொள்கையைக் கடைப்பிடித்த கட்சியாலேயே ஆளப்படுகின்றது.

இந்தியாவில் ஆந்திரா, ஹரியானா, நாகலாந்து போன்ற மாகாணங்கள் பிரிவினைவாதத்துக்கு வழங்கப்பட்ட சிறந்த தீர்வுகளாகும். பஞ்சாபில் மொழியினை அடிப்படையாகக் கொண்டன்றி சமயத்தை அடிப்படையாகக் கொண்டே மாகாண அரசு உருவாகியது. மேற்கு வங்காளத்தில் டாஜிலீன் என்ற மலைப் பிரதேசத்தில் நிலவிய பிரிவினைவாத இயக்கம் கூர்க்கா இனத்தவர்களுக்குப் புறம்பான ஓர் அரசினை வேண்டிநின்றது. 1988இல் மேற்கு வங்காள மாநில அரசும் மத்திய அரசும் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அப்பிரதேசத்தில் புறம்பான ஓர் அலகினை உருவாக்கி அவ்வியக்கம் சனநாயக நீரோட்டத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அவ்வியக்கமும் தனது ஆயுதங்களை ஒப்படைத்தது.

பிலிப்பைனில் மின்னாவோ தீவிர முஸ்லீம் மோரோ தேசிய இயக்கம் தனிநாட்டுக்கோரிக்கையை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டது. ஜனாதிபதி மார்கோவ் 1976இல் அவர்களுக்கு தனியான சுயாட்சி நிலை ஒன்றினை வழங்கும் வகையில் அரசியல் யாப்புத் திருத்தத்தினை மேற்கொண்டார். பின்னர் அக்கினோ காலத்தில் முஸ்லீம் மின்தனாவோ மாகாணத்தை அதிகாரப் பரவலாக்கல் மூலம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. எவருடனும் உடன்பாட்டுக்கு வர விரும்பாத கொரில்லா இயக்கத்தைச் சேர்ந்தவர்களிடையே இவ்வாறான ஏற்பாட்டின் மூலம் பிரிவினையை ஏற்படுத்தி அவர்கள் பலவீனப்படுத்தப்பட்டனர்.

இங்கிலாந்திலும் பிரிவினைவாத இயக்கம் ஒன்று செயற்படுகின்றது. அங்கு அதிகாரப் பரவலாக்கம் பற்றிய விவாதம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. புவியியல் ரீதியாக மேற்குப் பாகிஸ்தானிலிருந்து பிரிந்திருந்தமையாலேயே கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்தது என்று கூறமுடியாது. பாகிஸ்தானில் சமஷ்டி முறை சரியாகச் செயற்படுத்தப்படாமையாலேயே கிழக்கு பாகிஸ்தானில் வாழ்ந்த முஸ்லீம்கள் பங்களாதேசம் என்ற பெயரில் ஒரு தனி நாட்டை உருவாக்கிக் கொண்டனர்.

கிழக்குப் பாகிஸ்தான் தலைவர்கள் தொடர்ச்சியாக பிரதேசச் சுயாட்சியை வேண்டி வந்தனர். இராணுவ ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக அக்கோரிக்கையை நிராகரித்ததுடன் இறுதியில் யுத்த நிலையொன்றையே தோற்றுவித்துவிட்டனர். இறுதியில் இந்தியா தனது தேசியப் பாதுகாப்பு நலனின் அடிப்படையில் கிழக்குப் பாகிஸ்தான் விவகாரத்தில் இராணுவரீதியாகத் தலையிட்டமையால், பிரிவினைவாத இயக்கம் வெற்றிபெற்றது.

சுயாட்சி ஏற்பாடுகளுடன் சமஷ்டிப் பண்புகள் அடங்கிய சுமார் 70 நாடுகள் உலகில் காணப்படுகின்றன. இவற்றுள் சுமார் 20 நாடுகள் பிரிவினைவாதத்துக்கு அரசியல் தீர்வினைக் காண்பதற்காக சுயாட்சி முறையை ஏற்படுத்திக்கொண்டவையாகும்.

ஐரோப்பிய நாடுகளிலும் இதற்குச் சிறந்த உதாரணங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பெல்ஜியம் குறிப்பிடத்தக்கதாகும். இரண்டு மொழிகள் பேசப்படும் பெல்ஜியம் தனது யாப்பின் மூலம் ஒற்றையாட்சி முறையிலிருந்து சமஷ்டிமுறைக்குச் சென்றது. அங்கு மத்திய அரசுக்குரிய அதிகாரப் பிரதேசத்தில் சிறுபான்மையினருக்குக் கூடுதலானதுமான பெரும்பான்மையினருக்குக் குறைவானதுமான பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு உடன்பட்டுத் தலைநகரை ஆட்சி செய்வதற்கும், பெரும்பான்மையினருக்குக் கூடுதலானதும், சிறுபான்மையினருக்குக் குறைவானதுமான பிரதிநிதித்துவம் இடம்பெறும் வகையில் பிரதேச ஆட்சியைக் கொண்டு செல்வதற்கும் ஏற்ற வகையில் 1978–1989வரை அதிகார பரவலாக்கல் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஸ்பெயினில் பிரான்கோ ஆட்சியின் பின்னர். அங்கு நிலவிய வகுப்புவாதப் பிரதேச நிலைமைகள் சமஷ்டிமுறையின் மூலமே எதிர்கொள்ளப்பட்டன. இவை உலகின் சகல இடங்களிலிருந்தும் எடுத்துக்காட்டக் கூடிய உதாரணங்களாகும். சமஷ்டி முறையினால் நாடு பிளவுபடும் என்று கூறுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அங்கு எவ்விதத் தர்க்கரீதியான தன்மையும் காணப்படுவதில்லை. சமஷ்டி முறையினால் ஒரு நாடு பிளவுபடமாட்டாது. நாட்டுத் தலைவர்களின் அரசியற் செயற்பாடுகளினாலேயே நாடுகள் பிளவுபடுகின்றன பிளவுபடுத்தப்படுகின்றன. எமது நாடு ஐக்கியப்படுமா அல்லது பிளவுபடுமா என்பதனை அரசியல் தீர்வு ஆலோசனைகளின்றி இந்நாட்டுத் தலைவர்களே நிர்ணயிப்பர். இந்தத் தீர்வுத் திட்டத்தின் மூலமும் தேவைப்படின் அவர்களால்

நாட்டைப் பிளவுபடுத்த முடியும். அவர்கள் அதிகார மோகத்தைக் கைவிட்டு இதனை ஒரு தேசியப் பிரச்சினையாக நோக்காவிடின் இந்த அரசியல் தீர்வு ஆலோசனைகள் முன்னெடுத்துச் செல்லப்படமாட்டாது. இந்நாட்டில் பிரிவினைவாதம் ஒழியவும் மாட்டாது. இந்த ஆலோசனைகள் நிறைவேற்றப்பட்டாலும், அவர்கள் தமது பிரிவினைவாதம் அரசியலைக் கைவிடாவிடின் அவற்றை நடைமுறைப்படுத்த முடியாது. நாடு பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாது.

நாம் எமக்கிடையே ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும். அவ்வுடன்பாட்டுக்கே அரசியல் தீர்வு ஆலோசனைகள் அவசியமாகின்றன. இப்பொழுது அவ்வாலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. நாம் அவற்றைப் பற்றிக் கலந்துரையாடி, குறைபாடுகளையும் பிழைகளையும் ஒதுக்கி ஒழுங்கு செய்து மீண்டும் முன்வைக்க வேண்டும்.

மத்திய அரசின் அதிகாரத்தை எவ்விதத் தயக்கமுமின்றி முறையாக ஒப்படைப்பதற்கான ஆயத்தத்தினை இந்தத் தீர்வு ஆலோசனைகள் எடுத்துக் காட்டுகின்றன. அதிக எண்ணிக்கையான மாகாணங்கள் இருத்தல் ஒரு பிரச்சினையாயின் அவ்வெண்ணிக்கையை எட்டிலிருந்து குறைத்துவிடலாம். பிரிவினைவாத மனோநிலையிலிருந்து தமிழ் மக்களைத் தூரப்படுத்த வேண்டுமாயின் நாம் அவர்களுக்கு எதையாவது வழங்க ஆயத்தமாக வேண்டும். இது எமது நாடு என்று பற்றிப் பிடிப்பதில் பயனில்லை. இன்று உலகில் தேசிய அரசு என்பது செல்லுபடியற்றதாகி வருகின்றது. தமது உள்ளக அமைப்பை மறு ஒழுங்கு செய்யும்படி வெளியிலிருந்து இவ்வரசுகள் மீது செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது. அதனால் தமது அமைப்பினை மறுசீரமைப்புச் செய்ய வேண்டிய நிலையை இவ்வரசுகள் எதிர்நோக்குகின்றன. அதற்குக் காரணம் இன்று பெரும்பாலான அரசுகள் பல்லின மக்களைக் கொண்டிருத்தலாகும். பல்லின நிலைமையைத் தலைகளை எண்ணுவதன் மூலம் கணிப்பிட முடியாது. பெரும்பான்மையினர் அதாவது 80% ஆனவர்கள் சிங்களவர்கள். அதனால் எமது நாட்டைப் பல்லினச் சமூக நாடு என்று கருத முடியாது என்று கூறும் கருத்தில் பெறுமதியில்லை. இன்றைய உலக அபிவிருத்தி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்றவற்றின் வளர்ச்சி ஆகியவற்றைப் பார்க்கும்போது சிறிய எண்ணிக்கையினரான சனக்குழுவினர் கூட தனது இன அடையாளத்தினைப் பாதுகாத்துக் கொண்டு முன்செல்லும் நிலை காணப்படுகின்றது.

இலங்கை ஒரு பல்லினச் சமூகத்தையுடைய நாடு என்பதனை நாம் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். எமது சமூகத்தில் வேறுபட்ட இனத்தவர்கள் வாழ்கின்றர். வேறுபட்ட ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு தனிநாடு என்ற வகையில் நாம் முன்செல்ல வேண்டுமாயின் அப்பல்லினத்தன்மைகளுக்கும் பொருந்தும் ஆட்சிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும். அதனால் தேசியம் என்ற சொல் மாற்றமுற்றுப் பல்தேசிய பல்லின இயக்கம் உருவாக வேண்டும். இன்றைய உலகம் அவ்விடத்துக்கே வந்துள்ளது.

17ஆம் நூற்றாண்டில், அரசுகள் தேசியம் என்ற சொல்லைத் தம்மோடு சேர்த்துக் கொண்டன. 21ஆம் நூற்றாண்டை எதிர்நோக்கியுள்ள உலகம் தேசியம், இனங்கள் என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் செயற்பட முடியாது. நாம் இனச் சமூக நிலைகளுக்குப் பொருந்தும் ஒரு தேசியத்தை உருவாக்க வேண்டும். நாம் இன்று இரண்டு தேசியத்துவத்தை உருவாக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஒன்று சிங்கள, தமிழ், முஸ்லீம் தேசியத்துவம். மற்றையது இலங்கைத் தேசியத்துவம். இவ்விரு தேசியத்துவத்துக்கும் இடமளிக்கக்கூடிய ஓர் அரசியலமைப்பையே நாம் நாட வேண்டும்.

மத்திய அரசின் அதிகாரத்தைக் கூடப் பகிர்ந்து கொள்ளும் அதிகாரப் பங்குடமை முறை ஏற்பட வேண்டும். பிரதேசத்தின் அதிகாரப் பங்குரிமை, அப்பிரதேசத்தில் வாழும் ஜனக்குழுவினரும் பிரதேச நிருவாகத்தில் பங்குபற்றக் கூடிய வகையில் விருத்தி செய்யப்பட வேண்டும். பல்வேறு இனத்தவர்களும் பிரதேச நிருவாகத்தில் பங்குகொள்ளக்கூடியவாறான ஏற்பாடுகள் அரசியல் யாப்பில் புகுத்தப்பட்டு நாட்டின் உள்ளக அமைப்பினை மறுசீரமைப்பின் நாடு பிளவுபடமாட்டாது.

*ஒரு சமரச தீர்வை நோக்கி அதிகார பகிர்வு யோசனைகள்

** சுமனசிரி லியனகே

1995ஆம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டுள்ள அதிகார பரவலாக்கல் யோசனை பல்வேறு அபிப்பிராயங்களையும் தாக்கங்களையும் உருவாக்கியுள்ளது. விடுதலைப் புலிகளும் கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களும் இந்த யோசனையை நிராகரித்துள்ளன. விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமான வெளியீடான "இன்சைட் ரிபோர்ட்" (Inside Report) என்ற பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது. "குறிப்பிடத்தக்க தீர்வு எதனையும் வழங்காத இந்த யோசனைக்காக ஆயுதங்களை கீழே வைப்பதென்பது விடுதலைப்புலிகளின் அரசியல் தற்கொலை என்பது மட்டுமல்ல இது தமிழர்களுக்கும் ஒரு தேசிய தற்கொலையே..." இது போன்றே சிங்கள தேசியவாதக் குழுக்களும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன. அவர்களைப் பொறுத்தவரை இந்த யோசனை இறுதியில் நாட்டை பிரிப்பதற்கு வழிவகுக்கும். எனவே சிங்கள மக்களும் இவ் யோசனை ஏற்புடையதாகாது என்கின்றனர். சிங்கள இனவாத உயர் குழாமொன்று இவ் யோசனை தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிடுகின்றபோது இது வடகிழக்கு பிரச்சினையை தீர்ப்பதற்கு பதிலாக அதனை மேலும் வளர்ப்பதற்கே உதவுவதுடன் ஈழம் உருவாவதற்கும் இது வழிகாட்டும் என்று கூறுகிறது. ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க இந்த யோசனையைப் பற்றி கூறும்போது இந்த யோசனையின் நோக்கம் இரண்டு பக்கத்திலுள்ள தீவிரவாதிகளின் கோரிக்கைகளுக்கு முகங்கொடுப்பதாக மட்டும் ஏற்படுத்தப்பட்ட ஒன்றல்ல. ஆனால் மிதவாதிகளின் கோரிக்கைகளுக்கும் இது முகங்கொடுக்கின்றதென்று கூறுகின்றார். தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் எம். சிவசிதம்பரம் இந்த யோசனைப் பற்றிக் கூறும் போது "தேசிய அளவிலான சர்வசன வாக்கெடுப்பு ஒன்றில் பெரும்பான்மையான சிங்கள மக்களால் இந்த யோசனை வெற்றிபெறும்" என்கிறார். தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் இடதுசாரி முன்னணியைத் தளமாக வைத்திருக்கின்ற தமிழ் கட்சிகள் இந்த அதிகாரப் பகிர்வு யோசனையை வரவேற்கின்றன. மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரிய சங்கத்தின் முன்னோடி உறுப்பினர்களில் ஒருவரான ராஜன் ஹூல் (Rajan Hoole)

---

* Toward the Compramuise for Solution - Mr. Sumanasiri Liyanage, Senior Lecturer Department of Economic University of Peradeniya.

** தமிழாக்கம் பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா

என்பவர், "இந்த யோசனையானது அரசாங்கத்தின் ஒரு துணிகரமான நடவடிக்கை" என்று விபரித்துள்ளார். பல வெளிநாட்டு கருத்துரையாளர்களும் இந்த யோசனையின் முன் மாதிரியினை பாராட்டியுள்ளனர். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் முனி இவ் யோசனைப் பற்றிக் கூறும் போது இப் "பொதி" விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற வடக்கு கிழக்கு பகுதிகளை உள்ளடக்கிய தமிழ் மக்களுக்காக முன்வைக்கப்பட்டதாகும். இந்த யோசனையானது வலுவான வகையில் பிரச்சாரப்படுத்தப்படுகின்றதால் இது வரவேற்கப்படும் அதனுடைய விளைவானது சமூக தளத்தையும் சட்ட ஏற்பாட்டையும் அதே சமயம் அது கெரில்லா நடவடிக்கையை கடினமான ஒன்றாகவும் சந்திக்கச் செய்யும்.

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு துணிவான உண்மையுள்ள நடவடிக்கையென இவ்வரசின் நடவடிக்கையை சர்வதேச சமூகம் வரவேற்கின்றது. இருந்தபோதும் இவ்வதிகார பகிர்வானது இலங்கை மக்களின் ஆதரவைப் பெற இன்னும் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இதன் முதலாவது பிரச்சனை இவ்வதிகார பகிர்வு பொதியும் தற்போதைய அதிகாரப் பகிர்வு கருத்துரைகளும் தீவிரவாதிகள் என்று அழைக்கப்படுவோர்க்கு இடமளிப்பதாக உள்ளதா? என்பதாகும். ஆனால் இந்த அதிகாரப் பரவல் அதன் மிதவாதிகளாகிய (Moderate) சிங்களவர் தமிழர் முஸ்லிம்களின் வரவேற்பினைச் சந்திப்பதாக இருக்கக்கூடும். சில காலத்திற்கு முன்பு இவ்யோசனை முன்வைக்கப்பட்டிருந்தால் எதிர்பார்த்த விளைவை இவ் யோசனை கண்டிருக்கும். ஆனால் தற்போது கடைசியாக ஒரு தீர்க்கமான முடிவிற்கு வரவேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில் தீவிரவாத சக்திகள் இருப்பதால் நாம் விரும்பியோ விரும்பாமலோ தீர்மானிக்கக் கூடிய ஒரு சக்தியாக அவர்கள் இருப்பதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். எனவே இது தொடர்பாக குமார் பொன்னம்பலம் கூறிய கூற்றில் சில அடிப்படை உண்மைகள் இருப்பதை நான் காண்கின்றேன். அவர் "அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் ஓர் எல்லையைக் காண விரும்பினால் போர் நிறுத்தமொன்றை அறிவித்து வடகிழக்கிலுள்ள தமிழர்களையும் விடுதலைப் புலிகளையும் இந்தப் பொதியை கவனத்திற் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும்."

இதுபோல இனவாத சிங்கள பேரினவாதிகளின் பயமுறுத்தல்களை பொருட்படுத்தாமல் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் (moderate) இடைமில் சமரசத்தைக் கொண்டு வர மிதவாதிகள் இடமளிக்க வேண்டும். சகல கருத்துக்கள் முரண்பாடுகள், நடைமுறைகள் என்பவற்றை ஒரு

பரந்த இடத்திற்கு வழிப்படுத்த வேண்டும். இது சம்பந்தமாக மிதவாதிகள் வேறு வழியில் சிந்திக்கத் தலைப்பட்டால் தீவிரவாதிகள் சகிக்க முடியாத ஒரு குழுவாக மாறுவர். ஏனெனில் மிதவாதிகளின் கருத்துக்கள் இதைப் பொருத்தவரை முழுமையானதாக விளங்குவதென்றும் எனவே அதில் மாற்றத்துக்கு இடமில்லை என்றும் எண்ணுவதே இதற்குக் காரணமாகும். எனவே இக்கட்டுரையில் நான் பெரும்பாலும் இணக்கப்பட்டான நிலையையே எடுத்திருக்கின்றேன்.

கிட்டத்தட்ட எல்லோரும் அதிகாரப் பகிர்வு அவசியம் என ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் முன்வைக்கப்பட்ட யோசனையின் கட்டமைப்பு சரியானதல்ல என்று சிலர் வலியுறுத்துகின்றனர். இவ்வாறான வெளிப்பாடுகளில் ஒருவர் சந்தேகங்களை வெளிப்படுத்தக்கூடிய காரணங்கள் பல உள. இருந்தபோதும் அவற்றை ஓர் ஆரம்பமாக மட்டுமே நாம் கொள்ளலாம். இங்கு எது அவசியமெனில் பகிர்வு பற்றிய யோசனைகள் ஒரு தீவிர மாற்றத்திற்கு உட்பட்டாக வேண்டும். இது தொடர்பாக கலாநிதி ராஜன் ஹூல் முன்வைத்த கருத்து முக்கியமானது. அவர், "தமிழர் தேசியவாதங்களிலிருந்து வெளியேறுவதன் மூலம் பாரம்பரிய தமிழர் தாயகம், தமிழர் சுயாட்சி என்ற பத பிரயோகங்களை தவிர்க்கலாம். இதன் மூலம் தமிழர் விடுதலை கூட்டணி இப்பிரேரணையை பலமுள்ள ஒன்றாக்க முடியும். விடுதலைப் புலிகளின் யுகத்துக்கு முன்னர் ஒரு காலத்தில் மேற்கொண்ட செயல்கள் பொருத்தமான ஒன்றாக இருந்திருக்கலாம். சர்வதேச ரீதியாக பலவீனமான ஒடுக்கப்பட்ட நிலையிலிருக்கின்ற போது தமது அடையாளங்களை பாதுகாப்பதற்கு இடங்கொடுக்கின்ற ஓர் உரையாடலுக்கான வாய்ப்பினை வழங்கியிருக்கலாம்" என்கிறார்.

மிதவாதிகளும் இதே பிழையை விடுகின்றனர். அதாவது பொதி முன் வைக்க முன்பிருந்த நிலைப்பாட்டையே இப்பகிர்வு யோசனையில் மீள வற்புறுத்துகின்றனர். வரலாற்றில் இவ்வாறே இனப்பிரச்சினை வளர்ச்சி பெற்றதென்பதை விளக்குவதிலேயே இவர்கள் நீண்ட நேரம் எடுக்கின்றனர். எதிர்க்கட்சி அரசியல் இலாபம் பெறக்கூடும் என்ற வகையில் அரசாங்கம் அரசியல் யோசனையை முன்வைக்க தயங்கியதோர் காலக்கட்டத்தை நாம் இப்போது கடந்துவந்துவிட்டோம். அதே போல மக்களை தவறான வழியில் இட்டு செல்வதன் மூலமும் எந்த ஒரு யோசனையையும் நிராகரிப்பதன் மூலம் எதிர்க்கட்சிகள் பொறுப்பற்ற முறையில் நடந்து வந்துள்ள நிலை இன்று சற்று வேறுபட்டதாக உள்ளது. பிரதான

எதிர்க்கட்சியான ஐ.தே.க. வெளிப்படையாக இப்பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. சில ஐ.தே.க. வைச் சார்ந்தவர்கள் இவ் யோசனைக்கு ஆதரவு தெரிவிக்கும் தேவையை வெளிப்படுத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் ஆரம்ப பிரதிபலிப்புகள் எதிரான ஒன்றாக இருந்த போதும் மூன்றாம் தர மத்தியஸ்தத்துடன் கூடிய பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அவர்கள் இப்போது தயாராக இருக்கக் கூடும். இதற்கு மேலாக எல்லா மக்களுக்கும் இப்போருக்கு முடிவு காண வேண்டிய ஒரு தேவை உள்ளது. எனவே ஒரு சமரசத்துக்கு வருவதற்கு அரசு இச் சாதகமான சூழ்நிலையை பயன்படுத்த வேண்டும்.

அதிகார பகிர்வும் பங்கீடும்

டெச்சசெக் (Duchachek) என்ற ஆசிரியர் குறிப்பிட்டது போல அரசியல் யாப்பு என்பது "வலுவரைப்படம்" (Power Maps) என கொள்ளலாம். எனவே ஆளுகின்றவர்களை வலுப்படுத்தும் சட்டமே அதுவாகும். தற்போதைய தொடர்பில் வழமையான வகையில் அரசியல் யாப்புகளை ஒற்றையாட்சி சமஷ்டியாட்சி என பிரிப்பது போதுமானதல்ல. நான் நான்கு மாதிரிகளை அரசியல் யாப்பில் இனங்காண்கின்றேன். ஒற்றையாட்சி, பிராந்திய ஆட்சி, இணைப்பாட்சி, சமஷ்டியாட்சி என்பன அதுவாகும். அரசாங்கம் இப்போது வெளியிட்டுள்ள யோசனைகளின்படி மத்தியில் இருந்து அதிகாரங்கள் பிராந்தியங்களுக்கு பிரிவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இப் பிரேரணைகள் ஒற்றையாட்சி அரசியலமைப்பிலா அல்லது சமஷ்டியாட்சி அரசியலமைப்பிலா இடம்பெறுமென்பதை இன்னும் தெளிவாகக் காட்டவில்லை. சமஷ்டி ஆட்சியின் கீழ் பிராந்திய அலகும் மத்திய அரசும் ஒன்றுக்கொன்று கீழ்படுவதாக அல்லாமல் ஒன்றிற் கொன்று இணைவான ஒருங்கிணைவிற்கே மதிப்பளிக்கின்றன. மேலும் இங்கு அரசியலமைப்புத் திட்டம் மத்திய அரசினதும் பிராந்திய அலகுகளினதும் உறவின் நிரந்தர தன்மையை ஆட்சி பிரதேசங்களில் உத்தரவாதப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். மேலும் சமஷ்டி நெறிமுறையின் ஒழுங்கமைப்பானது ஒன்றிணைப்பையும் பகிர்வினையும் ஒரே சமயத்தில் இயக்குவதற்கு ஏற்றவகையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதிகாரங்களைப் பிரதேசங்களுக்கு பகுத்தல் சமஷ்டி அரசியல்முறை பிராந்தியவாத அரசியல் முறைக்கு சமமானதாகவே உள்ளது. எனினும் இது சமஷ்டி அரசியல் முறையில் இருந்து சற்று வேறுபடுகின்றது. மத்திய அரசினது பகிரப்பட்ட சட்டவாக்கம் மற்றும் நிர்வாகம் என்பனவற்றில் சுதந்திரம் பெற்றதல்ல.

இங்கு மத்திய அரசியல் திட்டம் மற்றும் அதனது அமைப்புகளும் மேலாதிக்கம் பெற்றுள்ளது. இது சில சமயங்களில் நிர்வாகத்துறையினால் வீட்டோ செய்யப்படலாம்.

ஷாவூட் (Sherwood) என்பவர் " அதிகாரப் பகிர்வென்பது மத்திய அரசாங்க கட்டமைப்பு ஆணைக்கு வெளியே புவியியல் அமைப்புக்கு அமைவாக உள்ள உள்ளூர் அரசாங்கங்களுக்கு அதிகாரத்தை இடமாற்றுவதை இது குறிக்கின்றது" என்கின்றார். அது பிராந்தியங்களுக்கு மேலானதாக செல்கின்றது. மறுபுறம் அது கட்டமைப்பு முழுமைக்கு அதிகாரம் பரவி செல்வதைக் குறிக்கின்றது. அரசு முன்வைத்துள்ள யோசனைகள் நிலரீதியான அதிகார பங்கீட்டு ஏற்பாடாக இருந்த போதிலும் அதிகார பங்கீடானது மத்தியில் அதிகார பங்கீடாக மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அதுபோல உள்ளூர் மட்டத்திலும் அது இடம் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் இல்லாமையே அரசியல் யோசனைகளில் உள்ள குறைபாடாகும். இப்போதைய யோசனைகள் அதிகார பகிர்வு இயல்புகளை அறிமுகம் செய்வதன் மூலம் தீவிரவாதிகளின் வெளியிடப்பட்ட பயந்தநிலையை இல்லாமல் செய்ய உதவக்கூடும். இத்துடன் அது கருத்து ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கும்.

சமுதாயங்களுக்கிடையிலே ஒரு இணக்கப்பாடு

டெஸ்குரோம்ஸ் (Descrombs) என்பவர் வரலாறு என்பது ஒரு மேற்குலக மாயை என்று வர்ணிக்கின்றார். தற்போது வாதத்திலீடுபட்டுள்ள இரு கட்சிகள் தமக்கென தனியான வரலாற்று விளக்கத்தினை கொண்டிருக்கின்றன. எர்னஸ் டீ ரெனான் (Ernest Renan) குறிப்பிடுவது போல ஒரு தேசத்தின் பழமையான பகுதிகளில் ஒன்றாக இருப்பது வரலாறு ஆகும். * 3

எனது கருத்தின்படி நாம் உண்மையிலேயே கருத்து ஒருமைப்பாட்டுக்கு வருவோமேயானால் இந்த நேரத்திலாவது வரலாற்று விளக்கப்பாட்டை கைவிட வேண்டும். தமிழர் தாயகம் என்ற ஒன்றை கேட்பதை விட தமிழர்கள் எங்கு தொடர்ச்சியாக வாழ்கிறார்கள் என்று கேட்க வேண்டும். தமிழர் இப்போது வாழ்கின்ற புவியியல் இடம் யாது? 1981ஆம் ஆண்டு புள்ளி விபரங்களே அண்மையில் கிடைக்கக்கூடிய கணிப்பீடாக இருக்கிறது. எனவே இலங்கையில் தமிழர்களில் 73

வீதமானோர் (நான் பயன்படுத்தும் புள்ளிவிபர அட்டவணையின்படி) வடகிழக்கு மாகாணங்களில் வாழ்கின்றனர். மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 90 வீதமான தமிழர்கள் வட மாகாணத்தில் வாழ்கின்றார்கள்.

எல்லைகளை நிர்ணயித்தலில் 3 வகையான ஒழுங்குகள் இங்கு மேற்கொள்ளலாம்.

1. தற்செயலாகக் கூட நீண்ட கால எல்லைகளாகவுள்ளமை.
2. நியாயப்பாடான நிர்வாக ரீதியானது.
3. இணத்துவமானது.

தற்போது இலங்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றபடி மாகாணங்களையும் இனத்துவங்களையும் கருத்தில் கொள்ளலாம். தற்போதுள்ள இனநெருக்கடிகள் குறைந்த பின் பகுத்தறிவு சார்பான அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படலாம். பெரும்பான்மையான சிங்களவர்கள் கிழக்கு மாகாணம் உட்பட தற்போதைய 9 மாகாணங்களின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வினை விரும்புகின்றனர். தமிழர்கள் 2 மாகாணங்களில் இணைப்பைக் கோருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் மூன்றிலொரு பகுதியினர் முஸ்லிம்களாவர். இவர்கள் தமக்கென ஓர் அந்தஸ்த்தை கோருகின்றனர். இந்த இக்கட்டான நிலையை எவ்வாறு மாற்றுவது? இதற்கு ஒரு மறுமொழி மாகாண எல்லைகளை மாற்றுதலாகும். சிங்களவர் தொடர்ச்சியாக வாழும் பிரதேசங்களை வட மத்திய ஊவா மாகாணங்களுடன் இணைப்பதும் தமிழர்கள் வாழும் பிரதேசங்களை வட மாகாணத்துடன் இணைப்பதன் மூலம் முஸ்லிம்களுக்கு புதிய பிரதேசமொன்றை உருவாக்குதல் இவ்வகையை உள்ளடக்கிய அரசாங்கம் அதிகார பகிர்வு யோசனையினை மேற்கொள்வது தெரிகிறது. இது புதிய பிரச்சினையினை உருவாக்கலாம். எனது கருத்தின்படி தீர்வு எதுவெனில் இப்பொழுதுள்ள அந்தஸ்த்தினை அப்படியே வைத்துக்கொண்டு தமிழர் கோரிக்கையின்படி வேறுபட்டதொரு வழிமுறையில் அல்லது இரண்டு மாகாணங்களையும் இணைப்பது சிறந்ததாகும். ஐந்து வருடங்களின் பின்பு எல்லைகளை மாற்றக்கூடிய விதத்தில் மாற்றுத் திட்டம் இருக்க வேண்டும்.

இங்கு மூன்று ஆலோசனைகளை முன்வைக்கலாம் முதலாவதாக, கிழக்கு மாகாணத்துக்குள்ளேயே அதிகாரத்தை பங்கிட்டு கொள்வதற்காக ஏற்பாட்டினை மேற்கொள்வது. இந்த முறையின் கீழ் 15 அல்லது 20 வீதத்துக்கு மேல் வாக்கு பெறும் கட்சிகளுக்கு பிராந்திய மந்திரி சபையில்

இடமளிக்கப்பட வேண்டும். (தென்னாபிரிக்க அரசியல் திட்டத்திலுள்ள ஏற்பாடு) இதற்கு துணைபுரியும் விதமாக ஒரு பிராந்திய சபையில் 3 அரச பதவிகளை இனங்களுக்கிடையில் பங்கிடுதல் ஆளுநர் முதலமைச்சர் சபாநாயகர் என்ற மூன்று பதவிகளை இவ்வினங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கலாம். இதே ஏற்பாட்டை மத்திய மாகாண கண்டிய தமிழர்களின் கோரிக்கையை திருப்திபடுத்துவதற்குக் கூட மேற்கொள்ளலாம்.

இரண்டாவதாக சிறுபான்மையினருக்கு நியாயமான பிரதிநிதித்துவத்தை மத்தியில் வழங்குவதற்கு ஓர் இரண்டாவது சபை உருவாக்கப்படுதல் விரும்பத்தக்கதாகும். இதன் மூலம் சிறுபான்மையினரின் ஆதரவுடன் பெரும்பான்மை சமூக சட்டங்களை நிறைவேற்ற முடியும். இதன்படி 9 மாகாணங்களிலிருந்து ஒரு மாகாணத்துக்கு 5 பேர் என்ற வீதத்தில் 45 பேர் இச் சபையில் இருக்க முடியும்.

ஒரு மாகாணத்துக்குள் 5% த்திற்கு மேல் சனத்தொகை காணப்படுமானால் ஓர் இனக்குழுவிற்கு ஒரு ஆசனம் என்ற வகையில் மேலதிகமாக கொடுக்கப்பட வேண்டும். மேற்படி குறிப்பிட்டவாறு பிராந்தியவாதமும், அதிகாரப் பகிர்வும் என்ற இரண்டு போக்குகளைக் கொண்டுள்ளதானது, ஓர் இரண்டாவது சபையை உருவாக்கி ஒன்றுபடும் சக்தியை இந்த இரண்டாவது சபை மூலமாக உருவாக்கிக்கொள்ளலாம்.

மூன்றாவதாக, ஒரு மாகாணம் மக்கள் தீர்ப்பின் மூலம் (Referendum) சாதகமாக வாக்களித்து 2 அல்லது அதற்கு மேலுள்ள மாகாணங்களை தனி ஒருமாகாண அலகாக மாற்றுவதற்கு அரசியல் யாப்பில் விதிகள் இருக்க வேண்டும். மங்கள முனசிங்க குழு விதந்துரைத்ததைப் போல இரண்டு அல்லது அதற்கு மேலான மாகாணங்கள் தீர்மானங்களை மேற்கொண்டால் ஓர் உயர்ச்சபையை உருவாக்க விதிகள் சேர்க்கப்படலாம். தற்போதைய அதிகார பரவல் யோசனையை வளர்க்கும் இத்தோற்றப்பாடானது மத்தியில் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்கு தமிழர்களை அனுமதிக்கக்கூடும். இது இலங்கை அரசின் சிங்களவர்களின் மேலாதிக்கத்தைக் குறைக்கும் பதிலீடாகலாம். இதுவே ஜப்பானிய முறையுமாகும். தற்போதைய அதிகார பரவலாக்கலின் முக்கியமான தோற்றங்களில் ஒன்றே 13வது திருத்தத்தில் உட்படுத்தப்பட்டுள்ள பிரேரணையாகும். பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் 13ஆம் திருத்தச் சட்டத்தின் பலவீனங்களில் ஒன்று மாற்றப்படுகின்ற அதிகாரத்தின் தெளிவின்மையென சுட்டிக்காட்டியுள்ளார். இப் பட்டியலானது அதிகார

பகிர்வு ஏற்படுவதை தவிர்ப்பதற்கே பயன்படுகின்றது. இதனை ஜி. எல். பீரிஸ் " கல்வி ஒரு பரிமாற்றப்படும் விடயம் ஆனால் ஒரு படசாலையை தேசிய பாடசாலையென விளக்குவதில் மறுநாள் காலை அது கொழும்புக்கு கையளிக்கப்படுகின்றது." துரதிஷ்டவசமாக இவ் யோசனை ஒருவகையான மறைக்கப்பட்ட நடைமுறைபட்டியலை உள்ளடக்கியது. இது நீக்கப்பட வேண்டியதாகும்.

ஒரு பிரதேசத்தினடிப்படையில் பொது எல்லை இல்லாததும் புவியியல் அடிப்படையில் பரவலானதுமான இன குழுக்களிடம் இருந்து வெளிப்படுத்தும் பயவுணர்வு ஒரு பிரதிநிதித்துவத்தை பெற்று தரப்போவதில்லை. மன்னார் முஸ்லிம்களும் கொழும்பிலுள்ள தமிழர்களும் இந்தவகையையே சார்கின்றார்கள். இப்பிரச்சினை எமது தேர்தல் முறையில் மாற்றங்களை அறிமுகப்படுத்துவதாலேயே வெளிப்படுத்த முடியும். பிரதேச மட்டத்தில் பன்மை பிரதிநிதித்துவ தேர்தல் முறையே இப்பிரச்சினைக்குத் தீர்வாக இருக்கும். அவ்வாறெனின் வடக்கு பிராந்திய சபைக்கு, முஸ்லிம்களுக்கு ஒரு பிரதிநிதியையும் மேற்கு பிராந்திய சபைக்கு, தமிழர்களையும் தெரிவு செய்யக்கூடியதாக இருக்கும்.

மறுபுறம் சிங்கள பிரதேசங்கள் அதிகார பரவல் வேண்டுமென்று கேட்பதில்லை எனவும் தமிழ் பிரதேசங்களிலேயே அது உட்பட்டிருக்க வேண்டுமெனவும் வாதிடப்படுகின்றது. இப்பிரச்சினையோடு தொடர்புடைய வாதமானது, 9 பிராந்திய சபைகளை உருவாக்குவது மேலதிகமான செலவினை ஏற்படுத்துவது என்பதாகும். ஸ்பெய்னில் இருப்பது போல இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதெனில் விருப்பத் தெரிவு முறை அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். ஆரம்பத்தில் ஒவ்வொரு மாகாண சபைக்கு அதிகபட்ச அதிகாரங்கள் தேவையில்லை. சில சபைகள் தமது விவகாரங்களைக் கவனிப்பதற்கு மத்திய அரசையும் அனுமதிக்கலாம்.

இங்கு எனது நோக்கம் தற்போதய யோசனையை முன்னெடுப்பதற்காக தீர்க்கமான பிரேரணைகளை கூறுவதல்ல. ஆனால் இப்பிரச்சனையை கைளாளுகின்ற அதிக வெறுப்புகளின்று, மாற்று வழிகளினது சாத்தியத்தை சிறிது அழுத்திக் கூறுவதாகும். அரசியல் விஞ்ஞானிகளும், அரசியல் திட்ட வழக்குரைஞர்களும் புதிய விருப்பங்களை பிரேரிக்கின்ற நல்ல ஒரு நிலையிலிருக்கலாம். இவ்வாறான மாற்று வழிகள் சமாதான வழிகாட்டலுக்கு உதவக் கூடும்.

நடைமுறைபடுத்தும் நுட்பம்

இலங்கை அரசியல் யாப்பானது ஒரு பகுதியாகமட்டும் வருமுன்னர் தற்போதைய யோசனைகள் அரசியல் யாப்பில் நீண்ட வழிமுறைகளை உள்ளடக்கி செல்லவும் இப்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் கலந்துரையாடலுக்கு ஒரு ஆவணம் மட்டுமே. அரசியல் யாப்பு திருத்தத்திற்கு பாராளுமன்ற செயற்குழுவுக்கு முறையான ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன் பின்னர் 2/3 பெரும்பான்மையுடன் இது பாராளுமன்றத்தில் நிறைவேற்றுதல் வேண்டும். அதன் பின்னரே பகிர்வு யோசனைகள் சட்டமாக வரும். இது ஒரு வருடத்துக்கு மேல் கூட செல்லலாம். ஆகவே இங்கு இடைக்காலத்தில் என்ன செய்யப்படவேண்டும்? ஒரு தாக்கமான முறையில் நடைமுறைப்படுத்தும் ஆற்றலை உருவாக்குவதில் இது முக்கியத்துவம் பெரும். தற்போதைய ஆயுத படையின் அதிகரிப்பானது இப் பிரச்சினை தீர்வதற்குரிய சாதகமான அம்சமல்ல. இலங்கை ஆயுதபடைக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல் காரணமாக அதிக எண்ணிக்கையுள்ள மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியுள்ளனர். இந்த இக்கட்டில் இருந்து மீள்வதற்கு அரசு எவ்வாறு திட்டமிடுகின்றது. விடுதலை புலிகள் மீது அரசு ஒரு இராணுவ வெற்றியை அடைவதை அரசு குறிக்கோளாக கொண்டிருப்பதும் விடுதலை புலிகளை சவால்விட முடியாத வகையில் பலவீனப்படுத்துவதும் அரசியற் நோக்கங்களாகக் கொள்கின்றது. விடுதலை புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டால் அது தெற்கில் புதிய தேர்தல் ஆணைகளை பெற உதவுமென அரசு சிந்திக்கின்றது. இந்த உண்மை ஒரு காத்திரமான பன்மை தன்மை கொண்ட அரசியல் தர்க்கவியலுக்கு ஓர் உபாயமாக இருக்கக்கூடும். ஆனால் இது பொது ஜன ஐக்கிய முன்னணியின் சமாதான வழிமுறைக்கு முரண்பாடானது. அத்துடன் இது அரசாங்கத்தை ஒரு போர் வலைக்குள் சிக்கவைக்கும். கைவிடப்பட்ட புவியியல் பிரதேசங்களை கைப்பற்றுவதல்ல இங்கு அவசியம். தமிழ் மக்களின் இதயங்களையும் சிந்தனைகளையும் கைப்பற்றுவதுதான் என்று நான் கருதுகின்றேன். இந்த சமூக உளவியல் பரப்பானது எப்போதும் புவியியற் பரப்பினை சார்ந்திருக்கமாட்டாது. இந்த ஆபத்தான மனநிலையைக் கொண்டு நான் சில யோசனைகளை இங்கு தர விரும்புகின்றேன். எனது கருத்துப்படி அதிகார பகிர்வு கலந்துரையாடல்களில் தீவிரவாதிகள் பங்குபற்றுவதற்கு ஓர் இடம் தேவை. அவர்கள் ஏற்கனவே வடக்கில் ஒரு அதிகார கட்டமைவை அபிவிருத்தி செய்துள்ளதால் அவர்கள் அதனை சுலபமாக கைவிட்டுவிடமாட்டார்கள் என்ற உண்மையை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் வட மாகாணத்தில் உள்ள மக்களுக்கு அதிகார பகிர்வு

யோசனைகளை கவனத்திற் கொள்வதற்கு ஒரு வாய்ப்பு கொடுப்பார்களாயின், மக்கள் தீர்ப்பு ஒன்றின்போது அதிகார பகிர்வுக்கு ஆதரவு அளிக்கின்றார்களா? அல்லது எதிர்கின்றார்களா? என்பதைத் தீர்மானிக்க வாய்ப்பு வழங்குவார்களாயின் தமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் இடைக்கால சிவில் நிர்வாகத்தை நடத்துமாறு அவர்களைக் கோரலாம். இத்தகைய ஒழுங்கு சமாதான வழிமுறைக்கு உதவக்கூடும் என்பதுடன் அதிகாரப் பகிர்வு யோசனையை நடைமுறைப்படுத்தும் நாட்பத்திற்கும் உதவியாக இருக்கும். இப்போதும் விடுதலைப் புலிகள் வசமுள்ள பிரதேசங்களிலும் சிவில் நிர்வாகம் நடக்கும் பிரதேசங்களிலும் கொழும்பு தமிழ் கட்சிகள் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த இயளலவு பலமோ அல்லது மக்கள் ஆதரவினை கொண்டுள்ளனர் என்றோ சொல்ல முடியாது. விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் தமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் மீள நிலைநாட்டப்பட இடமளிக்கப்பட வேண்டும். மத்திய அரசாங்கத்தின் செலவில் குடியகன்ற மக்கள் மீள குடியமர்த்தப்படல் வேண்டும். இடைக்கால நடவடிக்கையாக ஒரு தமிழ் சிவில் நிர்வாகத்தை இங்கு உருவாக்குவது அவசியமாகின்றது. சிவில் ஆட்சியை பராமரிக்க மத்திய அரசு ஒரு நல்ல நிர்வாகக் குழுவை நியமிக்க வேண்டும். ஆனால் இதில் இறுதியில் அவசியமானது என்னவென்றால் ஒரு நல்ல நிர்வாகம் அல்ல தமிழர்களின் சுய ஆட்சியே.

* அதிகாரப் பரவலாக்கம்: 1991 ஆகஸ்ட் முதல் 1995 ஆகஸ்ட் வரை முரண்பாட்டு தீர்வு உபாயங்கள்

** ஆனந்த வெலிஹேன M.A

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது முரண்பாட்டு தீர்வுக்கான வழிமுறையை விளக்குவதற்கு 1991 ஆகஸ்ட் மாதம் பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் வெளியிடப்பட்ட அதிகாரப் பகிர்வு பற்றிய "பொதி" (Package) இன்றியமையாத ஒன்றாக காணப்பட்டது. இப்பிரேரணையின் நோக்கம் "நாட்டில் அமைதியையும் அரசியல் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக அவசியமான வழிமுறைகளை சிபாரிசு செய்வதாகும்."

பாராளுமன்ற தெரிவுக் குழு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் 1991 ஆகஸ்ட் 9ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் நோக்கங்கள் பின்வருமாறு அமைந்திருந்தன.

1. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வு செய்வதன் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பது.

2. நாட்டின் பிரிவினையையும் அப்பாவிகளின் கொலைகளையும் இராணுவமயமாக்கல் காரணமாக ஏற்படும் வன்முறைகள் போன்ற காரணங்களை கட்டுப்படுத்துவதற்காக அமைதியையும் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதுடன் பாதுகாப்பு செலவுகளை குறைத்து அதன் வழியாக பொருளாதார வளர்ச்சியையும் தேசிய அபிவிருத்தியையும் துரிதப்படுத்துவதாகும்.[1]

3. பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தொழிற்பாட்டை அறிக்கை மூலமாக சபாநாயகர் கௌரவ எச். எம். முகமட் அவர்களுக்கு 12.11.1993 அன்று சமர்ப்பித்தது. இத்துடன் ஸ்ரீ.ல.சு.க. (S. L. F. P.) சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று பிரேரித்து வழிமொழிந்தனர்.[2] இப்பிரேரணைக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

---

*1 ஹன்சாட் C 206 - 12.11.93
*2 ஹன்சாட் C 206 - 12.11.93
* Strateestor Ethnic Confict Resolution 1991 Augest - 1995 Augest
** Ananda Weliyange Lecture University of Peradeniya.

விளைவு: முதலாம் கட்டம் :

இங்கு பாராளுமன்ற தெரிவுக்குழு தற்காலிக அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதாவது பெரும்பான்மையினர் உடன்பாட்டின்படி பிரேரணைகளை ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பனவற்றுடன் யாழ் மாவட்ட பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்கள், கே. சீனிவாசன், பகிர் செகுடாவூட் போன்றோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இது ஓர் இடைக்கால ஏற்பாடாகும். தமிழ் அரசியல் கட்சிகளும், இ.தொ.கா. இந்த ஏற்பாட்டை எதிர்த்ததுடன் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் இருந்து இக்கட்சிகள் வெளியேறின. ஆனால் ஏறக்குறைய 300 பிரேரணைகள் பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

இம்முன்னூறு பிரேரணைகளும் கட்சி அடிப்படையிலும் நிறுவன அடிப்படையிலும், தனிநபர் அடிப்படையிலும் வகைமீடு செய்யப்பட்டன. இப்பிரேரணைகள் ஆய்வு செய்யப்பட்ட பின்பு தெரிவுக்குழு அதனை எண்ணக்கரு அடிப்படையிலான (Concept Paper) ஒரு பத்திரமாக வெளியிட்டது. இப்பத்திரத்தின் பிரதான நோக்கம் வட, கிழக்கு மாகாணங்களுக்கு வெவ்வேறான இரண்டு மாகாண சபைகளை ஏற்படுத்துவது, அதற்காக அதிகாரப் பகிர்வு அவசியம் என்பதை வெளிப்படுத்துவது. இத்துடன் இவை இரண்டுக்கும் பொதுவாக ஒரு நிலையான ஓர் உயர் மன்றம் அமைக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான உறுப்பினர்கள் இவ்விரண்டு சபைகளில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டுமென்றும் அம் மன்றம் இவ்விரு மாகாண அபிவிருத்திக்கும் தேவையான திட்டங்கள் என்பவற்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதற்கான அதிகாரங்கள் இம்மன்றுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் பிரேரிக்கப்பட்டது. இவ்விரு மாகாணங்களின் அங்கத்தவர்களை உள்ளடக்கிய 6 உயர் மன்றங்கள் பிராந்திய சபை என்று அழைக்கப்படும்.

இங்கு அதிகார பகிர்வின் உயர் நோக்கம் என்பது பாராளுமன்றம் ஒரு மேற்சபை, அதிகாரப் பகிர்வு ஆவணக்குழு, சுதந்திரமான நிதிக்குழு என்பவற்றை உள்ளடக்கி இருக்க வேண்டும் என்பதாகும். இப்பிரேரணைகள் யாவும் மீளாய்வு செய்து விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு வெளியிடப்பட்ட அறிக்கை "தெரிவுப்பத்திரம்" என்றழைக்கப்பட்டது.

"தெரிவு பத்திரத்தின்" மீது தமிழ்க் கட்சிகள் (ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், ஈ.என்.டி.எல்.எப்., புளொட் தமிழ் காங்கிரஸ்) களுடன் இ.தொ.கா. என்பன முரண்பட்டன. பின் இக் கட்சிகள் அனைத்தும் இணைந்து நான்கு அம்ச கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒரு பிரேரணையை முன்வைத்தன. அதன் அதிகாரப் பகிர்வு முறையானது இந்திய அரைசமஷ்டி முறையுடன் தொடர்புபட்டது. எவ்வாறாயினும் திரு சீனிவாசன் தன் அறிக்கையில் இவ்விரண்டு மாகாணச் சபைகளும் வெவ்வேறு சமஷ்டி அலகுகளாக அமைய வேண்டுமென குறிப்பிட்டார். இப்பிரேரணையை தமிழ் அரசியல் கட்சிகளும் இ.தொ.கா. வும் நிராகரித்தன. இ.தொ.கா. பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து விலகி தமிழ் கட்சிகள் முன்வைத்த நான்கு அம்சக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றும் வடகிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு தனி ஒரு நிர்வாக அலகாக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியது.

பின்னர் பாராளுமன்ற தெரிவுக்குழு சீனிவாசன் அறிக்கையின் உள்ளடக்கங்களை விரிவுபடுத்தி பாராளுமன்றத்துக்கு பக்கசார்பற்ற ஓர் இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தது. இந்த நிலையிலே தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து தங்களின் அடுத்த செயல்த்திட்ட நடவடிக்கை என்ன என்பதை சிந்திக்க ஆரம்பித்தன. இவர்கள் வெளியிட்ட அறிக்கை பற்றி பாராளுமன்ற தெரிவுக்குழு எவ்வித கருத்தையும் கொள்ளவில்லை. இவர்களின் கருத்துப்படி பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இவ்விடைக்கால அறிக்கையின் பிரேரணைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்களிப்பு பிரதானமானது.

இதன் நான்கம்ச கோரிக்கைகள் பின்வருமாறு அமைந்திருந்தன்

1. வடக்கு கிழக்கு உள்ளடக்கப்பட்ட பகுதிக்கு ஓர் அரசியல் நிர்வாக அலகாக ஏற்படுத்தல்.
2. மாகாண சபைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்குதல்.
3. முஸ்லிம்களுக்கு தேவையான மாகாண அலகாக ஏற்படுத்தல்.
4. வடக்கு, கிழக்கு மாகாண சிங்கள் மக்களுக்கு ஏனைய மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களை போல உரிமைகளை வழங்குதல்.

இரண்டாவது கட்டம் :

ஆகவே பாராளுமன்ற தெரிவுக்குழு செயற்பாட்டில் இரண்டாவது கட்டத்தின் அபிவிருத்தியை பின்வருமாறு விளக்கலாம். இது, முதல்

இருந்த பிரேரணையில் இருந்து தெளிவாக்கப்பட்ட கோரிக்கைகளாக உருவாக்கப்பட்டதுடன் ஆரம்பமானது. இதன் முக்கிய உள்ளடக்கம் வட, கிழக்கு மாகாணங்கள் வெவ்வேறான மாகாண சபைகளை கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். பெரும்பான்மை மக்களின் பொது உடன்பாட்டை அது உள்ளடக்கியுள்ளது என்பதை அவர்கள், வேறுபட்ட நிலைகளில் விளங்கிக் கொண்டார்கள். அதாவது பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கையை சிங்கள தேர்தல் தொகுதிகளை அநேகமாக பிரதிநிதித்துவம் செய்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, தமிழ் மக்களின் உண்மையான உரிமைகளையும் குமுறல்களையும் விளங்கிக் கொள்ளமுடியாதது மட்டுமல்ல அதற்கு தேவையான அரசியல் மனோசித்தம் இல்லை என்பது இதிலிருந்து தெளிவாகின்றது என எண்ணினர். * [3]

மூன்றாம் கட்டம் :

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் 3ம் கட்டத்தில் மிகவும் முக்கியமான அம்சம் என்னவெனில் அது இதற்கு முன் என்றுமில்லாத வகையில் தமது பங்களிப்பை இதில் பிரதிபலிக்கச் செய்தது. இது பாராளுமன்ற தெரிவுக் குழுவின் மிகவும் முக்கிய வெற்றியென்று குறிப்பிடலாம். அது அரசாங்க உறுப்பினர்களாலும் எதிர்கட்சி உறுப்பினர்களாலும் ஏற்படுத்தப்பட்ட ஒரு பொது உடன்பாட்டுக்கு வழிவகுத்தது. இதற்கு முன்னுள்ள காலப்பகுதியில் முரண்பாட்டுத் தீர்வுகள், வழிமுறைகள் முடிவற்ற ஒரு தோல்வி என்ற கட்டத்திற்கு வந்தமைக்கான காரணம் ஐ.தே.கட்சி ஸ்ரீ.ல.சு.க என்பவற்றுக்கிடையில் ஒரு பொது உடன்பாடு ஏற்படாமையாகும். அதாவது எதிர்கட்சிகள் எப்போதும் சமாதான உடன்படிக்கைகளுக்கு எதிராக நின்றமையாகும். பண்டா-செல்வா உடன்படிக்கை ஸ்ரீ.ல.சு.க. அரசாங்ககால கட்டத்தில் உருவாக்கப்பட்டபோது அதற்கு ஐ.தே.க.யே எதிராக நின்றது. டட்லி-செல்வா உடன்படிக்கை ஐ.தே.கட்சியின் காலத்தில் பிரேரிக்கப்பட்டபோது அதற்கு ஸ்ரீ.ல.சு.க. எதிர்கட்சியில் இருந்து எதிர்ப்பு தெரிவித்தது. எனவே அரசாங்கத்திற்கும் எதிர்கட்சிக்கும் இடையில் பொது உடன்பாடொன்று ஏற்படுத்துவது இலங்கை இனப்பிரச்சனை தீர்வுக்கு மிகவும் இன்றியமையாதது என்பது இதில் இருந்து தெளிவாகின்றது. இவ்வுடன்பாட்டை ஏற்படுத்த இன்று ஐ.தே.க. காட்டிய உற்சாகம் ஆர்வம் என்பன பாராட்டப்பட வேண்டியது ஆகும்.

---

* [3] Lankgurdian 15.11.1993 P5

பாராளுமன்ற தெரிவுக்குழு இனப்பிரச்சனைக்கு தீர்வினைக்காண எல்லா அரசியல் கட்சிகளுக்கும் ஏற்ற சாதகமான சகல வழிமுறைகளையும் கையாண்டது. ஆகவே பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பிரதிநிதித்துவம் செய்யும் ஐ.தே கட்சி (UNP), ஸ்ரீ.ல.சு.க (SLFP), கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), கமியூனிஷ்கட்சி (CP), லங்கா சமசமாஜகட்சி (LSSP) போன்ற கட்சிகளின் அங்கத்தவர்கள் உள்ளடங்கிய தெரிவுக்குழு ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளார்களென்று சபாநாயகராகிய உமக்கு அறிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன் என்று தெரிவுக்குழு தலைவர் மங்கள முனசிங்க பாராளுமன்றத்தில் [4] குறிப்பிட்டார். அப்போது தமிழ் அரசியல் கட்சிகள் ஐ.தே.கட்சியும் ஸ்ரீ.ல.சு.கட்சியும் இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தாங்கள் எந்தவிதமான கோரிக்கைகளையும் உள்ளடக்கிய அறிக்கையை பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கவில்லையென்று கண்டித்தன.

4ம் கட்டம் :

பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் வெளிப்படுத்திய பதில்கள் நான்காம் கட்டத்தில் குறிப்பிடுவது பிரதானமானது. அத்துடன் தமிழ் அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (C.W.C.) வகித்த பங்களிப்பும் இங்கு பிரதானமானது. இவர்களின் அங்கத்துவம் தெரிவுக்குழுவின் தொழிற்பாட்டுக்கு பெரும் பங்காற்றியது. ஆனால் இவர்களின் பங்களிப்பை பூர்த்தி செய்யமுடியாத போதும் இவர்கள் பாராளுமன்ற தெரிவுக் குழு தொடர்ச்சியாக இயங்குவதற்கு துணையாக இருந்தனர். இவர்களின் பங்களிப்பு வேறான ஒன்றாக எடுத்துக் காட்டப்பட்டது. அதாவது நான்கு அம்ச கோரிக்கைகள் உள்ளடக்கிய அறிக்கையை சமர்ப்பித்து அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி பாராளுமன்ற செயற்குழுவின் முடிவுகளையும் குறைபாடுகளையும் தர்க்க ரீதியாக விமர்சித்தது. தமிழ் அரசியல் கட்சிகளின் ஒன்றிணைக்கப்பட்ட அடிப்படையில் கொண்டு நடத்தப்பட்டது. இது தமிழ் அரசியல் கட்சிகளின் ஐக்கியத்தை எடுத்துக் காட்டியதுடன் அவர்கள் விடுதலைப்புலிகளை சார்ந்தவர்கள் அல்ல என்பது எடுத்துக்காட்டப்பட்டது. இத்துடன் இவர்களால் இ.தொ.கா. வின் நடவடிக்கைகள் உதவிகளை வெற்றிகரமாக பெற்றுக் கொள்ளவும் முடிந்தது. இ.தொ.கா ஒத்துழைப்பு தமிழ் கட்சிகளின் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு ஒரு பிரதான காரணியாக இங்கு விளங்கியது.

முதலாவது இ.தொ.கா. அரசாங்க கட்சிகளுடன் ஒன்றிணைந்து இருந்ததாலும், திரு. எஸ். தொண்டமான் அமைச்சரவையில் ஒரு உறுப்பினர் என்றவகையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அரசாங்கத்தின் மீது செல்வாக்கை செலுத்துவதற்கு ஏதுவாக இருந்தது.

இரண்டாவது இ.தொ.கா தமிழ் கட்சிகளும் சிநேகபூர்வ உறவை ஏற்படுத்தி தன் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அரசாங்கத்தை உற்சாகப்படுத்துவதற்கு வழி காட்டியது. தமிழ் அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு காட்டிய ஆதரவை உற்று நோக்கும்போது விடுதலைப்புலிகளின் பங்களிப்பு ஆரம்பத்தில் இருந்து வெற்றிடமாகவே உள்ளது. இதற்கு பல காரணங்கள் இருந்தபோதும் பிரதானமாக விடுதலைப்புலிகளுக்கு பாராளுமன்ற பிரதிநித்துவம் இல்லை என்பதே இவர்கள் இதில் பங்குபற்றாமல் விட்டதற்கு பிரதான காரணமென்று கூறலாம். அத்துடன் இவர்கள் பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு தமது பிரதிநிதிகளையோ அல்லது யோசனைகளையோ சமர்பிக்கவில்லை.

விடுதலைப் புலிகள் ஜனநாயக பாதைகளில் இருந்து விலகி இராணுவப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ் அரசியல் கட்சிகள் சமாதான உடன்பாட்டின் அவசியத்தை எடுத்து காட்டி பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கைளை விமர்சித்தது. விடுதலைப் புலிகளின் வன்முறை அரசியல் போராட்டத்திற்கு ஒரு உந்துகோலாக இது அமைந்தது. இத்துடன் விடுதலை புலிகளின் ஆயுதபோராட்டமும் அதன் துரித வளர்ச்சியும் தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய அவசியத்தை ஆழப்படுத்தியது. இவர்கள் தமது 4 அம்ச கோரிக்கையின் அவசியத்தை எடுத்துக்காட்டினர். தமிழ் அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு காட்டிய ஆர்வமும் பங்களிப்பும் விமர்சிக்கப்படும்போது 2 பிரதான கருத்துகள் இங்கு தெளிவாகின்றது. இவர்களின் வாதம் பாராளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கை தான்தோன்றித்தனமான யோசகைகளை தமிழ் மக்கள் மீது சுமத்துவதென்பதாகும். வேறுவகையில் கூறுவதானால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை சிங்கள தமிழ் மக்களின் பொது உடன்பாட்டை பிரதிபலிக்கவில்லை என்பதாகும்.

எதிர்கால யோசனைகள்

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஆரம்பமும் தொழிற்பாடும் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்ட உபாயமாகும். இலங்கை கொள்கைத் திட்டங்களை தீட்டுவதற்கு துணைபுரியும்

இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு எடுத்த சில வழிமுறைகள் பற்றிய அறிவும் அனுபவமும் எதிர்கால நடவடிக்கைக்கு இன்றியமையாதது. குறிப்பாக இதன் உபாயங்களும் குறைபாடுகளும் அழிவுகளும் விமர்சனங்களும் நுணுக்கமாக ஆராயப்பட்டு ஒரு உறுதியான வழிக்கு இட்டுச் செல்ல இது உதவும். பின்வரும் அம்சங்களும் ஆலோசனைகளும் ஆய்வு செய்யப்பட்டு ஓர் உறுதியான தீர்வுக்கு இட்டு செல்ல வேண்டும் என்பதாகும்.

1. வட கிழக்கு மாகாணச் சபைகளை ஒன்றிணைப்பது அல்லது அவற்றை மீள பிரித்து இரண்டு மாகாணங்களாக கொண்டுவருவது. அதற்கு தீர்வாக தற்போதுள்ள எல்லைகளை மாற்றி அமைத்து புதிய பிராந்தியத்தை உருவாக்குவதில் அக்கறை கொள்ளலாம்.

2. அதன் பொருள் வட கிழக்கு மாகாணங்களில் உள்ள நிலங்கள் பிராந்தியத்தின் தமிழ் சிங்கள முஸ்லிம்களை மையமாகக் கொண்டு மீள் வரைபு செய்யப்படல் வேண்டும் என்பதாகும். இதன் அடிப்படையில் வட, கிழக்கு பிராந்தியம் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. வடக்குடன் திருகோணமலை பகுதியில் உள்ள ஒரு பகுதி இணைக்கப்பட வேண்டும்.

2. சிங்கள முஸ்லிம்கள் பெரும்பான்னையாக உள்ள பகுதி கிழக்குடன் இணைக்கப்பட வேண்டும்.

3. பகிரப்பட வேண்டிய நில அளவு மீள் ஆராயப்பட்டு அதற்கென சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணி விடயங்கள் என்பனவும் பிரதானமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

4. அதிகாரப் பகிர்வு பிராந்தியத்துக்கு சார்பாக இருத்தல் வேண்டும். ஆகவே ஜனநாயக சோஸலிச இலங்கை குடியரசு பிராந்திய சபைகளின் ஒன்றியமாக அமைந்து அதன் வழியாக இறைமையுடைய ஒன்றியமாக்கப்பட்ட நிலப்பரப்பினை உடைய சுதந்திரமான அரசாக இப்பிராந்திய சபை இருக்க வேண்டும்.

விமர்சனங்கள்:–

1. பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தொழிற்பாட்டையும் அடைவுகளையும் ஆராயும்போது அரசாங்கத்திற்கும் எதிர்கட்சிக்கும் இடையில் ஒரு பொது உடன்பாட்டை அடைவதற்கு இது

இடமளித்துள்ளது. ஏற்கனவே இதன் குறிக்கோள் பிராந்தியங்களாக காணப்பட்டிருக்க வேண்டும். அதாவது பாராளுமன்றத் தெரிவுக்குழு சிங்களவர்கள் தமிழர்களின் பொது உடன்பாட்டை அடைவதற்கு தமது குறிக்கோள்களை கொண்டிருக்க வேண்டும்.

2. சில முக்கிய விடயங்கள், பிரச்சினைகள் தெரிவுக்குழுவுகட்கு சமர்ப்பிக்கப்பட்டபோதும் அவை அங்கு மூடி மறைக்கப்பட்டு இன்றுவரை யோசனைக்குள் உட்படுத்தப்படவில்லை. இதைவிட வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்பதா ஒன்றிணைப்பதா? ஏற்பதற்கு மட்டுமே மேலதிக கவனம் செலுத்தப்பட்டது.

3. எதிர்காலத்தில் எடுக்கப்படும் இனப்பிரச்சனைகளுக்கு தீர்வு தெரிவுக் குழுவின் யோசனைகளின் குழலின் அடிப்படையில் ஆழமாக ஆராயப்பட வேண்டும். எதிர்கால அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் குறைபாடுகளையும், வரையறைகளையும், அனுபவங்களையும் கவனத்தில் கொண்டு வந்தால் மட்டுமே ஒரு உறுதியான முடிவிற்கு நாம் வரலாம்.

1995ஆம் ஆண்டு புதிய அரசியல் தீர்வு திட்டத்தின் முக்கியத்துவம்.

1995 ஆகஸ்ட் 3ஆம் திகதி பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் பிரேரிக்கப்பட்ட புதிய அதிகாரப்பகிர்வு யோசனைகள் பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கை வெளியிடப்பட்டு நான்கு வருடங்கற்கு பின்பு வெளியிடப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 95 அறிக்கையை உற்றுநோக்கினால் அது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தொடர்ச்சியான செயற்பாட்டின் வெளிப்பாடாகும். அத்துடன் அது முடிவானதும் இறுதியானதுமான ஒன்றாக கருதப்படுகின்றது. இந்த நகல் சமர்பணத்துக்கு நாட்டின் புத்திஜீவிகள் வெளியிட்ட ஆதரவு குறிப்பிடத்தக்கது. இவர்கள் நாட்டின் உண்மையான அமைதியையும் உறுதிபாட்டையும் நிலைநாட்டும் நோக்கத்துடன் கருத்து வெளியிட்டுள்ளனர். இப்புதிய யோசனைகள் பாராளுமன்ற தெரிவுக்குழு பெற்றுக் கொடுக்காத சாதக அம்சங்களை பெற்றுக் கொடுக்கின்றது. குறிப்பாக விடுதலை புலிகள் தவிர தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் இதற்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

இப் புதிய யோசனைகள் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து மேலெழுந்த ஒன்றென்று சனாதிபதி திருமதி சந்திரிகா குமாரணதுங்க நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போது குறிப்பிட்டார். மேலும், அரசின்

புதிய அதிகாரப் பகிர்வு போக்கானது பின்வருவனவற்றை உறுதி செய்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் பிரதான நோக்கம் நாட்டின் பன்மை சமூகத்தை ஓர் அரசியல் திட்ட கட்டமைப்பு முறையில் மீள் வரைபு செய்து அதன் வாயிலாக ஒன்றிணைக்கப்பட்ட உயர் அதிகாரமுடைய ஓர் இலங்கை குடியரசை அமைப்பதாகும். மேலும் அரசாங்கத்தின் இவ்வாறான அரசியல் திட்ட வரைபு நாட்டுமக்களுக்கு பாதுகாப்பையும் கௌரவத்தையும் சமத்துவத்தையும் அதனை அனுபவிக்கும் உரிமையையும் வழங்கும் அதிகாரப் பகிர்வு திட்டம் பிராந்திய சபைகளை ஏற்படுத்தி நாட்டின் ஒற்றுமையையும் மேலாதிக்கத்தையும் உறுதிபாட்டையும் ஜனநாயக பன்மை தன்மையையும் ஏற்படுத்த உதவும்.

மேலும் இப் புதிய யோசனைகளை எடுத்துக் கூறும் போது அது இலங்கையின் இனப்பிரச்சனையை உறுதியுடன் தீர்க்கப்படும் என்ற நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். அதாவது இது தான்தோன்றித்தனமாக அல்லது சுயநலத்துடன் இயற்றப்படாமல் மாறாக பொறுப்புணர்ச்சிகளுடன் நாட்டு நல உணர்ச்சியுடன் வடிவமைக்கப்பட்ட யோசனை பொதியாகும் (Package). மேலும் புதிய யோசனைகள் இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட சகல யோசனைகளினதும் உள்ளடக்கங்களின் முடிவாகும். எனவே 1995 சமர்ப்பிக்கப்பட்ட யோசனையே நாட்டின் சகலருக்கும் சமாதானத்தை ஏற்படுத்த புதிதாக பூத்த புது மலராகும்

* Ceylon Daily News, August 04, 1995, p. 4.

* அதிகார பரவலாக்களும் புறநிலை யதார்த்தமும்

** ரா. நித்தியானந்தன்

அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான யதார்த்தத்தை புறநிலை பார்வை ஒன்றிலிருந்து கதைப்பது எம்மை மீளதோர் சிந்தனைக்கு இட்டு செல்லுமென்றே நினைக்கின்றேன். இனப்பிரச்சனையும் அதன் போராட்டங்களும் வர்க்கப் போராட்டமல்ல என்பது எந்தளவுக்கு உண்மையோ, அந்தளவுக்கு ஏதோர் வடிவத்தில் அது ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டம்தான். அது எவ்வகை சார்ந்த அரசியலாக இருந்தபோதும் வளம் குன்றிய, அதன் சார்பளவில் பொருளாதார தீதியாக பலவீனப்பட்டிருக்கின்ற ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற சிறுபான்மையின மக்கள் தமக்கு கிடைக்கப் பெறாத அல்லது புறக்கணிக்கப்பட்ட பொருளியல் மற்றும் அரசியல்சார் தேவைகளை சட்டபூர்வமாக நிலைநாட்டிக் கொள்ள முற்படும்போது அங்கு இனமுருகல்நிலை முன்கொணரப்படுகின்றது. "தேசிய நுகர்வாளர்களை" திருப்தி செய்யமுடியாத, வறுமையை நோக்கி சரிந்து கொண்டிருக்கின்ற உற்பத்தி சக்திக்கும் உற்பத்தி உறவுக்கும் இடையிலான முரண்பாட்டை உச்சளவில் சந்திக்கின்ற ஓர் அரசு. தேசிய அளவில் கவன ஈர்ப்பினை திசை திருப்புவதற்கும் (சில நாடுகள் சர்வதேசிய அளவிலும்) தன்னை தனிமுதன்மையாளனாக்குவதற்கும் அதன் மூலம் அதிகாரம், அரசியல் பலம் அந்தஸ்து என்பவற்றை தங்க வைத்துக் கொள்வதற்கும் முதலாளித்துவ பிற்போக்குத்தனம் இன அரசு, மத அரசு, மொழி அரசு என்ற பதாகைகளை சுமந்து கொள்கின்றபோது தான் தேசிய சிறுபான்மை இன மக்கள் வர்க்க கண்ணோட்டத்துக்கப்பால் பெரும்பான்மை இன மக்களை விரோத கண்கொண்டு நோக்க ஆரம்பிக்கின்றனர். ஏனெனில் இந்த நிகழ்தகவற்ற, அர்த்தமற்ற குறியீடுகளால் முதல் பாதிக்கப்படுவது சிறுபான்மை இன மக்கள்தான்.

மனிதன் ஓர் உயிர் வாழும் பிராணி, ஜீவாதார நலன்களே அவன் வாழ்வில் ஆதாரம். அந்த நலன்களை பொருளாதாரமே தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் அடிப்படையில் அவன் நுகர்வாளன் என்ற வகையிலேயே தனது போராட்டத்தை ஆரம்பிக்கின்றான். அது அவனுக்கு கிட்டாதபோது, அடுத்த கட்டத்தில் தனது உரிமைகள்

---

* Devolution and It's Reality of De Heran and Stand Point

** R. Nityanandan - Asst. Lecturer, University of Peradeniya.

என்ற அடிப்படையில் கோரிக்கைகளை முன்வைக்கின்றான். அவை மறுதளிக்கப்படும்போது அதற்கான காரணங்களை இனம், மதம் என்ற (ஒரு பல்லின நாட்டில்) வேறு ஒரு கோணத்தில் தேட தலைப்படுகின்றான். தான் வெப்பமேற்றிக் கொண்ட தேடல்களை இனசார்பு பரிமாணங்களாக தனது மாற்று சகோதரனுக்கு உரம் ஊட்டுகின்றான். அப்போது அங்கு இன போராட்ட சிந்தனைகள் வெளிக்கிளம்புகின்றன. ஆரம்பத்தில் தாராண்மைவாத வழிமுறைகளின் மூலமே அவனது போராட்டம் ஆரம்பமாகின்றது. பேச்சுவார்த்தை, அகிம்சை வழி, சட்டமறுப்பு என்ற ஆரம்பம் இறுதியில் அவனை வன்முறையாளனாக்கின்றது.

ஆனால் ஏற்கனவே பலவீனப்பட்டு போயிருக்கின்ற முதலாளித்துவ சக்திகளால் அவனின் கோரிக்கைகள் மூழ்கடிக்கப்பட்டு போய்விடுகின்றன. அவன் சார்ந்த உற்பத்தி உறவுகள் உற்பத்தி சக்திகள் என்பவற்றின் முரண்பாடுகள் என்பன அவனின் போராட்டதிற்கு வலிமை சேர்க்கின்றன. தனது போராட்டத்திற்கு கோட்பாட்டு அடிப்படையில் ஆதாரமொன்றை தேடிக் கொள்கின்றபோது நுகர்வாளன் என்ற தளத்திலிருந்து கலாச்சார தேசியவாதம், பிரதேச தேசியவாதம், இனத்தேசியவாதம் என்ற தளத்திற்கு அவன் மாறிச் செல்கின்றன். பின்னர் அது ஆயுத போராட்டமாக பரிணாமம் எடுக்கின்றது. இங்கு அம்மனிதனுக்கு தான் ஒரு வர்க்கம் என்ற அளவிற்கு சிந்திக்க எந்தளவிற்கு கடினமாக இருக்கினறதோ அந்தளவுக்கு தான் ஒரு இனமென்ற வகையில் சிந்திப்பது இலகுவாக இருக்கின்றது. எனவே தான் வர்க்கப் போராட்டம் இனப் போராட்டத்தால் எளிதாக பின்தள்ளப்பட்டுவிடுகின்றது. ஆனால் அடிப்படையில் அவன் நுகர்வாளன் என்ற தளத்திலேயே தொடர்ந்தும் மாறாதிருக்கின்றான். ஆனால் அதைப்பற்றி அவன் இப்போது கிஞ்சித்தும் சிந்திப்பதில்லை.

பிலிப்பைன்சின் மிண்டனாவோ பிரிவினைப் போராட்டமும், சூடானின் தென்பகுதி மக்களின் நைமிரேமி அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களும், இந்தோனிசியாவின் கிழக்கு திமோரின் தனி நாட்டு கோரிக்கைக்கான போராட்டமும், வட அயர்லாந்தின் கிறிஸ்தவ சிறுபான்மையினரின் போராட்டங்களும் இலங்கையின் தமிழீழம் கோரி நடாத்தப்படுகின்ற போராட்டங்களும் இவ்வகையிலேயே தோற்றமும், வளர்ச்சியும் பெற்று வந்துள்ளன. இங்கு ஆளுகின்ற மேலாதிக்க ஒடுக்கு முறையின் நீண்டகால வளர்ச்சி அதற்கெதிராக போராடுகின்ற மக்களின் எதிர்போராட்டங்களின் வளர்ச்சியில் சமநிலையை தோற்றுவிக்கின்றது. அது பின்னர் சிவில் யுத்தமாக உருபெறுகின்றது. இது முதலாளித்துவ

பொறிக்குள் சிக்கிக் கொண்டிருக்கின்ற இனப்போராட்ட வரலாற்றில் தவிர்க்க முடியாத அம்சமாகும். ஆனால் இதனை நடைமுறை அரசியல்வாதிகள் மிகவும் குறுகிய கண்ணோட்டத்தில் பார்ப்பதும், அதனை மக்களுக்கு மிகவும் கொச்சைபடுத்தி காட்டுவதும், ஒடுக்கு முறைகெதிரான போராட்டத்தை மழுங்கடிப்பதுடன் அந்நாட்டின் மக்களை பிற்போக்கான மரபுவாத குறுகிய சிந்தனைக்கு இட்டு சென்று அது தேசிய இனவாத அம்சங்களை பேரின மக்களின் மீது திணித்துவிடுகின்றது. இச்சந்தர்ப்பத்திலேயே முதலாளித்துவ முற்போக்கு சக்திகள் முன்வைக்கின்ற தீர்வுகள் கூட அடிப்பட்டு போய்விடுகின்றன. தேர்தலில் வாக்குவேட்டைக்கு பேரம் பேசும் தளத்திலேயே இது நிகழ்கின்றது. அரசியல் சக்திகளாக இருக்கின்ற அரசியல்வாதிகள் இந்த உணர்வுகளின் சமநிலையிலேயே தமது பிரதிநிதித்துவத்தை பெற முற்படுகின்றனர். எனவே தான் பாராளுமன்ற அரசியலுக்கு இது பெரும் தீணியாகின்றது.

இலங்கையை பொறுத்தவரை பொருளியல் நுகர்தன்மை வளர்ச்சி பெற்ற போதுதான் அரசினை நோக்கி அவற்றிற்கான கோரிக்கைகளும் வீச்சு பெற ஆரம்பித்தன. அதாவது அரசியல்கட்சிகள் பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களை கைப்பற்றவும், பற்றாக்குறையான தேசியவளங்கள் பேரின மக்களை நோக்கி நகர்த்த வேண்டிய தேவை ஆளுங்கட்சிகளுக்கு ஏற்பட்டது. இதற்கு ஏற்புடையதாகவே பிரஜாவுரிமைச் சட்டம், சிங்கள மொழிச் சட்டம், தொழில்வாய்ப்பு மறுப்பு, காணிகுடியேற்றம் என்பன ஏற்படுத்தப்பட்டன. இதில் இதுவரை தமிழர்கள் அனுபவித்த நலன்களும் அடிபட்டு போய்விட்டன. இதன் காரணமாக அரசியல் வரலாற்றில் நீண்ட காலம் தமிழ் கட்சிகள் எதிர்கட்சியில் அமரவும், சலுகைகள் தேவைகள் சமூக நலத்திட்டங்கள் என்பவற்றைவிட தமது உரிமைகளின் அடிப்படையில், கோட்பாட்டின் அடிப்படையில் போராடவும் தலைப்பட்டனர். இது தமிழர்களின் நுகர்தன்மையை மேலும் பின்பள்ளிவிட்டது. இதில் மிகவும் துரதிஷ்டமான விடயம் நுகர்வாளர்களாகிய தமிழர்கள் இந்த சந்தை சக்திகளின், தளத்தில் இருந்து அவர்களின் அடிப்படை நுகர்வினை கூட இறுதியில் நிறைவேற்றி கொள்ள முடியாமல் போனதுதான். எனவே அவர்களுக்கென்றோர் அரசியல் தளம் தேவைப்பட்டது. அப்போது மட்டும் தான் தமக்கென சந்தை சக்திகள், உற்பத்தி உறவுகள் என்பவற்றை உருவாக்கி கொள்ள முடியுமென்ற கருத்துருவங்கள் அவர்களின் மனங்களில் உருபெற்றன. இன்னும் ஒரு வகையில் கூறுவதானால் தேசிய சந்தைபொறிக்குள் சிக்கி கொள்வதனால் பேரின சக்திகள் தம்மை கரண்டுவதைவிட தனக்கென ஒரு அரசியல் தளம் உருவாக்கப்படும்போது

தாம் சுரண்டப்படுவதை தவிர்த்துக் கொள்ளலாமென்று சிறுபான்மை தமிழ் குடிமகன் எண்ணியபோது, தமது உற்பத்தி விநியோக போட்டி தன்மையை குறைக்கலாம் என்று சிறுபான்மையின முதலாளித்துவம் எண்ணியது. அத்துடன் தமது நுகர்வாளர்களின் தேவையை ஒழுங்குபடுத்துவதற்கு இதுவே இறுதிவாய்ப்பென தமிழர் எண்ணத் தலைப்பட்டனர். இதில் தேசிய அளவில் மூன்று தெரிவுகள் காணப்படுகின்றன.

(1) தேசிய பொறியினை வலுப்படுத்துவதன் மூலம் பேரின மக்களினதும் சிறுபான்மையினரினதும் நுகர்வினை ஈடுசெய்வது.

(2) தேசிய பொறிக்குள் சிறிய உப-தேசிய பொறியினை உருவாக்குவது. இது இனவாரியான சந்தை சக்திகள், பிரதேச மட்ட சந்தைச் சக்திகளுக்கும் இடமளிப்பது.

(3) சுயாதீனமான இனத்தேசிய பொறி ஒன்றை உருவாக்குவது. அதாவது தேசிய பொறியில் இருந்து முற்றாக விலகுவது.

இதில் முதலாவது பொறி சிங்கள பேரினவாத தீவிரவாதிகளாலும், இரண்டாவது பொறி சிங்களவர், தமிழ் மிதவாதிகள், புத்திஜீவிகள் என்போராலும் மூன்றாவது பொறி தமிழ் இனத்தின் தீவிரவாதிகளாலும் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்குள்ள இரண்டாவது பொறியினை மையமாகக் கொண்டே இப்போதைய அதிகார பரவலாக்கம் பற்றி பேசப்படுகின்றது. இதுவே தேசம்-பிரிவினை என்பவற்றுக்கு இடையிலான போராட்டம் ஆகும். இதுவே ஒற்றையாட்சிக்கும் தனிநாட்டுக் கோரிக்கைக்கும் இடையேயுள்ள போராட்டமாகும்.

அதிகார பரவல் என்னும் போது, அதிகாரப் பரவலாக்களுக்கும் ஜனநாயக மயமாக்களுக்கும் சுதந்திர போராட்டங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. அது ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு தொடர்ச்சியாக மாறிச் செல்லும் போக்கினைக் கொண்டு காணப்படுகின்றது. இதன் இறுதி அடைவு சுயநிர்ணய உரிமை எனப்படுகின்றது. மாக்சியம் கூறுகின்ற சுயநிர்ணய உரிமைக்கும், லெனின் முதலில் கணக்குத் தீர்க்கப்படவேண்டியது இனமோதல்களே என்ற கூற்றுக்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு. வர்க்கங்கள் ஒன்றுபடவும், அவர்கள் போராட்டங்கள் ஒருதிசை அமைவு பெறவும் அதன் இனமுரண்பாடுகளுக்கு

முதலில் கணக்கு தீர்க்கப்பட வேண்டும். எப்படி கணக்கு தீர்ப்பது என்றால் அவர்களின் அதாவது சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது. சுயநிர்ணய உரிமை என்பது ஒரு இனம் (ஒரு தேசிய எல்லை, அல்லது பிரதேச எல்லைக்குள் நின்று) தம்மினம், தம்மொழி, தமது பிரதேசம், தமது கட்சி, தமது சட்டம், தமது ஆட்சி அதிகாரம் இறுதியில் தமது இறைமை எது என்பதை தாமே தீர்மானம் செய்து கொள்ளும் படிநிலை நுகர்வாகும். இதன் முற்றும் முழுதான வரைவிலக்கணம் ஒரு பிரதேசத்தை அதன் உள்ளார்ந்த அர்த்தத்தில் பிரிந்து போக இடமளிப்பதில்லை. ஆனால் அது எந்தளவுக்கு வர்க்க போராட்ட அடைவை நெருங்கி கொண்டிருக்கின்றது என்பதை பொறுத்தமைகின்றது. ஒரு நிலபிரபுத்துவ முதலாளித்துவ அமைப்பின் ஜனநாயக புரட்சிக்கு இந்த சுயநிர்ணய உரிமை அவசியமாகும். சாதாரணமாக இனவாரியான பிரதேச அலகொன்று நில பிரபுத்துவ எச்சங்களை அமுக்கல்களுக்கு உட்பட்டிருக்கின்றபோது அப்பிரதேசத்தின் சுயாட்சியின் அடுத்த கட்டம் நிலப்பிரபுத்துவ எச்சங்களின் முதலாளித்துவ சக்திகளின் கெடுபிடிகளுக்கும் எதிரான போராட்டங்களாக வலிமை பெறலாகும். அங்கு ஜனநாயக தன்மைகள் வீரியம் பெறுவதுடன் சாதி எதிர்ப்பு, பெண்ணுரிமை என்பன எழுச்சி அடையும். மக்கள் தன்மை சுரண்டு முதலாளித்துவ சக்திகளை நேரடியாக இனங்காண்பர். முதலாளித்துவ சக்திகளுக்கெதிரான சக்திகள் வேகமாக ஒன்று திரளும், எழுச்சி பெறும்.

எனவே இலங்கை தமிழ் மக்களை பொறுத்தவரை இனப்பிரச்சனை தேசிய எல்லையில் கணக்கு தீர்க்கப்படுவதற்கு அதிகாரப் பரவல்கள் வேண்டப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது. ஆனால், ஐக்கிய இலங்கையில் சமஷ்டி யோசனையின் ஊடான இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வு கிட்டுமென்றால் அது அடிநிலை சமூக வர்க்கங்களின் பிரச்சனையை தீர்த்துவிட்டது என்று அர்த்தமல்ல. அப்படியென்றால் 13ஆம் திருத்தச் சரத்து மூலம் அதாவது, மாகாண சபை யோசனைகள் மூலம் ஓரளவுக்காவது தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். அது யதார்த்தத்திற்கு புறநிலையானது. ஆனால் அதிகாரப்பரவல் என்பது இங்கு இன்னும் கூடுதலான சுதந்திரங்கள் உரிமைகள் என்பவற்றை அம்மக்களிடம் கொண்டு செல்கின்றது. அதிகார பகிர்வென்பது அடிப்படையில் நாட்டின் குறிப்பிட்ட ஒரு பிரிவினால் அனுபவிக்கின்ற மக்களின் அடிப்படைத் தேவைகள் உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றை சகல மக்களிடமும் கொண்டு செல்வதையே குறிக்கின்றது. இதற்கு என்னதான் மனிதவளங்கள்

இருந்தபோது அது கிஞ்சித்தும் சாத்தியப்பட்டு விடாது. அதிலும் அரை காலனித்துவ முதலாளித்துவ பண்புகளையும், சக்திகளாகவும் கொண்டிருக்கின்ற இலங்கை போன்ற ஒரு நாட்டில் பற்றாக்குறையான வளங்கள் அதனை எப்படி சாத்தியப்படுத்தும். அப்படியே வளங்களை பங்கீடு செய்கின்ற பேரின சக்திகளின் நேர்மையான செயற்பாடு வாக்கு வேட்டைக்கும் அதன் அதிகார அடைவிற்கும் எப்படி இடமளிக்கும். அப்படி நடந்தால் அது பூர்ஷ்வாக்களின் பாராளுமன்ற வரப்பிரசாதத்தையே அர்த்தமற்ற ஒன்றாக்கிவிடாதா? அப்படி நடந்திருந்தால் உலகில் அரைவாசி நாடுகளின் இனப்பிரச்சனை சந்தேகம் தீர்ந்து போயிருக்கமாட்டாதா? எனவே " ஏராளமான பொருளாதார வளங்கள் எம்மிடம் இருக்குமானால் இலகுவாக இப்பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம்" என்று சந்திரிக்கா குமாரணதுங்க கூறிய பத்திரிகைக் குறிப்பு இங்கு ஒருமுறை நினைவுகொள்ளத்தக்கது.

ஆனால் அப்படியிருந்த போதும் அதிகார பரவலாக்கல் ஏற்பாடுகள் ஒரு சமூகத் தேவையினைக் குறித்து நிற்கின்றது. அதாவது பேரின முதலாளித்துவ சக்திகள் சிறுபான்மையின் மக்கள் மீதான சுரண்டலை (பிரதேச மட்டத்தில்) ஒடுக்குமுறைகள் ஓரளவு முடிவுக்குக் கொண்டு வருகின்றது. மறுபுறம் ஜனநாயக ரீதியான அரசியல் சமூகமயமாக்கலுக்கு இது சந்தர்ப்பத்தை வழங்குகிறது. அரசியல் பிரதிநிதித்துவத்தை, இவ் அதிகார பரவலாக்கல் அதிகரிப்பதன் மூலம் பிரதேச மட்டங்களுக்கும் கிராமிய மட்டங்களுக்கும் அரசியல் காலடி எடுத்து வைக்கின்றது இது. பிரதேச அரசியல் நிறுவனங்களை வலுவுள்ளதாக்கும். இது மக்கள் போராட்டங்களை சற்று முன்தள்ளுகின்றதென்றே கூற வேண்டும். இன்னுமொரு வகையில் நாம் கண்டு கொள்வதானால் மக்களே தமக்கு தேவையானவற்றைத் தீர்மானிக்கவும் உற்பத்தி செய்யவும் முன் வருவதற்கு அதிகார பரவலாக்கல் வழிகாட்டுகிறது. அப்போது தனது முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்ற முதலாளித்துவ சக்திகளை பற்றியும் அதன் கையாலாகாத தன்மை பற்றியும் அச் சக்திகளுக்கெதிராக சித்தாந்த ரீதியாக கருத்துக்களை வளர்த்துச் செல்வதற்கு, பல போராட்டங்களுக்கு போர் தொடுக்கும் வழிமுறைகள் இவ் அதிகார பரவலாக்கல் யோசனைகள் பெருமளவு உகந்தது. இதைத் தவிர்த்து இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு (முற்போக்கு) முதலாளித்துவ சக்திகளுக்கு வேறு மார்க்கம் உள்ளதென நான் கருதவில்லை. உலகில் பல மக்கள் வாழ்கின்ற நாடுகளில் இனப் பிரச்சினைக்கு இது ஒரு தீர்வு வழிமுறையாகவேபட்டிருக்கின்றது என்பதை நாம் அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்ள வேண்டும். சுவிட்ஸர்லாந்தில் மூன்று இனங்கள் இணைந்து வாழ்கின்றன.

அதற்கேற்றவாறு அங்கு அவ்வரசியல் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் இனங்களுக்கு ஏற்ற வழிமுறைகளைக் கையாண்டு அரசியல் திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. ஐக்கிய அமெரிக்காவில் சமஷ்டிமுறை இனவாரி அலகுகளாக எல்லைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இந்தியாவின் இனவாரியன மாநில அரசியல் எல்லைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இங்கு இடம்பெறும் போராட்டங்கள் கூட இன்னும் அதிகாரங்களைக் கோரியே இடம் பெறுகின்றது. ஸ்பெயினில் கொன்சால் (Gonzales) அரசுக்குப்பின் சிறுபான்மையினருக்கு அரசாங்கம் சுயாட்சியை வழங்கிய பின் பென்குயி (Banquee) என்ற பிரிவினைவாத இயக்கம் பிரிவினையிலிருந்து விடுவிக்கக் கூடியதாயிருக்கின்றது. சோஸலிச நாடுகளான முன்னைய சோவியத் யூனியன் யூகோஸ்லேவியா போன்ற நாடுகளில் ஏன் இனப் பிரச்சனை தீர்க்கப்படவில்லை என்ற கேள்வி பலரால் எழுப்பப்படுகின்றது. இதற்கு எளிய விடை ஒன்றையே கூறலாம். ஒரு சோஸலிச அரசு நிலைக்க வேண்டுமென்றால் அங்கு ஜனநாயகம் மற்றது மத்தியத்துவம் இரண்டும் சமநிலையாக பேணப்பட வேண்டும். இவ்விரண்டில் எது கூடிக் காணப்பட்டாலும் அங்கு சோஸலிச கட்டுமானம் அழிந்துவிடும். இதுவே விதி. சோவியத் யூனியனில் ஸ்டாலின் ஆட்சிக்கு பின் மத்தியத்துவம் அதிகரித்தது. இனங்கள் மத்தியத்துவத்தின் கீழ் தமது அதிகாரங்களை இழந்தன. சுயநிர்ணய உரிமை என்பது வெறும் காகித சட்டங்களாகின. எனவே இனங்களின் அரசுகள் தமது சுயாட்சிகளாக எழுச்சி பெற்றன. இது சோசலிசஅரசுகளின் உடைவிற்கு முக்கிய காரணிகளில் ஒன்றாகும். இதுவும் எதைக் குறித்து நிற்கின்றது? சோசலிச கட்டுமானத்திலும் அதிகாரப் பகிர்வு அவசியம் என்பதைத் தானே.

இவற்றில் இருந்தெல்லாம் நாம் அனுபவப் பாடமாக கற்றுக் கொள்வது அதிகாரத்துவம் மத்தியத்துவம் ஒற்றையாட்சி என்ற தத்துவங்கள் ஒரு கால எல்லையில் மாற்றம் பெற வேண்டும். அதிகாரப் பகிர்வு இடம் பெற வேண்டும். ஜனநாயகம் எல்லோருக்கும் கிடைக்க வழி கிடைக்க வேண்டும். அல்லது அரசுகளின் அழிவும் பிரிவினையும் தவிர்க்க முடியாது போய்விடும். இது இலங்கைக்கு ஒரு பாடமாகும்.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கலும் முஸ்லிம்களின் அபிலாசைகளும்:

கலாநிதி எஸ். எச். ஹஸ்புல்லா

இலங்கையின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர எல்லா வகையான முயற்சிகளும் இன்று எடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று பிரதேச ரீதியான அதிகாரப்பரவலாக்கல் மூலமாக சிறுபான்மை நலன்களைப் பாதுகாக்கும் முயற்சியாகும்.

இனப்பிரச்சினையின் அடிநாதம் தமிழ் சிறுபான்மையினரின் அரசியல் அபிலாசைகள் மையப்படுத்தப்பட்ட அதிகார முறையால் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதாகும். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றமையால் அப்பிரதேசத்திற்கு சுய ஆட்சிக்கு ஒப்பான அதிகாரங்களை வழங்கி தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை திருப்திப்படுத்தலாம் என்ற கண்ணோட்டம் இன்று பரவலாகக் காணப்படுகின்றது.

இக்கண்ணோட்டத்தில் இருந்து உருவாகிய அரசியல் பரவலாக்கல் தீர்மானங்கள் பல இன்று இலங்கை மக்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றது. இதில் ஒரு கண்ணோட்டம் வடக்கு மாகாண்மும் கிழக்கு மாகாணமும் பரந்த அடிப்படையிலான சமஷ்டி அதிகாரங்களைக் கொண்ட அதிகார பரவலாக்கம் என்ற முறையிலும், மற்றுமொன்று வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்த அடிப்படையிலான சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கம் என்ற முறையும் இரண்டு பரந்த பிரிவாக பிரிக்கக் கூடியதாக காணப்படுகின்றது. இவ்விரண்டு அதிகாரப் பரவலாக்கல் சிந்தனைகளும் இலங்கையர் மத்தியில் ஆதரவையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டின் இரண்டாவது சிறுபான்மையினராகும். வடக்குக் கிழக்கில் முஸ்லிம்கள் முதலாவது சிறுபான்மையினர், விகிதாசார அடிப்படையில் முஸ்லிம்கள் வடக்குக் கிழக்கு மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய 20 வீதமானவர்களாகும்.

தமிழை தாய் மொழியாகப் பேசி தமிழ் மக்களோடு கலாச்சார ரீதியாகவும் கலந்து முஸ்லிம்கள் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் வாழ்ந்தாலும் முஸ்லிம்கள் தம்மை இன, கலாசார அடிப்படையில் தமிழ் மக்களில் இருந்து தனித்துவம் பெற்றவர்கள் என்று கருதுகின்றார்கள். அவ்வடிப்படையில் முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளும் இப்பிரதேசத்திற்கான அதிகாரப்பரவலாக்களில் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற சிந்தனை அண்மைக்காலத்தில் முஸ்லிம்கள் மத்தியிலும், மற்றவர்கள் மத்தியிலும் பிரபல்யம்

பெற்று வருகின்றது.

இந்த அடிப்படையில் வடக்கும் கிழக்கும் இணைந்த அல்லது பிரிந்த அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கல் முயற்சியொன்றில் வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் அபிலாசைகள் எவ்வாறு நோக்கப்பட வேண்டும் என்ற கண்ணோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்படுகின்றது.

வடக்கு–கிழக்குக்கான அதிகாரப்பரவலாக்கலும் முஸ்லிம்களும்:

"வடக்கும் கிழக்கும் இணைந்த ரீதியான அதிகாரப்பரவலாக்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டது" என்பதை இவ்வாய்வுக்கட்டுரையில் ஒரு எடுகோலாகக் கொண்டு அவ்வாறான சந்தர்ப்பத்தில் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் முஸ்லிம் சிறுபான்மையினரின் அரசியல் அபிலாசைகள் என்ன? அவ்வபிலாசைகளின் அடிப்படைகள் என்ன? இவ்வடிப்படைகள் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட கூடியது, கொடுக்கப்பட முடியாதது, கொடுக்கப்படுமானால் எந்த அம்சங்கள் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் அவ் முக்கியத்துவம் எவ்வாறு கொடுக்கப்பட வேண்டும் என்ற அம்சங்களை இக்கட்டுரையின் பின்வரும் பகுதிகள் சுருக்கமாக நோக்குகின்றன.

1. எண்ணிக்கை விகிதாசார ரீதியான முஸ்லிம்களின் முக்கியத்துவம்:

புவியியல் ரீதியாக, பரப்பு ரீதியாக, வளரீதியாக வடக்குக் கிழக்கு இணைந்த மாகாணங்கள் மிகப் பெரியது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 20 வீதத்தையும், இலங்கையின் மொத்த கடற்கரையோரத்தில் மூன்றில் ஒரு வீதக் கடற்கரையையும் இவ்விரண்டு மாகாணங்களும் கொண்டிருக்கின்றன என்பதில் இருந்து இம்மாகாணங்களின் விசாலத்தன்மையை அறிந்து கொள்ளலாம்.

முஸ்லிம்கள் வடக்குக் கிழக்கில் கரந்தும் சில குறிப்பான இடங்களில் செறிந்தும் வாழ்கின்றார்கள். வடக்கு–கிழக்கு இணைந்த மாகாணம் ஒன்றில் மொத்த சனத்தொகையில் 17 வீதத்தினர் முஸ்லிம்களாகும். ஆனால் இவ்விகிதாசாரம் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பிரிந்த நிலையிலும் மாகாண மட்டத்திற்குக் கீழ் நிலையிலுள்ள நிர்வாகப்பிரிவு மட்டத்திலும் எண்ணிக்கை ரீதியாகவும், விகிதாசார ரீதியாகவும் வேறுபட்டு காணப்படுகின்றது. உதாரணமாக கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக மூன்று மாவட்டங்களில் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகவும் காணப்படுகின்றனர்.

அதுபோல கிழக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களிலும் வடமாகாணத்திலும் பல மாவட்ட மட்டத்திற்கு குறைந்த நிர்வாக மட்டத்தில் பிரதேச ரீதியாக முஸ்லிம்கள் செறிந்தும் எண்ணிக்கை ரீதியாகப் பெரும்பான்மையாகவும் இம்முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். இவ்வுண்மையை புள்ளிவிபரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

இந்த முஸ்லிம்களின் பிரதேச ரீதியான விகிதாசார முக்கியத்துவம் எந்த வகையில் வடக்குக் கிழக்கிற்கான அதிகாரப்பரவலாக்கலில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படப் போகின்றது என்பது முக்கியமான அம்சமாகும். முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தை தனியாக எடுத்துக் கொண்டால் மொத்த கிழக்கு மாகாண சனத்தொகையில் முஸ்லிம்களின் விகிதாசாரம் 31 வீதமாகும். வடக்குக் கிழக்கு இணைந்த சூழ்நிலையில் முஸ்லிம்களின் விகிதம் 17 வீதமாக மாறுகின்றது. காரணம் வடமாகாண தமிழ் மக்களின் அதிகரித்த எண்ணிக்கையாகும். இணைந்த மாகாண அடிப்படையிலான மாகாணம் ஒன்றிற்கான அதிகாரப்பரவலாக்கம் நிச்சயமாக கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பொறுத்தவரையில் அத்துடன் பாதுகாப்பு, பொருளாதாரம், கல்வி, கலாசாரம் என்ற கண்ணோட்டத்திலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில் வடக்குக்–கிழக்கு இணைந்த ரீதியான அதிகாரப்பரவலாக்கம் பாதகமான ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது.

2. கிழக்கில் முஸ்லிம்களின் பரம்பல் செறிவும், பிரதேச தனித்துவமும் அதிகாரப்பரவலாக்கமும்:

மேலெழுந்த கண்ணோட்டத்தில் வடக்கும் கிழக்கும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் தொடர்ச்சியான பிரதேசமாகக் கருதப்பட்டாலும் இன ரீதியான குடிசனப்பரம்பலை சற்று ஆழமாக நோக்கினால் மேற்குறித்த தமிழ் மக்கள் செறிவு என்ற அடிப்படையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தின் தெற்குப்பிரதேசமான அம்பாறை மாவட்டத்திலும் வடமாகாணத்தின் வடகிழக்குப் பிரதேசமான மன்னார் பிரதேசத்திலும் முஸ்லிம்களின் செறிவு அதிகமாகவும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தில் இருந்து தனிப்படுத்தக்கூடியதாகவும் காணப்படுகின்றது. இதனைவிட கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் தொடர்ச்சியான பரம்பலில் இருந்து இரண்டு குறிப்பிடத்தக்க முஸ்லிம் பிரதேச செறிவுகளான மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி ஏறாவூர் செறிவும், திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா மூதூர் செறிவும் குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகின்றன. இதன்மூலம் வடக்குக் கிழக்கில் குறிப்பிடத்தக்க பரப்புப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் பிரதேசத் தொடர்ச்சியற்றதாகக் காணப்படுகின்றது.

ஆயின் முஸ்லிம்களின் இந்த பிரதேசச் செறிவு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வாழ்கின்ற பிரதேசமாகும். வடக்குக் கிழக்கு மாகாணங்கள் என்ற கருத்துக்கு சவாலாக காணப்படுகின்றது.

3. வடக்குக் கிழக்கு முஸ்லிம்களின் பொருளாதார முறைகளும் அதிகாரப் பரவலாக்களின் நடவடிக்கைகள் எதிர்நோக்கக் கூடிய பிரச்சினைகளும்:

முஸ்லிம்கள் வடக்குக் கிழக்கில் நெல் விவசாயம், சிறுதானியச் செய்கை, மாடு

வளர்ப்பு, உள்நாட்டு, ஆழ்கடல் மீன்பிடி, மொத்த சில்லறை வியாபாரம், போக்குவரத்து, அங்காடி வியாபாரம் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். வடக்குக் கிழக்கில் பிரதேசத்திற்குப் பிரதேசம் மேற்குறித்த பொருளாதார நடவடிக்கைகளின் முக்கியத்துவம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. வடக்குக் கிழக்கிற்கான அதிகாரப் பரவலாக்கல் நேரடியாகவும்: மறைமுகமாகவும் முஸ்லிம்களின் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடியது என்ற கண்ணோட்டம் சிறுபான்மை முஸ்லிம்கள் மத்தியில் காணப்படுகின்றது. இக்கண்ணோட்டத்தின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:

1. அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் விவசாய நடவடிக்கை:
அம்பாறை மாவட்ட முஸ்லிம்களில் மிகப்பெரும்பான்மையினர் நெல் விவசாய நடவடிக்கையோடு தொடர்புடைய பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களாகும். இப்பிரதேசத்தின் நெல் விவசாயம் இம்மாவட்டத்தின் கிழக்கு எல்லையில் சிங்கள இன மக்கள் வாழும் பிரதேசத்தில் அமைந்திருக்கும் சேனநாயக்கா சமுத்திர நீர்ப்பாசனத்தில் வெகுவாகத் தங்கியிருக்கின்றது. அன்றியும் வரலாற்றுக் கலாசாரக் காரணங்களால் அம்பாறை மாவட்ட முஸ்லிம் விவசாயக் குடியிருப்புக்கள் கிழக்குக் கரையோரமாகவும் இம்முஸ்லிம்களின் விவசாய நிலங்கள் இக்குடியிருப்புக்கு மேற்காகத் தொலை தூரத்தில் காணப்படுகின்றன. பல இடங்களில் சிங்கள தமிழ் கிராமங்களைக் கடந்தே முஸ்லிம் விவசாயிகள் தமது நெற்செய்கைப் பிரதேசத்திற்குச் செல்ல வேண்டியிருக்கின்றது. இத்தன்மை கடந்த காலங்களில் சிறியளவிலான தமிழ்-முஸ்லிம், சிங்கள-முஸ்லிம் இனப்பிரச்சினைகளுக்குக் காரணமாக இருந்தது. இதனால் அதிகாரப் பரவலாக்கம்

1. சிங்கள இன மக்கள் வாழும் பிரதேசத்தில் இருந்து பெறப்படும் நீர்ப்பாசனத்தில் நிச்சயமற்ற தன்மையை எதிர்காலத்தில் உருவாக்கலாம்.

2. தமிழ் மக்கள் வாழும் நிர்வாகப் பகுதிகளுக்குள் காணப்படுகின்ற விவசாய நிலங்களும் அவற்றின் அபிவிருத்தியின் எதிர்காலத்தில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இந்த முஸ்லிம்களினது வாழ்விடமும் விவசாய நிலங்களும் பிரிந்திருக்கின்ற தன்மையும், அவை சிங்கள தமிழ் இன மக்களுடன் தொடர்புற்றிருக்கின்ற பண்புகளும் பொருளாதார வளப்பரம்பல் அம்சங்களைக் கருத்தில் கொள்ளாத இன ரீதியான அதிகாரப் பரவலாக்கம் ஒன்றில் பெரும் பிரச்சினைகளை எதிர்காலத்தில் உருவாக்கக் கூடியது.

அம்பாறை முஸ்லிம்களின் பொருளாதாரப் பிரச்சினைக்குச் சமமான உதாரணங்களாக மட்டக்களப்பு மாவட்ட காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி முஸ்லிம்களின் விவசாய நடவடிக்கையும், மன்னார் மாவட்ட

முசலிப்பிரதேச முஸ்லிம்களின் விவசாய நடவடிக்கையும், அதே போல் வவுனியா முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்களின் சேனை விவசாய நடவடிக்கையும் காணப்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்களை அதிகாரப் பரவலாக்கம் எந்த வகையில் பொருளாதார ரீதியாகத் திருப்திப்படுத்தக்கூடியது என்ற அம்சம் தெளிவற்றுக் காணப்படுகின்றது.

முஸ்லிம்களின் இந்த சுதந்திரமான விவசாய நடவடிக்கைக்கு மற்றுமொரு சவாலாகக் காணப்படுவது தமிழ் மக்களின் அண்மைக்காலக் கோசமான "தமிழ் மக்களின் இழந்த காணிகள்" என்பதுவும் காணப்படுகின்றது. கடந்த காலங்களில் உருவாகிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் வடக்குக் கிழக்கின் சில பிரதேசங்களில் தமிழ் மக்களின் விவசாயக் காணிகள் முஸ்லிம் மக்கள் சிலரின் உரிமைக்கு உள்ளாகியது. இந்தப் பொருளாதாரப் பரிமாற்றம் இன்று தமிழ் தீவிரவாதக் குழுக்களால் அரசியல் மயப்படுத்தப்பட்டு வருகின்றது. முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலுக்கும் காரணம் கற்பிக்கப்படுகின்றது. இவ்வகையான நிலைப்பாட்டில் தமிழ் பெரும்பான்மையைக் கொண்டு உருவாக்கப்படப் போகின்ற அதிகாரப் பரவலாக்கம் முஸ்லிம்களை அவர்களின் சட்ட ரீதியான பொருளாதார உரிமைக்கு அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது.

2. முஸ்லிம்களின் ஏனைய விவசாய மீன்பிடி நடவடிக்கைகள்:

கிழக்கிலும் வடக்கிலும் முஸ்லிம்கள் சேனைச் செய்கை, மாடு வளர்ப்பு, ஆழ்கடல், கரையோர, களப்பு மீன்பிடிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். முன்னர் குறிப்பிட்டது போல் முஸ்லிம் குடியிருப்புக்களுக்கும் தொழில் செய்யும் இடங்களுக்கும் இடையில் இட அமைவு ரீதியான வேறுபாடு ஏனைய பிரதேசங்களிலும் காணப்படுவதால் மேற்குறித்த நடவடிக்கைகளை இன்றைய யுத்த காலத்திலும் செய்ய முடியாத நிலையில் முஸ்லிம்கள் காணப்படுகின்றார்கள். உதாரணமாக காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை ஆகிய முஸ்லிம் கிராமங்களில் முஸ்லிம்களின் சேனைச் செய்கைகளும், மாடுவளர்ப்பும், மூதூர், கிண்ணியா ஆகிய முஸ்லிம் கிராமங்களில் உட்கடல், வெளிக்கடல் மீன்பிடியும் சேனைச்செய்கையும் அதுபோல முல்லைத்தீவுக் களப்புப் பிரதேச இறால்பிடியும் வவுனியாப் பிரதேசச் சேனைச் செய்கை, மன்னார் பிரதேச தென்னைச் செய்கை, மீன்பிடி ஆகியவையும் கடந்த காலத்திலும் இன்றும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது என்பது உண்மை. அதிகாரப் பரவலாக்கலில் தெளிவான வரைமுறைகள் இல்லாத நிலையில் முஸ்லிம் சிறுபான்மையினரின் மேற்குறித்த பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

3. முஸ்லிம்களின் வர்த்தகப் பொருளாதாரம்:

முஸ்லிம்கள் வரலாற்றுக் காரணங்களினால் வர்த்தகத்தில் இலங்கையில் விகிதாசார முக்கியத்துவம் கொண்டிருக்கின்றார்கள். வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற

முஸ்லிம்களும் குறிப்பான சில வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இம்முஸ்லிம்கள் ஈடுபடும் வர்த்தக நடவடிக்கைகளாக மொத்த சில்லறை வியாபாரம், போக்குவரத்து, அங்காடி வியாபாரம் ஆகியவை காணப்படுகின்றது.

வடக்குக் கிழக்கைச் சேர்ந்த காத்தான்குடி, கல்முனை, யாழ்ப்பாண நகர், மன்னார், வவுனியா முஸ்லிம்கள் வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் மொத்த வியாபாரத்தில் முன்னணி வகிக்கின்றார்கள். இவர்கள் நுகர்வு அத்துடன் உற்பத்திப் பொருட்களை இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலிருந்து வடக்குக்கிழக்கு கொண்டு வந்து விற்பனையில் ஈடுபடுவர். அதே போல் வடக்கு கிழக்கின் விவசாய ஏனைய உற்பத்திப் பொருட்களை சில்லறையாகப் பெற்று தலைநகருக்கும் ஏனைய முக்கிய நகரங்களுக்கும் மொத்தமாக ஏற்றுமதி செய்வர். வடக்கு-கிழக்கிலும் அதே வேளை இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் போக்குவரத்து நடவடிக்கையிலும் இம்முஸ்லிம்களின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கவைகளாகும். அதுமட்டுமன்றி முஸ்லிம்களின் வியாபார நுட்ப சிறப்புத் தன்மையால் வடக்குக் கிழக்கின் முஸ்லிம் அல்லாத கிராமங்களிலும், நகரங்களிலும் சில்லறை வியாபாரங்களிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மேற்குறித்த வர்த்தக நடவடிக்கைகளுக்கு சுதந்திரமான இடப்பெயர்வும் முதலிடுவதில் கட்டுப்பாடற்ற தன்மையும், முதலீட்டுக்கான உத்தரவாதங்களும் அவசியமாகும். வர்த்தக நடவடிக்கையில் முஸ்லிம்களின் இந்த முக்கியத்துவம் அதிகாரப் பரவலாக்கலில் எந்த விதத்தில் கரிசனைக்கு எடுத்துக் கொள்ளப்படப் போகின்றது என்பது முக்கியமான வினாவாகும். இதுவரையில் அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரப்பரவலாக்கல் தீர்மானங்கள் இவ்வம்சத்தை கருத்துக்கெடுக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

4. வடக்கு கிழக்குத் தமிழ் பெரும்பான்மை தன்னாதிக்கத்தில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு நம்பிக்கையற்ற தன்மை:

வடக்கு-கிழக்கில் தமிழ்-முஸ்லிம் இன உறவு கடந்த காலங்களில் ஐக்கியமாக இருந்து வந்தது. கடந்த 10 ஆண்டுகளில் இன உறவு வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது. இன்று இவ்விரு இன உறவுகளும் பரஸ்பர வெறுப்புணர்ச்சியின் அடிப்படையில் காணப்படுகின்றது. முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில் பின்வரும் காரணங்கள் தமிழ்-முஸ்லிம் உறவை சீரழித்தவையாகக் கொள்ளப்படுகின்றன.

1. ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்களின் நடவடிக்கைகள்: 1982 ஆம் ஆண்டில் இருந்து வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் சிறுபான்மையினரின் தனிமனித உரிமை, இனதனித்துவம், பொருளாதர அரசியல் சுதந்திரங்கள்

ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்களால் துச்சமாக மதிக்கப்பட்டு வருகின்றன.

2. முஸ்லிம்கள் தமிழ் தீவிரவாதக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்டமை: கடந்த சில காலங்களில் 1000க்கும் அதிகமான அப்பாவி முஸ்லிம்கள் தமிழ் ஆயுதக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இப்படுகொலையின் முதலாவது மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி முஸ்லிம் கிராமத்தில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் செய்யப்பட்ட படுகொலையாகும். இப்படுகொலையில் மொத்தமாக 122 அப்பாவி முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள். இப்படுகொலை காத்தான்குடி கிராமத்தில் 2 பள்ளிவாசலில் முஸ்லிம்கள் இரவு நேரத் தொழுகையில் ஈடுபட்டிருந்த போது நடத்தப்பட்டது.

இரண்டாவது பெரிய படுகொலை காத்தான்குடி படுகொலையின் இரண்டு வாரத்திற்கு பிறகு இதே மாவட்டத்தைச் சேர்ந்த ஏறாவூர் முஸ்லிம் கிராமத்தில் அதே ஆயுதக் குழுவால் நடாத்தப்பட்டது. இப்படுகொலையில் மொத்தமாக 164 அப்பாவி முஸ்லிம்கள் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டார்கள். இதைப் போல 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அழிஞ்சிப் பொத்தானையில் நடைபெற்ற முஸ்லிம் படுகொலையும் இதே ஆண்டு ஒகஸ்ட் மாதம் பள்ளித்திடல் என்ற முஸ்லிம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலையும் மொத்தமாக 300க்கும் அதிகமான முஸ்லிம் ஆண் பெண் சிறார்களைப் பலிகொண்டது.

3. **வடக்குக் கிழக்கிலிருந்து தமிழ் தீவிரவாத குழுக்களால் முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை:**
காத்தான்குடி படுகொலையைத் தொடர்ந்து பாதுகாப்பற்ற சிறிய முஸ்லிம் கிராமங்கள் ஆயுதக் குழுக்களால் நேரடியானதும், மறைமுகமானதுமான பயமுறுத்தல்களுக்கு உள்ளானமை. பாதுகாப்பைக் கருதி மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட முஸ்லிம் கிராம மக்களும் இடம்பெயர்ந்து பாதுகாப்பான பிரதேசங்களில் அகதியானார்கள்.

அதே நேரத்தில் 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இறுதிப் பகுதியில் வடமாகாணம் முழுவதும் வாழ்ந்த 75000த்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் ஆயுதமுனையில் பலவந்தமாக ஆயுதக் குழுக்களால் தமது வீடு வாசல் தமது சொத்து ஆகியவை இழந்த நிலையில் துரத்தி அடிக்கப்பட்டார்கள்.

ஆயுதக்குழுவின் கண்ணோட்டத்தில் இது வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் விகிதாசார ரீதியாக முஸ்லிம்களின் முக்கியத்துவத்தைக் குறைப்பதாகும். முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில் வடக்குக் கிழக்கில் "முஸ்லிம்களின் வாழ்விடம்" மறுக்கப்பட்டமை முன் வைக்கப்பட்ட தமிழ் பெரும்பான்மையைக் கொண்ட சமஷ்டி முறையில் சந்தேகத்தை உருவாக்கியிருக்கின்றது.

4. வடக்கு – கிழக்குக்கு மாகாணத்திற்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் அபிலாசைகள்:

கடந்த நூறு ஆண்டுகளில் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் இன தனித்துவம் தொடர்ச்சியாக வலுப்பெற்று வந்திருக்கின்றது. அரசியல் கண்ணோட்டத்தில் கட்சி அரசியல், பிரதேச அரசியல் ரீதியாக முஸ்லிம்கள் மத்தியில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் தேசிய மட்டத்தில் பொதுமைப்படுத்தப்பட்ட அரசியல் சிந்தனைகள் முஸ்லிம்கள் மத்தியில் காணப்படுகின்றன.

இலங்கையின் மொத்த முஸ்லிம் சனத்தொகையில் மூன்றிலொரு விகிதம் மட்டுமே வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழுகின்றனர். ஏனையவர்கள் சிங்கள மக்களோடு தெற்கில் பரந்து வாழ்கின்றார்கள். வடக்குக் கிழக்கைப் போல் புத்தளம், கண்டி, கொழும்பு, களுத்துறை போன்ற பிரதேசங்களிலும் முஸ்லிம் செறிவுகள் காணப்படுகின்றன.

இவ்வகையான சூழ்நிலையில் வடக்குக் கிழக்கு முஸ்லிம் இனப்பிரச்சினைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வடக்குக் கிழக்கு அல்லாத ஏனைய பிரதேசங்களில் வாழுகின்ற முஸ்லிம்களின் கரிசனைக்குரிய அம்சமாகக் காணப்படுகின்றது.

இக்கரிசனைக்குப் பின்வரும் உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

1. வடக்குக் கிழக்கிலிருந்து தமிழ் தீவிரவாதிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட ஏறக்குறைய ஒரு லட்சத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள் இன்று புத்தளம், அநுராதபுரம், குருநாகல், பொலன்னறுவை ஆகிய எல்லை மாவட்டங்களில் காணப்படுகின்ற முஸ்லிம் கிராமங்களில் அகதிகளாக வாழுகின்றார்கள். இது நேரடியாகவும், மறைமுகமாகவும் தெற்கில் வாழும் முஸ்லிம்களை பாதித்து வருகின்றது.

2. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கென ஒரு மாகாண சபை உருவாக்கப்பட வேண்டுமென்ற கருத்து அப்பிரதேச முஸ்லிம்களால் முன்வைக்கப்படுகின்றது. இக்கருத்து சாத்தியமானால் அது தெற்கில் சிங்கள–முஸ்லிம் இன ஐக்கியத்தை எதிர்காலத்தில் பாதிக்கக்கூடிய சாத்தியங்களைக் கொண்டது என்ற அச்சம் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் காணப்படுகின்றது.

3. இலங்கையின் முஸ்லிம் அரசியல் கடந்த காலத்தில் ஓரளவுக்கு தேசிய அரசியலோடு இணைந்து இனப்பிரச்சினைத் தீர்விலும் சிங்கள பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கும் ஒத்தக்கருத்தை முன்வைக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் தேசிய அரசியலில் முஸ்லிம்

அரசியல்வாதிகள் காணப்படுகின்றனர்.

5. வடக்குக் கிழக்கு சிபாரிசு செய்யப்படுகின்ற சுயஆட்சி முறையில் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:

எடுகோள் அடிப்படையில் வடக்குக் கிழக்கு சுயஆட்சிக்கு ஒப்பான அதிகாரப்பரவலாக்கம் ஒன்று கொடுக்கப்படுகின்றது என்று வைத்துக் கொள்வோம். அவ்வகையான ஒரு முயற்சி முஸ்லிம்களின் பின்வரும் அபிலாசைகளைப் பொறுத்தவரை எவ்வகையான சுமூகமான தீர்வொன்றை முன்வைக்கக்கூடியது என்பதை நோக்குவோம்.

1. வடக்குக் கிழக்கில் முஸ்லிம்களின் வாழ்விட உரிமையை எவ்வாறு இது உறுதிப்படுத்தும்.

ஒரு லட்சத்திற்கும் அதிகமான வடக்கு–கிழக்கு முஸ்லிம்கள் வடக்குக் கிழக்கிற்கு வெளியே வாழ்விடம் இழந்து அகதிகளாக வாழ்கின்றனர். குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கை கொண்ட மற்றுமொரு தொகுதி முஸ்லிம்கள் கிழக்கில் இடம்பெயர்ந்து காணப்படுகின்றார்கள். இவர்களின் இழந்த வாழ்விட உரிமையை மீண்டும் பெற்றுக்கொடுக்கக் கூடிய அரசியல் அமைப்பு ரீதியான பாதுகாப்பு என்ன? இதுவரையில் முன்வைக்கப்பட்ட இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய தீர்மானங்களில் இவை இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை.

2. முஸ்லிம்களின் பாதுகாப்பு:

இன்று கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கான பாதுகாப்பு அரசாங்கப் படைகளால் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் முஸ்லிம்களுக்கு எதிரான ஆயுதத் தாக்குதல்களும் படுகொலைகளும் ஆள்கடத்தலும் பொருளாதார சேதங்களும் தமிழ் தீவிரவாதக் குழுக்களால் தொடர்ச்சியாக செய்யப்பட்டு வருகின்றன. ஆயின் வடக்குக் கிழக்கு மாகாண அதிகாரப்பரவலாக்கம் எந்த அடிப்படையில் இம்மக்களின் பாதுகாப்பை பயமற்ற சுதந்திரமான பொருளாதார நடவடிக்கையை உறுதிப்படுத்த முடியும். ஆயின் முஸ்லிம்களின் பாதுகாப்பு சம்பந்தமான குறுங்கால, நீண்டகால அரசியல் அமைப்பு ரீதியான ஒழுங்குகள் அவசியம்.

3. பொருளாதாரம்:

வடக்குக் கிழக்கு முஸ்லிம்களின் பொருளாதார தனித்துவம் முன்னர் விளக்கப்பட்டது. ஆயின் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லிம்கள் தமது குடியிருப்புக்களில் இருந்து தொலைவில் காணப்படும் வயல் நிலங்களை, மீன்வளங்களை, வியாபார ஸ்தாபனங்களை, முதலீட்டை தொடர்ந்து சுதந்திரமாக செய்யக்கூடிய முறையிலான உறுதிப்பாடுகள் அரசியலமைப்பு ரீதியாகக் கொடுக்கப்பட முடியுமா? இருந்தால் அவை யாவை?

4. **முஸ்லிம்களின் பிரதேச கலாசார தனித்துவம்:**

வடக்குக் கிழக்கில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்கள் அப்பிரதேச முஸ்லிம்களின் இன கலாசார வளர்ச்சிக்கான மையங்களாகக் காணப்படுகின்றன. அதே நேரத்தில் சமய, இன, கலாசார உறவுகளை இம்மக்கள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களுடன் அத்துடன் சர்வதேச ரீதியாகவும் கொண்டிருக்கின்றார்கள். ஆயின் இந்த இன, சமய உறவுகள் அத்துடன் கல்வி கலாசார வளர்ச்சிகள் தனித்துவ ரீதியாக செல்லக் கூடியதான வழிமுறைகள் என்ன? அவ்வாறாயின் பிரதேச ரீதியான தேசிய ரீதியான இன, சமய, கலாசார வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய அரசியல் யாப்பு ரீதியான ஒழுங்குமுறைகள் செய்யப்படவேண்டும்.

5. **அரசியல் பிரதிநிதித்துவம்:**

இன்று முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அவர்களது அரசியல் அபிலாசைகளை பிரதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் வெளிக்கொணரக் கூடிய அளவு காணப்படுகின்றது. வடக்குக் கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி முறையில் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைவதோடு வடக்குக் கிழக்கில் அரசியல் பிரதிநிதித்துவம் குறைந்த ஒரு சிறுபான்மையினராகவே இருக்க வேண்டிய சூழ்நிலை எதிர்காலத்தில் காணப்படுகின்றது. ஆயின் வடக்குக் கிழக்கில் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் கூட்டி அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் பிரதேச மட்டத்தில் கருத்தில் கொள்ளக் கூடியதான ஒரு ஒழுங்குமுறை யாப்பு மாற்றத்தில் செய்யப்பட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

7. **முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகள்:**

அதிகாரப்பரவலாக்கத்தோடு தொடர்பாக ஏகமானதான கருத்து முஸ்லிம்கள் மத்தியில் இல்லை. இதற்குக் காரணம் வடக்கிலும் கிழக்கிலும் அத்துடன் இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் வாழும் முஸ்லிம்களின் புவியியல் பரம்பலும் அவர்களின் வேறுபட்ட பொருளாதார நலன்களும் காரணமாகும்.

இந்த அடிப்படையில் இலங்கையில் அதிகாரப்பரவலாக்கல் கண்ணோட்டங்களை முஸ்லிம்கள் மத்தியில் 3 தெளிவான கண்ணோட்டங்களை அடையாளப்படுத்தப் கூடியதாக இருக்கின்றது. அவையாவன:

1. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களின் அபிலாசைகள்.
2. வடக்குக் கிழக்கின் அம்பாறை அல்லாத மாவட்டங்களில் வாழுகின்ற முஸ்லிம்களின் அபிலாசைகள்.
3. வடக்குக் கிழக்கிற்கு வெளியே உள்ள முஸ்லிம்களின் அபிலாசைகள்.

அம்பாறை மாவட்டத்தில் எண்ணிக்கை, விகிதாசார ரீதியாக முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். ஓரளவு தெளிவான பிரதேசப் பரம்பலும் அதற்கு ஒத்த விவசாய பொருளாதாரமும் இம்மக்களுக்குக் காணப்படுகின்றது. ஆயின் நில அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட சுய சமூகப் பொருளாதார கலாசார வளர்ச்சியை தமக்கு ஏற்படுத்தலாம் என்ற கண்ணோக்குக் கொண்டவர்கள். அதனால் தமது இனப் பொருளாதாரப் பரம்பலுக்கு ஏற்ற ஒரு சுயாட்சி முறை தமக்கு வேண்டும் என்ற கருத்தை இம்மக்கள் முன்வைக்கின்றார்கள். இச்சிந்தனை ஓரளவுக்கு தமிழ் மக்களின் பிரதேச ரீதியான சுயாட்சி முறை என்ற கோரிக்கையால் உற்சாகப்படுத்தப்பட்டது என்றும் கூறலாம். இம் முஸ்லிம்களின் இந்த அரசியல் அபிலாசைகள் அம்பாறையை அடிப்படையாகக் கொண்ட முஸ்லிம் மாகாண சபை என்ற சிந்தனையை வளர்க்க உதவியது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூலமாக இக்கருத்து மேலும் வலுவடைந்தது.

வடக்குக் கிழக்கில் அம்பாறை அல்லாத ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் சில பிரதேசங்களில் செறிந்தும் அதிகமான பிரதேசங்களில் பரந்தும் வாழ்கின்றனர். வடக்குக் கிழக்கிற்கான அதிகாரப்பரவலாக்கலில் இப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களின் கரிசனை எல்லாம் அவர்களின் பாதுகாப்புடன் தொடர்புடையதாகும். இம்மக்களின் வாழ்விட உரிமை, பொருளாதார உரிமை, பிரதேசத்திற்குள்ளும் வெளியிலும் சுதந்திரமாகச் சென்று வரும் உரிமை ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடிய ஒரு நிச்சயமான பாதுகாப்பு முறையை ஒன்றில் அம்பாறையை அடிப்படையாகக் கொண்ட முஸ்லிம் மாகாண சபையோ அல்லது தமிழ் பெரும்பான்மையைக் கொண்ட அரசியல் யாப்போ அல்லது தேசிய அரசாங்கமோ உறுதிப்படுத்தினால் இம்மக்கள் திருப்தியடைவார்கள்.

வடக்குக் கிழக்கிற்கான அதிகாரப்பரவலாக்களில் வடக்குக் கிழக்கிற்கு வெளியேயுள்ள முஸ்லிம்களின் அபிலாசையானது வடக்குக் கிழக்கு அரசியல் ஸ்திரமற்ற தன்மை குறுங்காலத்திலோ அல்லது நீண்ட காலத்திலோ சிங்கள முஸ்லிம் உறவில் பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

8. முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளையும் உள்ளடக்கியதான அரசியல் அதிகாரப்பரவலாக்கம்:

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தேசிய ரீதியான தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டியது அவசியம். இத்தீர்வு குறுங்காலத்தில் மட்டுமல்லாமல் நீடித்திருக்க வேண்டும். சிங்கள–தமிழ்–முஸ்லிம்களின் பரஸ்பர நன்மையின் அடிப்படையில் சமரச ரீதியான தீர்வு ஒன்று அவசியம். மேற்குறித்த கண்ணோட்டத்தில் முஸ்லிம்களின் நலன்கள் பின்வரும் அரசியல் அதிகாரப்பரவலாக்கம்

முறையொன்றில் பாதுகாக்கப்படலாம்.

முறை ஒன்று:

வடக்கும் கிழக்கும் பிரிந்த சுயாட்சி முறை:

இம்முறையின் கீழ் ஆகக்குறைந்தது ஒரு மாகாணத்திலாவது முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்கதாகவும் பிரதேச ஆட்சியில் முஸ்லிம்கள் பங்கெடுக்கக்கூடிய வாய்ப்பும் காணப்படும்.

இம்முறையில் எல்லா இன மக்களும் திருப்திப்படவும் அத்துடன் முக்கியமாக கலந்து வாழவும் வழிவகுக்கும்.

முறை இரண்டு:

மேற்குறித்த முதலாம் முறை சாத்தியப்படாவிட்டால் வடக்குக் கிழக்கில் அரசியல் ரீதியாக இரண்டு பாதுகாப்புகளை முஸ்லிம் மக்களுக்குச் செய்யலாம்.

1. முஸ்லிம்களுக்கு என ஒரு மாகாண சபை அம்பாறையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட வேண்டும்.

2. வடக்குக் கிழக்கில் அம்பாறை அல்லாத பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய அரசியல் யாப்பு ரீதியான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

அம்பாறையை அடிப்படையாகக் கொண்ட முஸ்லிம் மாகாண சபையொன்று அம்மக்களின் சுயமான பொருளாதார சமூக வளர்ச்சிக்கு ஏற்ற வகையான வளங்களையும் பிரதேச பரப்பையும் கொண்டிருக்க வேண்டும். ஆனால் முஸ்லிம்களுக்கென இனரீதியாக உருவாக்கப்படுகின்ற இம்மாகாண சபை பல பாரதூரமான பின்விளைவுகளை எதிர்காலத்தில் இந்நாட்டிற்கு ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்களைக் கொண்டுள்ளது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

முறை மூன்று:

இந்நாட்டின் இனப்பிரச்சினையை தீர்த்து இந்நாடு சுபீட்சம் பெறுவதற்கு வடக்கும் கிழக்கும் இணைந்து தான் ஆகவேண்டும் என்ற ஒரு சூழ்நிலை தவிர்க்கப்பட முடியாது விட்டால் இச்சூழ்நிலையில் வடக்குக் கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம் சிறுபான்மையினருக்கென பின்வரும் அரசியல் அமைப்பு ரீதியான ஒழுங்குகள் செய்யப்படலாம்.

1. பிரதேச மட்டத்தில் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கக் கூடிய அரசியலமைப்பு அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும்.

2. சிறுபான்மையினரின் பிரதேசத் தனித்துவத்தைக் கருத்தில் கொண்டு அதிகரித்த பிரதிநிதித்துவம் மாகாண சட்டசபையில் கொடுக்கப்படலாம். அத்துடன் மேற்சபை ஒன்றும் சிறுபான்மையினர் நலனைப் பாதுகாக்கக் கூடிய முறையில் அமைக்கப்படலாம்.

3. சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குப் பிரதேச பாதுகாப்பு ஒழுங்கில் சிறுபான்மையினரின் அங்கத்துவம் இருக்க உறுதிப்படுத்தல்.

4. இன அடிப்படையில் மாவட்ட, உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கிராமசேவகர் பிரிவுகள் திரும்பவும் வரையறுக்கப்படலாம். அதிகாரப்பரவலாக்கம், பாதுகாப்பு கீழ்மட்ட நிர்வாகப் பிரிவுகளுக்கும் கொடுக்கப்படுவதன் மூலம் சிறுபான்மையினரின் அரசியல் பங்களிப்பும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படலாம்.

(இக்கட்டுரை 1993ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கனடா டொரிண்டோ நகரில் நடைபெற்ற " இலங்கையில் சமாதானம்" என்ற மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆங்கில மூலத்தின் தமிழாக்கம் ஆகும்.)

பின்னிணைப்பு

*எங்களது அரசியல் பிரச்சினைகளுக்கு உள்ள ஒரே தீர்வு

** எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கா

புராதன உள்ளூராட்சி முறையின்படி ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு ஆட்சி அலகாக கருதப்பட்டது. அரசனின் மூலம் பல்வேறு உள்ளூராட்சி தலைவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். நாடு பல்வேறு மாகாணங்களாக பல்வேறு கோட்டங்களாக உப கோட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. கிராம சபைகள் மிகவும் சிறிய ஆட்சி அலகாக இருந்தன. பொருளாதார, நிதி, வர்க்கப் பேதங்கள் எவ்வாறாக இருந்தாலும் ஒவ்வொரு குடும்பத் தலைவனைக் கொண்டே கிராம சபையானது இயங்கியது. முறைப்பாடுகள் கொடுக்க வேண்டிய இடத்து அரசனிடம் முறையிடக் கூடிய உரிமை இருந்தது. அப்படி இருந்தாலும் கிராம சபையின் தீர்மானமானது வேறுபடுவது இலகுவில் சாத்தியமாகக் கூடிய ஒன்றாக இருக்கவில்லை. பொதுவாக அரசனுக்கு சார்பான முறையில் முழு நாடும் ஓர் இலகுவான சமஷ்டி முறையின் கீழ் ஆட்சி நடைபெற்றமையைக் காணலாம்.

பிரித்தானியர் இலங்கைக்கு வந்தபின் பல அரசியல் திட்டங்களை முன்வைத்தனர். அந்த அரசியல் திட்டங்களினுள்ளேயே ஒரு சுதந்திர நிர்வாக நிறுவனத்தின் தோற்றத்தையும் காணக்கூடியதாக இருந்தது. இன்று அந்த அரசியல் திட்டத்தினை முன் வைத்தவர்களால் ஆளப்படுகின்ற ஒரு ஆட்சி முறையே காணப்படுகின்றது.

1915ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்வாறான அரசியல் திட்ட சீர்திருத்தங்களுக்கான போராட்டங்கள் நடைபெற்றதாக கூற முடியாது. கல்வி கற்ற உயர்ந்தோர் குழாமின் சார்பில் சட்ட நிரூபண சபையின் ஒரு அங்கத்தினராயிருந்த சேர். பொன்னம்பலம் இராமநாதன் பாரிய சேவையை மேற்கொண்டார்.

---

* The only solution for our Political Problem

* 1926ஆம் ஆண்டு ஜூலை 17ம் திகதி வெளியிடப்பட்ட The Morning Leader என்ற பத்திரிகையிலுள்ள முன்னால் பிரதமர் S. W. R. D. பண்டாரநாய்க்காவின் உரையின் சாரம்

சேர். பொன்னம்பலம் அருணாசலம் தேசிய காங்கிரசை ஆரம்பித்தார். அரசியல் அமைப்பு சீர்திருத்தத் திட்டத்தின் தந்தையாக திகழ்ந்தவர் இவரே. தேசியகாங்கிரசை ஆரம்பித்த பின், பிரித்தானிய முடியாட்சியின் கீழ் இயங்கும் சுயாட்சியே அனைத்து அங்கத்தவர்களினதும் நோக்கமாக இருந்தது. எனினும் சட்ட நிரூபண சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கைகளில் சில கூடியதே தவிர வேறு எதுவுமே ஈடேறவில்லை.

அரசியல் திட்ட சீர்திருத்தம் கோரியவர்கள் பிழையான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு இரு பகுதிகளாக பிரிந்து செல்ல வழிவகுக்கின்ற ரீதியிலான விவாதங்களில் 1926ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் திகதி வெளியிடப்பட்ட முன்னாள் பிரதமர் S.W.R.D. பண்டாரநாயக்காவின் உரை ஈடுபடுவதிலேயே தமது முழு சக்தியையும் செலவிட்டனர். இருக்கின்ற ஆட்சி முறையானது எமக்கு பொருத்தமானதா இல்லையா என்பது பற்றி (வினா எழுப்பவில்லை) சிந்திக்கவில்லை.

இங்கிலாந்தில் நடைமுறையில் இருந்த அரசியல் திட்டத்தினையே இங்கும் கொண்டு வரும் எண்ணத்தில் இருந்தனர். இதன் விளைவு எமக்கு பொருந்தாத ஒரு சட்ட நிரூபண சபை அமைந்ததேயாகும். உண்மையில் கூறப்போனால் இது மக்களுக்கு சிறிதும் பயன்படாத ஒரு அமைப்பாகவே இருந்தது. பல்வேறு தொடர்புகள் இடம்பெற்றது. என்றாலும் இவர்கள் வாக்காளர்களுக்கு எந்தவித பொறுப்பும் கூற கடமைப்படாத அங்கத்தவர்களாகவே விளங்கினர். பிரதேசம் பற்றிய இலக்குகளும் இனம் பற்றிய இலக்குகளும் இருந்தாலும்கூட இந்த அங்கத்துவ சபைக்கு அதிகாரம் இருக்கவில்லை. நிதித்துறை சம்பந்தமாக இவர்களுக்கு ஓரளவுக்கு நிர்வாக அதிகாரம் இருந்தாலும் அது எப்போதும் பெரிய அளவில் இருக்கவில்லை.

அதனால் ஏற்பட்டதென்னவென்றால் தமிழ் மக்களிடையே பிரிவு ஒன்று ஏற்பட்டது. கீழ் நாட்டு சிங்களவர்களுக்கும் மேல் மாகாண சிங்களவர்களுக்குமிடையே பிளவு ஏற்பட்டது. சிறுபான்மையினர் ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கினர். இந்த பேதங்களே ஆரம்ப காரணங்கள் என்ன என எண்ணாமலிருப்பது பிழையாகும். அதிகார விரும்பிகள், புகழ் விரும்பிகள் சிலரால் உருவாக்கப்பட்ட இந்த பிரிவினையானது அவர்கள் இறந்தபின் அநாதரவானது.

இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன் இவ்வாறான பிரிவுகள் இருக்கவில்லை. தமிழர், கீழ்நாட்டு சிங்களவர், மேல்நாட்டு சிங்களவர்களின் தலைமையில் ஆங்கிலேயர் அமர்ந்திருந்தமையால் இது உருவாக்கியதென்றும் இல்லை.

எனினும் உள்ளூரவே மறைந்திருந்த பிரிவினை தன்மையானது ஆங்கிலேயரின் நிர்வாகத்திற்கு உதவியாகப் பயன்படுத்தப்படத் தொடங்கியதிலிருந்து விஷ்வரூபமெடுக்கத் தொடங்கியது. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமிழர், கீழ்நாட்டு சிங்களவர், மேல்நாட்டு சிங்களவர் ஆகியோர் ஒன்றாக வாழ்ந்தாலும் அவர்கள் ஒரே பண்பாட்டு பாரம்பரியத்தில் ஒன்று கலக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை என்பது சரித்திரத்தை கற்பவர்களுக்கு தெரியும். அவரவர் அவர்களுக்கேயுரிய மொழி, பண்பாடு, பாரம்பரியம், மதம் ஆகியவற்றை பாதுகாத்தே இருந்தனர்.

எதிர்காலத்தில் எதிர்பார்க்கின்ற சீர்திருத்த நிர்வாக முறையின் கீழ் சட்ட நிரூபண அங்கத்தவர் குழுவில் இருந்து பிரதம மந்திரியும் மற்றும் மந்திரிகளும் தெரிவு செய்யப்படுவதாயிருந்தது. பல்வேறு இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் ஒரு குறிப்பிட்டதொகையை தெரிவு செய்வதற்கும் இணக்கப்பாடு இருந்தது. அவ்வாறே மந்திரி சபையிலும் விகிதாசார முறையின் கீழ் உறுப்பினர் தெரிவு செய்யப்பட வேண்டும் என பல்வேறு இனத்தினரும் கேட்டுக்கொண்டிருந்தனர்.

பல்வேறு இனங்களுக்கிடையேயான பகை உணர்வோடு கூடிய ஒரு ஆட்சி முறையினை இலங்கையிலன்றி உலகில் வேறு எங்கும் நான் காணவில்லை.

இனங்களுக்கிடையே பிரிவுகளும் பல்வேறு வேறுபாடுகளும் கொண்ட நாடுகளில் மத்திய அரசின் கீழ் இயங்கும் ஓர் அரசியல் திட்டத்தினை அறிமுகப்படுத்தினால் அங்கும் கஷ்டங்களும் பிரச்சினைகளும் தோன்றும்.

சமஷ்டி ஆட்சி முறையில் ஒவ்வொரு நிர்வாக அலகுக்கும் தங்களது கடமைகளை செய்து கொண்டு போவதற்கான பூரண நிர்வாக அதிகாரம் உண்டு. என்றாலும் அந்த நிர்வாக அலகுகள் எல்லாமே ஒன்றாக ஐக்கியத்தை ஏற்படுத்துகின்ற போது முழு நாட்டையும் பாதிக்கின்ற காரணங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு ஒரு சபையோ அன்றி இரு சபைகளோ இருக்கும். ஐக்கிய அமெரிக்க குடியரசுகளில் இயங்கும் அரசியல் திட்டம் அதுவே. அவுஸ்திரேலியா தென்னாபிரிக்கா, கனடா போன்ற சமஷ்டி அமைப்பு நாடுகளில் காணப்படுவதும் இதுவே.

சுவிட்சலாந்து நாட்டிலிருந்து இலங்கைக்கு சிறந்த ஒரு உதாரணம் கிடைக்கப்பெற்றிருக்கிறது. அது ஒரு சிறிய நாடு என்றாலும் மூன்று இன மக்கள் அங்கு வாழ்கின்றனர். அவர்கள் பிரான்ஸ், ஜெர்மனியர், இத்தாலியினர் என்போராவார். என்றாலும் சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் மிகவும் சிறப்பான ஒரு ஆட்சிமுறை அங்கு நிலவுகிறது.

ஒவ்வொரு நிர்வாக அலகும் தங்களுக்கே உரித்தான முறையில் தங்களது நிர்வாகத்தினை நடத்திச் செல்கின்றனர். என்றாலும் கருத்து முரண்பாடுகள் குறைவாகக் காணப்படுகின்ற வெளிவிவகாரம் வர்த்தகம், பாதுகாப்பு போன்ற துறைகள் மத்திய அரசு சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இலங்கையின் எல்லா மாகாணங்களுக்கும் பூரணமான சுய நிர்வாக அதிகாரம் (சுயாட்சி அல்லது சமஷ்டி அதிகாரம்) இருக்க வேண்டும். நாட்டின் விஷேட (பொது வருமானம் சம்பந்தமான) நடவடிக்கைகளுக்காக ஒன்று அல்லது இரண்டு நிறுவனங்கள் இருத்தல் வேண்டும். இந்த திட்டத்திற்கு ஆயிரத்தில் ஒருவர் எதிர்ப்பைக் காட்டக் கூடும். இந்த எதிர்ப்பும் வென்றெடுக்கப்பட்ட பின் ஒரே தீர்வு ஏதோ ஒருவகையில் சமஷ்டி முறையான ஆட்சி முறையே என்பதனை நான் புரிந்து கொண்டுள்ளேன். மிகவும் சிறுபான்மையினர் சம்பந்தமாக தான் கருத்துக்களை தெரிவிக்கவில்லை. அவ்வாறான மிகவும் சிறுபான்மை இனக் குழுக்கள் சம்பந்தமாக விஷேட பிரதிநிதித்துவத்தைக் கொண்ட தற்காலிக வேலைத்திட்டம் ஒன்றினை இங்கு மேற்கொள்ள முடியும். ஓர் இன மக்கள் தொகுதி இன்னொரு இன மக்கள் தொகுதியின் மீது ஆதிக்கம் செலுத்தும் என்ற பய உணர்வு இருக்கும்வரை அந்த தற்காலிக வேலைத்திட்டம் நடைமுறையில் இருக்கும். இந்த நாட்டின் பிரதான இனங்கள் மூன்றாகும். அவை மேல்நாட்டு சிங்களவர், கீழ்நாட்டு சிங்களவர், தமிழர் ஆகியனவாகும். எல்லோரையும் திருப்திபடுத்துகின்ற தீர்வு ஒன்றினைக் காண்பது கடினம். உண்மையில் கூறப்போனால் அதற்கான ஆட்சிமுறை சமஷ்டியே பிரச்சினைகள் இருப்பதனை எல்லோரும் ஏற்றுக் கொண்டால் நான் மகிழ்ச்சி அடைவேன். இதனைவிட நல்ல தீர்வுத் திட்டம் இருந்தால் யாராகிலும் அதனை முன் வைப்பதனை நான் எதிர்பார்க்கிறேன்.

மதம் சம்பந்தமான பிரச்சினையை அரசியல் திட்டத்தில் முன்வைக்க வேண்டிய பிரச்சினை இல்லை. நிதி சம்பந்தமான சரத்துக்கள் மிக முக்கியமாக அம்சங்களாகும். கல்வி சம்பந்தமான பிரச்சினைகளும் அவ்வாறே. பொது நிதியானது தேவையான மாகாணங்களுக்கிடையே பிரித்தெடுத்துக் கொள்ள முடியும். விடயகருத்து பேதங்களுக்கு உரமிடுகின்ற காரணங்கள் நிரம்ப இருக்கின்றன. ஒரு குறிப்பிட்டளவேனும் சுயமான நிர்வாகத்தினை விரும்பாத இனமாக இருந்தால் அது இனம் என்ற பெயரைப் பெறுவதற்கு அறுகதையற்றது. அவ்வாறான இனங்கள் உலகில் துடைத்தெரியப்படக் கூடியவையே.

DEVOLUTION PROPOSAL OF SRI LANKA
IDEAS AND VIEWS

(Publication in Tamil)

Authors of the Articles

1. M. O. A. De Zoysa — B. A. (Hons). Sri Lanka M. A. (University of Tasmania) Head/Dept. of Political Science University of Peradeniya.

2. Y. R. Amarasinghe — B. A. (Cey)., B. Phil (York)., Ph. D. (Lond) Associate Professor. Visiting Professor in Politics at Hobart and William Smith Colleges, Newyork U. S. A.

3. Ambalavanar Sivarajah — B. A. (Hon) Cey. M. A. (New Brunswick) Ph. D. (Cey). Associate Professor in Political Science. Fulbright Senior Research Fellow 92/93.

4. A. J. Wilson — Professor - New Brunswick University, Fredericton, Canada.

5. A. M. Nawaratna Bandara — B. A., M. A. (Peradeniya) D. Phil. (York) Management of Ethnic Secessionist conflict. The big neighbour syndrome. (Author of the Book). Senior Lecturer Dept. of Political Science University of Peradeniya.

6. Sunimasiri Liyanage — Senior Lecturer Dept. of Economic University of Peradeniya.

7. Ananda Welihena — B. A. (Hons). M. A. (I. R.). Lecturer - Dept. of Political Science University of Peradeniya.

8. R. Nithyanandan — B. A. (Hons). Asst. Lecturer - Dept. of Political Science University of Peradeniya.

9. S. H. Hasbullah — B. A. (Hons) Cey., M. A. Peradeniya. Ph. D. British Colombia. Senior Lecturer Dept. of Geography University of Peradeniya.

Editor R. Nithyanandan

Publication

Higher Education Centre
239, Trincomalee Street,
KANDY.
Sri Lanka